# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 146 சித்திரை 08 ஆம் நாள் சனிக்கிழமை 21 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## கிராம அலுவலர் தெரிவு முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஏப்.21
கிராம அலுவலர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
2015ஆம் ஆண்டில் விண்ணப்பம் கோரப்பட்டு, 2016இல் எழுத்துப் பரீட்சையும், 2017இல் நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டு அவற்றின் அடிப்படையில் அலுவலர் நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.
வடக்கில் 267 » 06

அமைச்சரவை பதவியேற்றதும்

## புதிய அரசமைப்பு உருவாக்கம் ஆரம்பம்

(விரிவு பக். 7)

கொழும்பு அரசியல் மோதல்

## ரணிலை மீண்டும் சந்தித்தார் சந்திரிகா

(விரிவு பக். 9)

## யாழ். பல்கலை பேரவை: சிங்கள உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவைக்கு 15 பேர் கொண்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது பற்றிய அறிவிப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொலைநகல் மூலமாக அறிவித்தது என்று யாழ்ப்பா » 25

## புத்தளம் வாசியைத் தாக்கி 10 லட்சம் ரூபா கொள்ளை!

முல்லைத்தீவு, சாலையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப்.21
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சாலை கரையோரக் கிராமத்தில் வர்த்தகர் ஒருவரைத் தாக்கிவிட்டு 10 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடலுணவு கொள்வனவுக்காக வர்த்த » 06

## மீனவர்கள் இடையே சாலையில் மோதல்

மூவர் சிகிச்சையில்

முல்லைத்தீவு, ஏப்.21
முல்லைத்தீவு, சாலைப் பகுதியில் மீனவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 3 பேர் காயங்களுக்குள்ளாகினர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. » 23

எதிர்க் கட்சித் தலைவர் பதவியில் இருந்து

# சம்பந்தனை விரட்டியடிக்க கூட்டு எதிரணி முழு முயற்சி

அவரைத் தானாக விலக வைப்பதே திட்டம் எனவும் அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 21
எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனை அந்தப் பதவியில் இருந்து விரட்டியடிக்கத் தீவிரமாக முயற்சிக்கப் போவதாக கூட்டு எதிரணி தெரிவித்திருக்கிறது. பதவியில் இருந்து சம்பந்தன் தானாகவே விலகிச் செல்வதற்கான அழுத்தங்களை அனைத்து வழிகளிலும் கொடுப்பதற்கு தமது தரப்பு முடிவு செய்துள்ளதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.
"எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதில்அர்த்தமில்லை. மாறாக அவராகவே பதவி விலகுவதே சிறந்ததாக அமையும் . ஆனால் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்காவிட்டால் சபாநாயக » 06

## நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் நாட்டுக்கு ஆபத்து

முன்னாள் நீதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 21
நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறைமையின் கீழ் அரசதலைவரின் அதிகாரம் இன்னும் பலப்படுத்தப்பட வேண்டுமே அன்றி அதனை இல்லாமல் செய்யக் கூடாது. அவ்வாறு குறைப்பது நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லும். இவ்வாறு முன் » 06

## சம்பந்தனை ஐ.தே.கட்சி முழுமையாகப் பாதுகாக்கும்

ரவி கருணநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஏப். 21
எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி அவரை முழுமையாகப் பாதுகாக்கும். இந்தத் தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைப் பாதுகாப்பதில் எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து வினவியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: » 06

## நுங்கு விற்பவர் நல்லூரில் கைது

ஹெரோயின் வைத்திருந்தாரா? » 25

## மைத்திரியே திரும்பிப் போ

லண்டனில் முழக்கம்

(விரிவு பக். 8)

## கேப்பாபிலவு தேக்கங்காட்டில் தீ விபத்து

முல்லைத்தீவு, ஏப். 21
கேப்பாபிலவு படைமுகாம் வாயிலை அண்மித்த தேக்கங்காட்டுப் பகுதியில் நேற்று மாலை தீப் பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் சுமார் 45 ஏக்கர் தேக்கங்காடு எரிந்திருக்கக்கூடும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். தீ பற்றியதையடுத்து அங்கு நிலைகொண்டுள்ள 59 ஆவது படைப்பிரி » 23

## மைத்திரி நாடு திரும்பியவுடன் கூடுகின்றது சு.க. மையக் குழு

அரசியல் நிலவரத்தை ஆராய்ந்து முக்கிய முடிவுகளை எடுக்கும்

கொழும்பு. ஏப். 21
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய கையோடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம் » 06

## ஆட்சிக்கு ஈபிடிபியிடம் ஆதரவு கேட்டது கோட்பாட்டு அரசியலே தவிர 'டீல்' அல்ல

ரெலோ செயலாளர் நேற்றுப் புது விளக்கம்

யாழ்ப்பாணம். ஏப்.21
உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிய இடங்களில் அது ஆட்சி அமைக்க ஆதரவு தருமாறு ஈபிடிபியிடம் கோரியமை "கோட்பாட்டு அரசியலே" தவிர அது கட்சிகளுக்கு இடையிலான "டீல்" அல்ல.
இவ்வாறு தெரிவித்தார் ரெலோ கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தா. "டீல் பேசுகின்ற அரசியல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அகராதியி » 06

## காணாமற்போனோரின் உறவுகளை 12ஆம் திகதி ஓ.எம்.பி. சந்திக்கும்

முதல் களப்பயணம் மன்னாருக்கு

கொழும்பு, ஏப். 21
காணாமற்போனோர் தொடர்பான பணியகத்தின் (ஓ.எம்.பி.) உறுப்பினர்கள் மே மாதம் 12 ஆம் திகதி மன்னார் மாவட்டத்துக்குக் களப்பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.
காணாமற்போனவர்களின் உறவினர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதும், பிராந்திய அலுவலகம் அமைப்பது சம்பந்தமாக ஆராய்வதுமே பயணத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கான பயண நிகழ்ச்சி நிரல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக காணாமற்போ » 06

## ஆதாரங்கள் இருக்குமானால் வெளியிடுங்கள் பார்க்கலாம்

ஈபிடிபிக்கு சிறிகாந்தா சவால்

யாழ்ப்பாணம், ஏப். 21
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆட்சியமைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈபிடிபியின் ஆதரவைக் கோரியதற்கு ஆதாரம் இருந்தால் அதனை வெளியிடுங்கள் பார்ப்போம் என்று சவால் விடுத்தார் ரெலோ கட்சி » 06

## ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயம்

இல்லையேல் தண்டம்

கொழும்பு, ஏப். 21
பொது மக்களின் பயன் கருதி முச்சக்கர வண்டிகளுக்குக் கட்டண அறவீட்டு மீற்றர் இயந் » 06

# யானையின் உடல் மீட்பு



வவுனியா.ஏப்.21

வவுனியா பூவரசங்குளம் செங்கல்படை கிராமத்திலுள்ள காட்டுப்பகுதியில் உயிரிழந்த யானை ஒன்றின் உடல் மீட்கப்பட்டது.

இந்த யானையின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு பகுதியில் துர் நாற்றம் வீசியதையடுத்து கிராமத்து மக்களால் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸாரும் வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் இணைந்து யானையின் உடலை மீட்டனர்.

வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவ அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் சடலம் அந்த இடத்திலிருந்து அகற்றப் படவுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யானை எவ்வாறு இறந்தது என்ற விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸாரும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

(ந,ரி4,110)

# சுதாகரின் பிள்ளைகளுக்கு வடக்கு ஆளுநர் நிதி உதவி



யாழ்ப்பாணம்.ஏப்.21

அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகளை வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே சந்தித்து நிதி உதவி வழங்கியுள்ளார். அரசியல் கைதியாக இருந்து தற்போது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் இருவரும் தமது தந்தைக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு அரசதலைவரை நேரில் சந்தித்து கோரியிருந்தனர்.

ஆனந்தசுதாகரனைப் புத்தாண்டுக்கு முன்னர் விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக அரசதலைவர் உறுதியளித்திருந்தார். எனினும் ஆனந்தசுதாகரன் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

(ந,ரி4)

# வடக்கு மீன்பிடித்துறையின் அபிவிருத்திக்கு ரூ.158 மில்.

## பிரதேச செயலகங்கள் ஊடாக 4 ஆண்டுத் திட்டம்

யாழ்ப்பாணம்.ஏப்.20

**வடக்கு மாகாணத்தில் 158 மில்லியன் ரூபாவில் மீன்பிடித் துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்தத் திட்டங்கள் பிரதேச செயலகங்களின் ஊடாக கிராம மட்டத்தில் நான்கு ஆண்டு செயற்றிட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளன.**

இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கியின் சமூக அபிவிருத்தி செயற்திட்ட சிறப்பு அதிகாரி சுதர்சன அனோயன் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் மீன்பிடி அமைச்சால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கருத்துக் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மீன்பிடி அமைச்சால் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. உட்கட்டுமான வசதிகள், பண்ணை வளர்ப்பு பயிற்சி நெறிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள், கடன் திட்டங்கள், உற்பத்திகளை சந்தைப் படுத்தல் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் இதில் முன்னெடுக்கப்படவுள்ளன.

உட்கட்டுமான வசதிகளாக யாழ்ப்பாணம் பருத்தித்துறை துறைமுகம், மற்றும் மன்னார் பேசாலை துறைமுகம் சீரமைக்கப்படவுள்ளன. மூன்று மாவட்டங்களில் கடலில் நங்கூரமிடக்கூடிய கட்டட தொகுதி, மற்றும் 4 மாவட்டங்களில் மீன்பிடி சார்ந்த கரையோரப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் அட்டை ,மன்னார் மாவட்டத்தில் நண்டு வளர்ப்பு தொடர்பான பண்ணை என்பன அமைக்கப்படவுள்ளன. கிளிநொச்சி பள்ளிக் குடாவில் கடல் உற்பத்தி சார்ந்த ஆய்வு கூடம், மன்னார் மாவட்டத்தில் கடல் உணவு உற்பத்தி சார் பயிற்சி நிலையம் இந்த செயற்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளது.

கடல் உணவு சார்ந்த உற்பத்திகள் மற்றும் தொழில் பயிற்சிகள் மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் 54 கிராமங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 30 கிராமங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 31 கிராமங்களிலும், மன்னார் மாவட்டத்தில் 22 கிராமங்களிலுமாக வடக்கு மாகாணத்தில் 137 கிராமங்களில் பயிற்சிகள் , அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தனியான அலுவலகம் 21 அதிகாரிகளை கொண்டு செயற்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனியான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு செயற்திட்டம் நடைபெறும்.

எமது இந்த செயற்திட்டத்தின் மூலம் பெண்களின் வாழ்வாதாரமும் உயர்த்தப்படவுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் 10 பெண்கள் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க உள்ளோம். மொத்தமாக 100 கிராமங்களில் 1000 பெண் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கவுள்ளோம். மீன்பிடி சார்ந்த உற்பத்திகளை அதிகரித்தல், ஏற்றுமதி செய்தல், பண்ணை வளர்ப்பு,கருவாடு உற்பத்தி , காளான் உற்பத்தி , சங்கு சிப்பியாலான அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தி, போன்ற பல்வேறு துறைகளுக்கு இவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வதாரத்தை உயர்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டத்தில் 80 வீதமான பெண்கள் உள்வாங்கப்படவுள்ளனர். பயனாளிகள் இனம் காணப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள்,முன்மொழிவு எழுதும் முறை அவர்களின் தேவை என்பன கண்டறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.இதற்கு அனைத்து துறைசார்ந்தவர்களின் ஒத்துழைப்பும் வேண்டும் என்றார்.

(ந,ரி4,7)



# டிப்பர்-சிற்றூர்தி மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு.ஏப்.21

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை வீதியில் கோழி ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனமும் சிற்றூர்ந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது கட்டுப்பாட்டை இழந்த சிற்றூர்ந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சிற்றூர்ந்துச் சாரதி உயிரிழந்துள்ளதுடன் டிப்பரில் பயணம் செய்த மூவரும் சிற்றூர்ந்தியில் பயணம் செய்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான மோலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4,46)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

மதவச்சி.ஏப்.21

மதவச்சி கரம்பன்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். சிற்றூந்தும் உந்துருளியும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது. மதவாச்சி கல்கதந்தகமத்தைச் சேர்ந்த 25, 21 வயதுடைய கணவன் மனைவியே உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சிற்றூர்ந்தின் சாரதி காயமடைந்த நிலையில் மதவச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)



# பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 30 பேர் கைது

கொழும்பு.ஏப்.21

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகளில் ஆயுதங்கள், மற்றும் போதைப் பொருள்களுடன் 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

திட்டமிட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த வருடத்தில் இதுவரையிலான காலப்பகுதிக்குள் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 5 கைக்குண்டுகள், இரு ரீ56 ரக துப்பாக்கிகள், ரீ56 ரக துப்பாக்கி மெகசின் ஒன்று, ரீ56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 151 தோட்டாக்கள், 7 வாள்கள், ஒரு கைத்துப்பாக்கி, இரு கைத்துப்பாக்கி மெகசின்கள், 9 ரிவோல்வர்கள் மற்றும் ரிவோல்வர் கைத்துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 185 தோட்டாக்கள், 810 வேறு தோட்டாக்கள், 56 கிராம் ஹெரோயின், 111 கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டன. (ந,ரி4)

# டெங்கு நோயாளர்கள் திடீர் அதிகரிப்பு சிவப்பு அறிவித்தலுக்கு தயாராகும் அரசு

கொழும்பு, ஏப். 21

நாடு முழுவதும் இதுவரையில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு பரவுவதற்கான வாய்ப்புகள் காணப்படும் பிரதேசங்களில் சிவப்பு அறிவித்தலை அமுல்படுத்தவுள்ளதாகவும் டெங்கு கட்டுப்பாட்டுபிரிவின் ஊடகபேச்சாளர் மருத்துவர் பிறசீலா சமரவீர தெரிவித்தார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில்,

தற்போது நாட்டில் மழைக் காலநிலை நிலவிவருகிறது. இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருகின்றது. டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிகையில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், கம்பஹா, களுத்துறை, கம்பஹா, குருணாகல், மட்டக்களப்பு மற்றும் கல்முனை போன்ற மாவட்டங்களிலும் டெங்கு விரைவாக அதிகரித்து வருகின்றது. இதுவரையில் நாடுமுழுவதும் 15 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் குறுகிய நான்கு மாதகாலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது - என்றார். (4,31)



## நலன்புரி நிலைய மக்களுக்கு உதவிப் பொருள்கள் கையளிப்பு

உடுப்பிட்டி,ஏப்.21

இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு தங்கவேலாயுதம் அறக்கட்டளைநிறுவனத்தால் நேற்று உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

உடுப்பிட்டி , மல்லந்தறை, சந்தணத்தறையில் இடம்பெயர்ந்து தற்காலிக நலன்புரி நிலையத்தில் வசிக்கும் 17 குடும்பங்களுக்கே 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

கரவெட்டிப் பிரதேச சபைத் தவிசாளரும்,அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநருமான த.ஐங்கரன் தனது சொந்த நிதியிலிருந்து இந்த உதவிகளை வழங்கினார். தொடர்ந்து 3 மாதங்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

உடுப்பிட்டிப் பகுதியில் தனிநபர் காணியில் இம் மக்கள் குடியிருந்தனர். காணி உரிமையாளரால் வழக்குப் போடப்பட்டு நீதிமன்ற உத்தரவில் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இம் மக்களின் காணிகள் பலாலி வானூர்தித் தளப் பகுதியில் அமையப் பெற்றிருப்பதால் அதற்கு மாற்றீட்டுக் காணியாக உடுப்பிட்டிப் பகுதியில் காணிகள் வழங்கப்பட்டன. எனினும் அக் காணிகளில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்த நிலையிலேயே இம் மக்கள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ந.ரி2,26)

பொலிஸாரின் கண்காணிப்பிருந்தும்

# வலி.வடக்கில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

பிரதேச மக்கள் விசனம்



மரக்குற்றிகளுடன் பிடிபட்ட வாகனங்கள்

வலிவடக்கு,ஏப்.21

**வலிவடக்குப் பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி பெரும் அளவிலான மரக்குற்றிகளைஏற்றிச்சென்றமூவர்நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.மரக்குற்றிகளும் அவற்றை ஏற்றப் பயன்படுத்திய மூன்று உழவு இயந்திரங்களும் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

வலி.வடக்குமயிலிட்டிப்பகுதியிலேயேஇந்த சம்பவம் இடம்பெற்றது.

மக்களின் மீள் குடியேற்றத்துக்காக அண்மையில் விடுவிக்கப்பட்ட இப் பகுதிகளில் இவ்வாறானகுற்றச்செயல்கள்தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றனஎனத்தெரிவிக்கப்படுகிறது.எமது காணிகளைப் பார்ப்பதற்கு இங்கு வரும் மக்களை விட சட்ட விரோதமான முறைகளில் பொருள்களைச் சூறையாடுபவர்களே அதிகம் என்றும் அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அனுமதிப் பத்திரம் இன்றி மரக்குற்றிகள் ஏற்றுபவர்கள்ஒருபுறமிருக்க, இரும்புகளை இன்னுமொரு கும்பல் அள்ளிச் செல்கிறது. இப் பகுதிகளில் படையினரால் வளர்க்கப்படும் மாடுகள் எமது காணிகளுக்குள் வைத்து வெட்டப்பட்டு, அதன் கழிவுகள் காணிகளிலேயே வீசப்படுகிறன. இவ்வாறான குற்றச் செயல்களைத் தடுப்பதற்காகப் பெருமளவிலான பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இரவும் , பகலும் உள் பாதைகள் மற்றும் பற்றைகளைப் பயன்படுத்தி தொடர்ந்தும் குற்றச்செயல்கள் இடம்பெற்றுவருகின்றன. என்று அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் சட்டவிரோதமான இச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காகவே கண்காணிப்பு நடவடிக்கையில் பொலிஸாரை ஈடுபடுத்துயுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந.ரி2,26)

## போதை மாத்திரைகளுடன் நேற்று இருவர் கைது

கொழும்பு,ஏப்.21

போதை மாத்திரைகளை வைத்திருந்த இருவர் இராணி சந்தியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கெக்கிராவை மற்றும் பதுளைப் பகுதியைச் சேர்ந்த 27 மற்றும் 33 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து, 600 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இராணி சந்தியில் தற்காலிக கடை ஒன்றில் ஆடை தைப்புத் தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலதிக விசாரணை களை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி2)

## தீயில் எரிந்த பெண் சாவு

கொழும்பு,ஏப்.21

தீப்பற்றி எரிந்து சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கொக்கட்டிச்சோலைக் கிராமத்தைச் சேர்ந்த துரையப்பா பிறேதா (வயது 21) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே நேற்று முன்தினம் சாவடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை இரவு தீப்பற்றி எரிந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்ட போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந.ரி2)

## தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

நுவரெலியா,ஏப்.21

அக்கரப்பத்தனை, வெவர்லி தேயிலை தொழிற்சாலையில்பணியாற்றும் தொழிலாளர்கள்,நேற்றுப்,பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன், தொழில்மேற்பார்வையாளர் ஒருவரை விலக் கக் கோரியும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்டத் தொழிற்சாலைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், வெவர்லி தோட்டத் தொழிற்சாலையில் பணியாற்றும்75க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, கோசங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். தொழிற்சாலையில், தலைமைத் தொழில் மேற்பார்வையாளராகப் பணியாற்றும் ஒருவர், தொழிற்சாலையில்பணியாற்றும் பெண்களைத் தகாத வார்த்தைகளால் திட்டுகிறார். தொழிலாளர்களின் அடிப்படைத் தொழில் உரிமைகளை வழங்காது, வேலையை மாத்திரம் பெற்றுக் கொள்கிறார். இவரைத் தோட்ட அதிகாரி உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்தெரிவித்தனர்.அங்கு வந்த தோட்ட அதிகாரி தொழிலாளர்களின் பிரச்சினை மற்றும் கோரிக்கைகளை கேட்டறிந்து, விசாரணையின் பின் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

தொழிற்சாலையில்பணியாற்றும், தொழிலாளர்களின்அடிப்படைச்சுகாதார வசதிகள்மற்றும்ஏனைய உரிமைகளை செய்துதர அவர்உத்தரவுவழங்கியதையடுத்துப், ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு, தொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள், தம் கோரிக்கை பற்றி, நடவடிக்கை எடுக்காத பட்சத்தில், மீண்டும் போராடுவோம் எனவும் தெரிவித்தனர். (ந.ரி2)

## மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைது

ஹற்றன்,ஏப்.21

அனுமதிப் பத்திரம் இன்றி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒருதொகை மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.சந்தேகநபரிடமிருந்து 175 கிலோ மாட்டிறைச்சியுடன், மாடு வெட்டப் பயன்படுத்திய ஆயுதங்களும் மீட்கப்பட்டன. இச் சம்பவம் நேற்று பொகவந்தலாவ, பொகவானை தோட்டப்பகுதி கொங்ரீட் பாலத்திற்கு அருகாமையில் இடம்பெற்றது.தலவாக்கலை சிறப்பு அதிரடிப் படையினரால் மேற்கொள்ளபட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யபட்டதாக சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கைது செய்யபட்ட சந்தேக நபரையும் கைப்பற்றிய மாட்டு இறைச்சியும் பொகவந்தலாவப் பொலிஸாரிடம் ஒப்படைக்கபட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந.ரி2)




Leading Company in Jaffna needs Qualified, skilled & experienced IT Executive.

**IT EXECUTIVE** (Male/ Female)

Requirements:

- HND in Computer Software Engineering or Equal qualification
- Candidate should be dynamic with vast experience in the relevant fields.

Experienced & Suitable qualified candidates are invited to sent their application with Photo to under given e-mail address.

**e-mail: jaffnavacancy@gmail.com**

## காணாமல்போனவர் சடலமாக மீட்பு

மாத்தறை,ஏப்.21

கிரிவென்தெனிய பிரதேசத்தில் தேயிலைத் தோட்டத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த ஊறுபொக்க வெளதென்னப் பகுதியைச் சேர்ந்த வர்த்தமானகே ஜோன் சிங்க (வயது-82) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறிக்கச் சென்றவர்கள் சடலம் கிடப்பதை அறிந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரணைகளை ஊறுபொக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந.ரி2)

## மத்திய பொருளாதார மையம் மட்டுவிலில்

தென்மராட்சி, ஏப்.21
யாழ்.மாவட்டத்தின் மத்தியபொருளாதாரமையம் தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் வடக்கில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
மாவட்டச் செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிவிப்பையடுத்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கஅலுவலகத்தினால் 100 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மத்திய பொருளாதார மையமானது மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களையும் இணைக்கக்கூடிய இடமாக மட்டுவில் வண்ணாத்திப் பாலத்தை அண்டியுள்ளஅரசகாணியில் நிர்மாணிக்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## அதிபர் பதவிக்கு வெற்றிடம்


சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில்வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்குத் தகைமையுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மூன்று வருட சேவையைப்பூர்த்திசெய்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தினை வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் மே 2 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (9)

# யாழ். நகரப் பகுதியில் கலாசார சீர்கேடுகள்

### தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 21**
**யாழ்ப்பாண மாநகரசபைக்கு உட்பட்ட யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையத்துக்கு அருகில் கலாசாரச் சீர்கேடான பலவிடயங்கள்இடம்பெறுகின்றன.எனவேஇந்தச்செயற்பாடுகளை உரிய தரப்பினர் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நகருக்கு வந்து செல்லும் பலரும் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுவரும்மருத்துவபீட விசேடசிகிச்சைப்பிரிவுக்கு சொந்தமான கட்டடத்துக்கு முன்பாக உள்ள கடைத் தொகுதிக்குப் பின்பாகவே இவ்வாறான சீர்கேடுகள் அரங்கேறுகின்றன. அந்தப் பிரதேசத்தில் மது அருந்துதல், புகைத்தல், போதைப் பொருள்களின் பாவனை போன்ற சீர்கேடான விடயங்கள்பலவும் இடம்பெறுகின்றன. அத்துடன் மதுபானப் போத்தல்களும், சிகரட் பகுதிகளும், பாக்கு துப்பல்களுமாகஅந்தஇடம்அசிங்கப்படுத்தப்பட்டுள்ளன.
அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்கடமையிலிருந்தும்இவ்வாறானநடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இரவு நேரங்களிலே அங்கு இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகிறது. எனவே இந்தச் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப் பட்டு நகர்பாதுகாக்கப்படவேண்டும். இந்தச் செயற்பாடுகள் மேலும் அங்கு இடம்பெறுமானால் பல விளைவுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. அதிகாரிகள் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்-என்றனர்.





“இவை அனைத்தும் சட்ட விரோதமாகவே இடம்பெறுகின்றன. மாநகர சபைக்குட்பட்ட பிரதேசமாக இருப்பினும் நாம் இந்த இடங்களுக்கு அனுமதி வழங்கவில்லை. இது தொடர்பாக எமக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. உரியநடவடிக்கைகள்எடுக்கவுள்ளோம். முன்புறமாக உள்ள கடைகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன்முன்புறமாகதரிக்கப்படும் பேருந்துகளும் இனி அவ்விடத்தில் நிறுத்தாமல் செய்யப்படவுள்ளது”என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் தெரிவித்தார். (21,114)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறி

சாவகச்சேரி, ஏப்.21
தென்மராட்சிகல்விவலய முறைசாராப்பிரிவினரால்வீட்டு மின்னிணைப்புப் பயிற்சி நெறி நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையில் மே முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்தப்பயிற்சிநெறியில்பங்குபற்றபாடசாலைக்கல்வியை நிறைவு செய்த இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சுயவிவரங்கள்எழுதியவிண்ணப்பப்படிவத்தினைபாடசாலையில்அல்லதுதென்மராட்சிக்கல்விவலயமுறைசாராப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (9)

## திறப்பு விழாவின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் 21
புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் ஏற்பாட்டில் கலைவாணர் கலை அரங்க திறப்பு விழாவின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு புங்குடுதீவில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற உள்ளது.
காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயும், சிறப்பு விருந்தினர்களாக மருத்துவநிபுணர்ப.ஸ்ரீகிருஷ்ணா, பிரபலவர்த்தகர் செ.மகேந்திரன் மற்றும் தொழிலதிபர் சே.சந்திரலிங்கம் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக பேராசிரியர் .பொ பாலசுந்தரம்பிள்ளை, கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் உடுவை.தில்லை நடராஜா, மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, வேலணைப் பிரதேச செயலாளர் எ.சோதிநாதன், நியூ ரங்கனஸ் ஹோம் பில்டர்ஸ் செயலாளர் யாழ்.தர்மினி பத்மநாதன், சுவிஸ் புங்குடுதீவு ஒன்றிய பொருளாளர் எ. கைலாசநாதன், வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான க.நாவலன், மற்றும் க. செந்தூரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.
நியூ ரங்கனாஸ் ஹோமோ பில்டர்ஸ் இந்த அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பொது மண்டபம் திறப்புவிழா, நினைவுக்கல் திரைநீக்கம், ஆண்டுமலர் வெளியீடு, தையல்கணினி பயிற்சிநெறிகளில்பூர்த்தி செய்தவர்களுக்கானசான்றிதழ் வழங்குதல் என்பனவும் இடம்பெறவுள்ளன.
மேலும், மாலை அமர்வு பிற்பகல் 3 மணிக்கு பேராசிரியர் கா. குகபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த அமர்வின் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.
குழுநடனம், வயலின் இசை, சமூக நாடகம், மெல்லிசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. எனவே இந்தக் கலை நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கலைப் பெருமன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

*யாழ். நகரில் இடம்பெறும்*

# போதைப்பொருள் பாவனையைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### *மாநகர சபை உறுப்பினர் நிலாம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப்.21
யாழ்ப்பாணம்மாநகரசபைஎல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் போதைப் பொருள் கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாநகர சபையின் உறுப்பினர்கே.எம்நிலாம்தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
எமது யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட அநேகமான பகுதிகளில் போதைப்பொருள்களின்விநியோகம், பயன்பாடு அதிகரித்து வருகின்றது. இந்த விடயத்தை மாநகர சபையின் கன்னி அமர்வு இடம்பெற்றபோது எனது உரையில் கூட தெரிவித்திருந்தேன். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு சிலர் வெளியிடங்களில் இருந்து வருபவர்களுடன்இணைந்து இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தொடர்பிலான தகவல்கள் என்னிடம் தற்போது பிரதேசமக்கள்தெரிவித்துள்ளனர். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் எவையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயங்களாகும். சமூகத்தைச்சீரழித்துச்சின்னாபின்னமாக்கும் இந்தச்செயற்பாடுகளை நாம் ஒன்றிணைந்து தடுக்க வேண்டும். இது தவிர மீள்குடியேறி வருகின்ற யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை அடையாளம் தெரியாத நபர்கள் திணிக்க முயற்சிக்கின்றனர்.
அத்துடன் யாழ்ப்பாணமுஸ்லிம்மக்களின் மீள்குடியேற்றத்தை முற்றாகத் தடைசெய்யக்கூடிய செயற்பாடுகளில் இவ்வாறான விடயங்கள் செல்வாக்கு செலுத்துகிறது. இந்தச் சவாலான விடயத்தை முறியடிக்க நாம் முழுவீச்சில் நடவடிக்கைமேற்கொள்ளவேண்டும். இவைஎமதுசமூகத்திலிருந்துமுற்றாக அகற்றப்படவேண்டும்-என்றார். (21)

## எண்ணெய் திருட்டு சந்தேகநபருக்குப் பிணை

சாவகச்சேரி, ஏப். 21
உள்ளூர் வணிக நிலையமொன்றில்,விலை கேட்பதாக பாசாங்கு செய்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 20 லீற்றர் மரக்கறி எண்ணெயுடன் பரலைத் தூக்கிச் சென்றுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (13.04.) சாவகச்சேரிவடக்குசோலையம்மன்ஆலயத்திற்குஅருகில் உள்ள வணிக நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.
இந்த திருட்டுத் தொடர்பாக நிலைய உரிமையாளர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்துவிசாரணைகளைமேற்கொண்டபொலிஸார் மானிப்பாய்பகுதியைச்சேர்ந்தஒருவரைக்கைதுசெய்தனர்.
இந்தநபரை கடந்த 16 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான்முன்னிலையில்முற்படுத்தியபோதுவழக்கினைவிசாரித்த நீதிவான் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பிணையில்செல்லஅனுமதித்தார்எனத்தெரிவிக்கப்பட்டது. (9)

# ஒற்றுமையை வலியுறுத்தி சாவகச்சேரியில் புத்தாண்டு நிகழ்வு

தென்மராட்சிஏப்21
தேசியஒருமைப்பாடுமற்றும்நல்லிணக்க அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு சாவகச்சேரிடிறிபேக்கல்லூரிமண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசியஒருமைப்பாடுமற்றும்நல்லிணக்கஅலுவலகத்தினரால்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மதங்களிடையேயும் கலாசாரங்களுக்கிடையேயும் ஒற்றுமையை வலியுறுத்தி நடத்தப்படும் நிகவிழ்வின் அங்கமாக யாழ் மாவட்டத்திலும்நடைபெறவுள்ளது.
தென்மராட்சிவலயக்கல்விப்பணிப்பாளர்சு.சுந்தரசிவம்தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் அரச தலைவரும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஐ.நா. அமைதி மற்றும் பாதுகாப்பு பற்றிய உயர்நிலை கருத்தியல்விவாதம்அமைப்பின்தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும்சிறப்புவிருந்தினராக அமைப்பின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.ஜெயசிங்கவும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின்கலைநிகழ்வுகளும் இடம்பெறமெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21
ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவிற்கான பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குநடைபெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

## தளவாசல் 4 அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 21
தளவாசல் 4 அறிமுக நிகழ்வு இணுவிலில் பரராச சேகரப்பிள்ளையார் கோயிலடி பொதுநூலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இணுவில்பொதுநூலக போசகர் க. தேவராஜாதலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வரவேற்புரையை க.வசீகரனும், அறிமுக உரையை ந. மயூரரூபனும், கருத்துரையைநா.யோகேந்திரநாதனும், ஏற்புரையை இணுவையூர்சிதம்பரதிருச்செந்திநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.
இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுஎழுகலை இலக்கியப் பேரவை அறிவித்துள்ளது.

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம்,ஏப். 21
இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகமும்இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் கழகநிலையத்தில்நாளைஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது

## ஒன்றுகூடலும் புத்தாண்டு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப். 21
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடலும் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகளும் முதியோர் சங்க மண்டபத்தில் நாளைஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்விற்கு கைதடி அரச முதியோர் இல்ல மூத்த பிரஜைகளும்வருகைதரவுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 21
கிளானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு வளர்மதி சனசமூக நிலைய முன்றலில் இன்று சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு தலைவர் இ. ரேணுகா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் , சிறப்பு விருந்தினர்களாகதெல்லிப்பழை பிதேசசெயலாளர்ச. சிவஸ்ரீ . வலிகாமம்வடக்குபிரதேசசபைதவிசாளர்சோ. சுகிர்தன் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (114)




கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் அண்மையில் நடைபெற்றன. இந்தநிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராகநாடாளுமன்றஉறுப்பினர் ஈஸ்வரபாதம்சரவணபவன், சிறப்புவிருந்தினராக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு. மதுசுதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பொங்கலுடன் நேற்று ஆரம்பமானது வலி.கிழக்கு சபையின் கன்னி அமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.21
வலி. கிழக்குப் பிரதேச சபையின் கன்னிஅமர்வு நேற்று வெள்ளிக்கிழமை பிரதேசசபை தலைமையில் சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



முன்னதாகபிரதேசசபையின் ஊழியர்நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டுக்குஅமைய பிரதேச சபை உறுப்பினர்கள் 38 பேருக்கும் மாலை சூட்டி வரவேற்று சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் அமர வைக்கப்பட்டனர். அங்கு புதுப்பானையில்பால்பொங்கவைக்கப்பட்டதோடு உறுப்பினர்களுக்கு ஆசிகளும்வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.
ஆசி உரையை அச்சுவேலி பங்குத்தந்தைவண.பிதாகே. ஜெயக்குமார் அடிகள் மற்றும் புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதமகுருஆகியோர்வழங்கினர். பிரதேச செயலாளர் யுகராசா ஜெலீபன், நலன்புரிச் சங்க நிர்வாகிகள் மற்றும் பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்கினர்.
காலை 9.50 மணியளவில் கேட்போர்கூடத்தில்தவிசாளர் தியாகராசா நிரோஸ் தலைமையில்கன்னிஅமர்வுஆரம்பமாகி நடைபெற்றது.
தவிசாளர் நீண்ட தலையுரையாற்றினார். வலிகிழக்கு பிரதேச சபைப் பிரிவில் மேற்கொள்ளவேண்டியவேலைத் திட்டங்கள்,அபிவிருத்திவேலைகளைமுன்னிலைப்படுத்தியும் பிரதேசசபைபிரிவின்பௌதீக வளங்கள்பண்பாட்டுவளங்களையும் சுட்டிக்காட்டி எதிர்காலநடவடிக்கைகளைஅவர் தனதுஉரையில்தெளிவுபடுத்தினார். உரையை அடுத்து சபைக் கூட்டத்தை கூட்ட வேண்டியமுறைதொடர்பான ஒழுங்குப் பிரச்சி னையை எழுப்பி எஸ். ஐங்கரன் ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர். அவர்களின் ஆட்சேபனைகள் கருத்துக்களுக்கு தவிசாளர் தெரிவித்த கருத்துக்களை சபை ஏற்றுக்கொண்டது. சபையின் செயற்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைஅடுத்து உபதவிசாளர் ம. கபிலன் உரையாற்றினார். அவரின் உரையை அடுத்து ஏனைய 36 உறுப்பினர்களும் உரையாற்றுவதற்குநேரம்ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டது.
உறுப்பினர்களும் வலி கிழக்கு பிரதேச சபை பிரிவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்னிலைப்படுத்திதமதுகருத்துக்களை வழங்கினர். (21.11)

## உதயன் ஊடக அனுசரணையில்:
# சதாவதானி கதிரவேற்பிள்ளை ஞாபகார்த்த ஆண்டு நினைவும் பரிசளிப்பும் இன்று

யாழ்ப்பாணம்.ஏப்.21
உதயன் பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற புலோலி மத்தி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 111 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக நிலையத்தின் செயலாளர் யோ.செந்தூரன் அறிவித்துள்ளார்.
நா.கதிரைவேற்பிள்ளையின் 111 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமுகநிலையமுன்றலில்இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிலையத்தலைவர் ப. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகமுன்னாள்துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி பொ.பாலசுந்தப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சி.நந்தகுமாரும்கௌரவ விருந்தினராகசதாவதானிகதிரவேற்பிள்ளை சிக்கன கடனுறவு கூட்றவுச்சங்கத் தலைவர் சோ. கங்காதரனும் கலந்து கொள்ளவுள்ளனர். கட்டுரைப்போட்டிகளில்1ஆம் இடத்தை அல்வாயைச் சேர்ந்த பா.ஹரிகரன் ,2ஆம் இடத்தை வவுனியா கனகராஜன் குளத்தைச் சேர்ந்த ந.சுதர்சினி, 3ஆம் இடத்தை யாழ் நகரத்தைச் சேர்ந்த ற.விதுஷா, 4ஆம் இடத்தைபருத்தித்துறையைச்சேர்ந்தவே.நந்தகுமார், 5ஆம் இடத்தை உடுப்பிட்டியைச் சேர்ந்த மா.செல்வதாஸ், கொழும்புத் துறையைச்சேர்ந்த வ.லோஜினி ஆகியோர் பெற்றிருந்தனர். அவர்களுக்கான பரிசில்களே இன்று வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21.7.173)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ் முகாமையாளர் சம்மேளனம்" ஓர் இனப்பிரச்சினையும்ஓர்ஒப்பந்தமும்"என்ற நூல் அறிமுக நிகழ்வு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.21
முன்பள்ளி ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கானபோட்டிப்பரீட்சைஎதிர்வரும்28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சீ.ஏ. மோகன்ராஜ் அறிவித்துள்ளார். இந்தப் பரீட்சைகள் கடந்த 7 ஆம் திகதி நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்ட நிலையில் முன்பள்ளி ஆசிரியர்கள் வயதெல்லை மாற்றப்பட்டு இறுதிநேரத்தில் பிற்போடப்பட்ட தெனவும் தற் போது பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க் கப்பட்டுள்ளதெனவும் தெரி விக்கப்பட்டது. (9)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப். 21
தென்மராட்சிபிரதேசசமுர்த்தி அலுவலகத்தினால் சித்திரைப் புத்தாண்டு சேமிப்பு வாரத்தையொட்டிய பிரதேசத்தில் உள்ள நான்கு சமுர்த்தி வலயங்களிலும் சமுர்த்தி பயனாளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளைஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.
சமுர்த்தியாளர்களின் சித்திரைப் புத்தாண்டு சேமிப்புவாரம்கடந்த16ஆம்திகதிதொடக்கம் 25ஆம்திகதிவரைநாடளாவியரீதியில்நடைபெற்று வருகிறது.
சேமிப்பினை ஊக்குவிக்கவும் சமுர்த்தியாளர்களின்உடல்ஆரோக்கியத்தைமேம்படுத்தவும்சேமிப்புவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.
சேமிப்பு வாரத்தின் ஓர் அங்கமாக சமுர்த்தியாளர்களிடையேவிளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள நான்கு சமுர்த்திவலயங்களின்விளையாட்டுப்போட்டிகள் நான்கு மைதானங்களில் நடாத்தப்படவுள்ளன.
நாளை காலை9 மணிக்கு கொடிகாமம் சமுர்த்தி வலயத்தின் விளையாட்டுப் போட்டிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மைதானத்திலும், வரணி சமுர்த்தி வலயபயனாளிகளின்விளையாட்டுப்போட்டிகள் வரணி மத்திய கல்லூரி மைதானத்திலும், மதியம். 2.00 மணிக்கு சாவகச்சேரி வலய சமுர்த்தியாளர்களின் விளையாட்டுப் போட்டிகள் வலய சமுர்த்தி அலுவலக வளாகத்திலும் கைதடி வலய சமுர்த்திப் பயனாளிகளின் விளையாட்டுப் போட்டிகள் கைதடி மின்னொளிமைதானத்திலும்நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## கிராம...

கிராம சேவையாளர் பிரிவுகளில் பணி வெற்றிடம் காணப்படுவதாக வழங்கப்பட்ட மாவட்டச் செயலகங்களின் தகவல்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

பரீட்சார்த்திகளின் பெயர் விவரங்கள், பெற்ற புள்ளிகள், நிலைகள் என்பன வெளியாகியுள்ளன. நாடு முழுவதும் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 1,668 பேர் இதன் மூலம் கிராம அலுவலர்களாக உள்வாங்கப்பட இருக்கின்றனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்களை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான http://www.moha.gov.lk என்ற முகவரியூடாகப் பார்வையிடமுடியும். (உ-114)

## சம்பந்தனை விரட்டி...

ருக்கு எதிராகச் செயற்படுவதற்கும் கூட்டு எதிரணி நடவடிக்கை எடுத்து வருகின்றது" என்றார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது தொடர்பாகச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோதே தினேஷ் குணவர்த்தன இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் பதவி விலகுவதற்கான அழுத்தங்களைப் கொடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் துரித கதியில் முன்னெடுப்பதற்குக் கூட்டு எதிரணி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது தொடர்பில் ஆராயப்பட்டது. ஆனால் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது அர்த்தமற்றது என்பதை நாங்கள் உணர்கின்றோம்.

எனவே எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தானாகவே பதவி விலகுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதே பொருத்தமானதாக அமையும்.

அதற்காக நாங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகப் பல்வேறு வழிகளிலும் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளோம். அவர் பதவிவிலகும் வரை நாங்கள் அழுத்தம் கொடுப்போம்.

நாடாளுமன்றில் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகரே நியமித்திருக்கின்றார். பெரும்பான்மைப் பலம் எம்மிடம் இருக்கும் போது சம்பந்தனை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கவேண்டியது சபாநாயகரின் கடமை. ஆனால் சபாநாயகர் அந்தக் கடமையைச் செய்யாமல் இருக்கின்றார். அவர் இப்படியே செயற்படுவாரானால் அவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க க் கூட்டு எதிரணி தயங்காது - என்றார். (உ-4,31)

## சம்பந்தனை...

சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அரசில் உள்ள நிலையில் அதன் ஒரு தரப்பினர் எதிர்க்கட்சியில் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எந்தக் காரணம் கொண்டும் அரசியல் ரீதியான சூழ்ச்சிகளுக்கும் நகைச்சுவைப் பாங்கான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்க மாட்டோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக்கூட்டு எதிர்க்கட்சியால் கோர முடியாது. அரசியல் நோக்கங்களுக்காகவே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குக் கூட்டு எதிர்க்கட்சியினர் முயற்சி செய்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

ஆரம்பத்தில் அரசை வீழ்த்துவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதனை நாம் தவிடுபொடியாக்கினோம்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியின் மீது கூட்டு எதிர்க்கட்சியின் அவதானம் திரும்பியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒன்றில் அரசில் இருக்க வேண்டும். இல்லையேல் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டும். பாதி அரசில் மீதி எதிர்க்கட்சியில் என்பது வேடிக்கையானது. எனவே கூட்டு எதிர்க்கட்சியால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியாது- என்றார். (உ-4,31)

## காணாமற்...

னோர் பணியகத்தின் உறுப்பினர்கள் நாளை மறுதினம் 23ஆம் திகதி கூடவுள்ளனர். இந்தத் தகவலை பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் நேற்று உறுதிப்படுத்தினார்.

காணாமற்போனோர் பணியகம் நிறுவப்பட்டுள்ளபோதிலும் அதன்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இன்னும் நிரந்தரக் கட்டடம் வழங்கப்படவில்லை. தற்காலிக அலுவலகமொன்றின் ஊடாக ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அலுவலகத்துக்குப் பணியாளர்களை நியமிக்கும் செயற்பாடு இடம்பெறுகிறது. 23ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் பணியாளர்களுக்கான வேலைக்கட்டமைப்பு உருவாக்கப்படும். அதன் பின்னர் பணியகத்தின் செயற்பாடு ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதற்கட்டமாக, காணாமற்போனவர்களின் உறவினர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமாகும். இதன் ஓர் அங்கமாகவே மண்டையோடுகள் வெளிக்கிளம்பிய மன்னார் மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்டு காணாமற்போனவர்களின் உறவினர்களைப் பணியகத்தின் உறுப்பினர்கள் நேரில் சந்திக்கவுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமே காணாமற்போனோர் பணியகம் அமைக்கப்பட்டது. கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும், மகிந்த அணியும் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. கடும் இழுபறிக்கு மத்தியிலேயே சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை வருடத்துக்குப் பிறகே பணியகத்துக்கான தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களைக் கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன நியமித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விவரங்களை அறிந்துகொள்வதும், தகவல்களை உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதுமே இந்தக்குழுவின் நோக்கம்.

காணாமற்போனவர்கள் சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பரிந்துரைகளை முன்வைத்தல், காணாமற்போனோர் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் பற்றுதல்களைப் பாதுகாத்துக்கொள்ள அறிவுறுத்தல், அரச நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் மூலம் கண்டுபிடிப்பதற்கு முடியாமற்போன நபர்களின் விவரங்கள் அடங்கிய தரவுகளைத் திரட்டி மைய தரவு வலையமைப்பொன்றை ஏற்படுத்தி கோவைப்படுத்தல் போன்ற பணிகளை இந்தக்குழு முன்னெடுக்கவுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பணியகம் அமைப்பதற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் என்று 1.3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மகிந்த ஆட்சிக்காலத்திலும் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் அரச தலைவர் ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. மைத்திரி - ரணில் தலைமையிலான கூட்டாட்சியிலும் அந்தக் குழு செயற்பட்டு தமது இறுதி அறிக்கையைக் கையளித்தமை தெரிந்ததே. (உ-4)

## ஆதாரங்கள்...

யின் செயலாளர் ந.சிறிகாந்தா.

தாம் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு கேட்டு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் ஆகியோர் பல தடவைகள் ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் பேசியிருந்தனர். இது சம்பந்தமான ஆதாரங்களை நாம் வெளியிடத் தயார் என்று ஈ.பி.டீ.பி. கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார் என்று ஊடகங்களில் நேற்று செய்திகள் வெளியாகி இருந்தன. அதற்குப் பதிலளித்த போது சிறிகாந்தா இதனைத் தெரிவித்தார்.

"ஆதாரங்கள் இருப்பின் அவற்றை எந்த தயக்கமும் இன்றி வெளியிடுங்கள் இதனை நாங்கள் பகிரங்கமாகவே கோருகின்றோம்" என்றார் அவர்.

"தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது எந்தவொரு சபைகளிலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அதற்காக அவர்கள் உத்தமர்களோ, மகாத்மாக்களோ அல்லர். அவர்களுடைய தோல் விரைவில் உரிக்கப்படும். அப்போது அனைத்தும் தெரியவரும்" எனவும் சிறிகாந்தா அந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்தார். (உ-114)

## புத்தளம்...

கர் ஒருவரால் எடுத்துச் செல்லப்பட்ட பணமே கொள்ளையிடப்பட்டது என்றும் அவர்கள் கூறினர்.

புத்தளத்தைச் சேர்ந்த அப்துல் கபூர் நாசீம் என்பவரே பணத்தைப் பறிகொடுத்தார். கொள்ளையர்கள் தாக்கியதில் காயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றுக் காலை கடலுணவுகளைக் கொள்வனவு செய்வதற்காக பணத்துடன் தான் சென்ற போது வாகனம் ஒன்றில் வந்த 4 பேர் தன்னைத் தாக்கிவிட்டு பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று நாசீம் தனது பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சாலைப் பகுதியில் அண்மைக் காலமாகக் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கஞ்சா போன்ற போதைப்பொருள்களும் விநியோகிக்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர். கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்ட சிலர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-ரி3)

## மைத்திரி...

பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னரான அரசியல் கள நிலவரங்கள் ஆராயப்பட்டு முக்கிய முடிவுகள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்று கட்சியினர் கூறுகின்றனர்.

லண்டனில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள மைத்திரிபால சிறிசேனவை சு.க. உறுப்பினர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, சந்திக வீரக்கொடி, லக்ஷமன் வசந்த பெரேரா ஆகியோரே அவசரமாக லண்டன் சென்று மைத்திரியைச் சந்தித்து அரசியல் கள நிலவரம் தொடர்பில் அவருக்கு விளக்கினர்.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்திலாத் தீர்மானத்தை ஆதரித்த சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதி பாலவின் வீட்டில் கூடி எடுத்த முடிவுகளை அவர்கள் மைத்திரிக்குத் தெரியப்படுத்தினர்.

நாடு திரும்பியதும் மையக் குழுவைக் கூட்டி முடிவெடுப்போம் என்று மைத்திரி அவர்களுக்குக் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது சுதந்திரக் கட்சியின் இந்தப் 16 பேர் குழு நாடாளுமன்றில் எதிரணியில் அமர்வதற்கு சபாநாயகரிடம் அனுமதியும் கோரியுள்ளது. (உ-4)

## ஓட்டோக்களுக்கு...

தீரம் பொருத்துதல் நேற்றுத் தொடக்கம் கட்டமாக்கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு பற்றுச்சீட்டு வழங்குவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்தது.

முச்சக்கர வண்டிகளுக்கு கட்டண அறவீட்டு மீற்றர் இயந்திரம் பொருத்தும் சட்டம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தின் கோரிக்கைக்கேற்ப மீற்றர் பொருத்துவதற்கு 6 மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஏப்ரல் முதலாம் திகதியுடன் அந்தக் கால அவகாசம் நிறைவடைந்துள்ளது. அதனால் நேற்றுத் தொடக்கம் மீற்றர் இயந்திரம் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மீற்றர் இயந்திரம் பொருதப்படாத முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு எதிராக இன்று தொடக்கம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தகைய முச்சக்கர வண்டிகளின் சாரதிகளைக் கைது செய்வதற்கும் தண்டம் விதிப்பதற்கும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய பாதுகாப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

மீற்றர் பொருத்தப்படாத முச்சக்கர வண்டி சாரதிகள் தொடர்பாக 0112696890 என்ற இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீற்றர் இயந்திரத்தின் மூலம் பற்றுச் சீட்டு வழங்கப்பட முடியாத பட்சத்தில் கட்டணத் தொகையை எழுதியேனும் சாரதிகள் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மீற்றர் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அகில இலங்கை முச்சக்கரவண்டி தொழிலாளர்களின் ஒருமித்த சங்கம் தெரிவித்தது.

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் எம்.ஜே. திஸாநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரசபையின் இந்தச் சட்டம் நியாயமற்றது. இந்த சட்டத்தை எங்களால் பின்பற்ற முடியாது. இவ்வாறான சட்டங்கள் மூலம் முச்சக்கரவண்டி தொழில் வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கின்றது. அத்துடன் மீற்றர்களை பொருத்தும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மீற்றர் நிறு வனத்தின் மூலம் தரகுப்பணம் பெற்றுக்கொள்வதே அதிகாரிகளின் நோக்கம்.

விரும்பிய முச்சக்கரவண்டி சாரதிகள் மீற்றர் பொருத்துவதற்கும் பயணிகள் தேவையென்றால் மீற்றர் பொருத்திய வண்டியில் மாத்திரம் பயணிக்கும் சுதந்திரமும் இருக்கவேண்டும் என்றார்.

இதேவேளை, ஒரு கிலோ மீற்றருக்கு அறவிடப்படும் கட்டணம் தொடர்பான விவரங்களை காட்சிப்படுத்துவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக வீதி பாதுகாப்பு அதிகார சபையின்தலைவர் டொக்டர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார். (உ-4,31)

## ஆட்சிக்கு...

லேயே இல்லை" என்றும் தெரிவித்தார்:

யாழ்ப்பாணத்தில் உள்ள சபைகளில் தாம் ஆட்சி அமைப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈபிடிபியின் தலைவர்களுடன் விடாது தொடர்ந்து தொலைபேசியில் பேசி வந்தார்கள் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்திருந்தனர் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. அதற்குக் கருத்துத் தெரிவிக்கும் வகையிலேயே சிறிகாந்தா இதனைத் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் உள்ள சபைகளில் கூட்டமைப்பு ஆட்சியமைப்பது என்றும் தீவகத்தில் உள்ள மூன்று சபைகளிலும் ஈபிடிபி ஆட்சியமைப்பது என்றும் 'டீல்' பேசப்பட்டது. தாம் ஆட்சியமைக்க ஆதரவு தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், மாவை சோ.சேனாதிராசா மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் விடாது பேசினர். அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன" என்று ஈபிடிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.சிறிரங்கன் தெரிவித்திருந்தார் என்று ஊடகச் செய்திகள் கூறின.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் ரெலோவின் செயலாளர் நாயகம் ந.சிறிகாந்தா நகரில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தார். சபைகளில் ஆட்சியைப் பிடிப்பது தொடர்பில் ஈபிடிபியுடன் பேச்சுக்களை ஆரம்பித்தவரும் இவரே. நேற்றைய சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கக் கூட்டமைப்பு ஆதரவு கோரியிருந்ததாக ஈ.பி.டி.பி. சார்ந்தவர்கள் தெரிவித்திருந்தனர். நாங்கள் அதனை ஆதரவு என்று கூறவில்லை. மாறாக ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலேயே அந்தக் கட்சியுடன் கலந்துரையாடினோம். சபைகளில் பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருக்கும் கட்சிகளே அந்தந்தச் சபைகளில் ஆட்சியமைப்பது. அதற்கு மற்றைய கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவது என்ற நோக்கிலே கலந்துரையாடப்பட்டது. இது எந்த வகையிலும் 'டீல்' ஆகிவிடாது. அத்துடன் அத்தகைய 'டீல்' அரசியல் தமிழ் கூட்டமைப்பின் அகராதியிலே இல்லை.

மேலும் டக்ளஸ் தேவானந்தா உட்பட்டவர்களுடன் பேசியது ரெலோவே தவிர தமிழ்த்தேசியக் கூட்டமைப்பல்ல - என்றார். (உ-114)


## நிறைவேற்று...

னாள் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியால் அரசதலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் வகையில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இதே தீர்மானத்தைத் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரச சார்பற்ற அமைப்புக்களும் முன்வைத்து வருகின்றன. இதற்குக் கூட்டு எதிர்க் கட்சியும் தனது ஆதரவை வழங்க முன்வந்துள்ளது என்பதே. அரசியல் ரீதியில் நாட்டைப் பலப்படுத்த வேண்டுமானால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறைமை இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும் -என்றார். (4)

கேலிச்சித்திரம்



நன்றி: ஐலண்ட்

# அமைச்சரவை பதவியேற்றதும்
# புதிய அரசமைப்பு உருவாக்கம் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 21

புதிய அமைச்சரவை நாளைமறுதினம் திங்கட்கிழமை பதவியேற்றதும், புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று, அரசமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவின் முக்கிய உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒருவர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் புது வருடத்தை முன்னிட்டுச் செய்தியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துச் சுமுகமாகக் கலந்துரையாடினார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் அரசமைப்பு உருவாக்கல் சம்பந்தமான விடயங்களைச் சுட்டிக்காட் டினார்.
2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து அரசு பதவியேற்றதன் பின்னர் புதிய அரசமைப்பை உருவாக்கும் நோக்கில் நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. அரசமைப்பு நிர்ணயசபையின் கீழ் வழிநடத்தற் குழு நியமிக்கப்பட்டது.
வழிநடத்தற் குழு ஆறு விடயங்களைக் கையாள்வதற்கு ஆறு உபகுழுக்களை நியமித்தது. இதன் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் ஏழாவது உபகுழுவும் நியமிக்கப்பட்டது. உபகுழுக்களின் அறிக்கை 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. வழிநடத்தல் குழுவின் அறிக்கை மிக நீண்ட இழுபறியின் பின்னர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.
இந்த அறிக்கைகள் மீதான விவாதம் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதம் இடம்பெற்றது. விவாதங்கள் முடிவடைந்த பின்னர் புதிய அரசமைப்பை வரையும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
எனினும், உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் கூட்டு அரசுக்குள் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அந்த முயற்சி தொடரப்படவில்லை.
இந்தநிலையிலேயே, நாளை மறுதினம் இடம் பெறும் அமைச்சரவைப் பதவியேற்பின் பின்னர் புதிய அரசமைப்பு முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கப்படும் என்று, வழிநடத்தற் குழுவின் முக்கிய உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் குறிப்பிட்டார். (5,61)

## ஐ.தே.கவின் பதவிகளுக்கு 26இல் புதிய முகங்கள்

### மே தினக் கூட்டத்தில் விவரம் அறிவிக்கப்படும்

கொழும்பு, ஏப். 21
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகளையும் மையச் செயற்குழுவின் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க முடிவு செய்யப்பட்டது.
ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க நியமிக்கப்பட்ட 12 பேர் அடங்கிய குழு பரிந்துரைக்குக்கும் பெயர்களின் பிரகாரம் வாக்கெடுப்பின் மூலம் பதவிகளை நிர்ணயிக்க முடிவுசெய்யப்படவுள்ளது.
எதிர்வரும் 26ஆம் திகதி கூடவுள்ள கட்சியின் மையச் செயற்குழுவில் மேற்படி சிபாரிசுகளை 12 பேர் அடங்கிய குழு முன்மொழியவுள்ளது. அன்றைய தினம் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும் பதவிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிலாளர் தினக் கூட்டத்தில் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படவுள்ளது.
கூடிய அதிகாரத்துடன் உருவாக்கப்படவுள்ள கட்சியின் பொதுச் செயலர் பதவிக்கு அதிகமான போட்டி நிலவுகின்றது. அமைச்சர்களான அகிலவிராஜ் காரியவசம், நவீன் திசாநாயக்க மற்றும் இம்தியாஸ் மார்க்கர் ஆகியோரின் பெயர்கள் பொதுச் செயலர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டன. அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமே பொதுச் செயலராக நியமிக்கப்படும் வாய்ப்பு அதிகளவில் காணப்படுகின்றது என்று அறியமுடிகின்றது. (5)

## 18 மாதங்களுக்கான திட்டங்கள் எவை?

### விரைவில் அறிவிக்கும் ஐ.தே.க.

கொழும்பு, ஏப். 21
2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி சிறப்பு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்தது. அதற்கான அறிவிப்பைக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது.
எதிர்வரும் 26ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடவுள்ளது. இதன்போது மேற்படி செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. அதன் பின்னர் அரச தலைவருடன் கலந்துரையாடிப் பல வேலைத் திட்டங்களை உள்ளடக்கிய அறிவிப்பை தொழிலாளர் தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வெளியிடவுள்ளது.
18 மாத காலத்தில் நாட்டில் கூட்டு அரசால் முன்னெடுக்கவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு வெளியிடவுள்ளது. இதற்காகச் சமுர்த்தி மற்றும் தொழில் அமைச்சுகளைத் தமக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அரச தலைவரிடம் ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கத் தீர்மானித்தது. (5)

## கண்டியில் நடந்தேறியது திட்டமிட்ட அரசியல் கலவரமே!

### கூறுகிறார் அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு. ஏப். 21
கண்டியில் இடம்பெற்றது மதக் கலவரமல்ல. திட்டமிட்டப்பட்ட அரசியல் கலவரமாகும். இராணுவ மற்றும் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றாமையே கண்டிக் கலவரம் உச்சமடைந்தமைக்குக் காரணமாகும் என்று அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
கண்டியில் இடம்பெற்றது மதக் கலவரமல்ல. திட்டமிடப்பட்ட அரசியல் கலவரமேயாகும். சில கிளர்ச்சியாளர்கள் தங்கள் சுய இலாபங்களுக்காகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு மதச் சாயம் பூசி ஒற்றுமையாகவுள்ள எமது மக்களைப் பிரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
இந்துக்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாகவே உள்ளனர். இந்துக்களின் ஆலயங்களுக்கு, முஸ்லிம்களும் வருகை தருகின்றனர். அவர்களின் வழிபாட்டிடங்களுக்கு ஏனையவர்களும் செல்கின்றனர். மத ரீதியான ஓர் கலவரம் ஏற்பட வாய்ப்பில்லை.
இது ஓர் திட்டமிடப்பட்ட அரசியல் கிளர்ச்சியே ஆகும். ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் கிளர்ச்சிகளுக்கு மதச் சாயம் பூச வேண்டாம்.
இவ்வாறான கூட்டங்களை நடத்துவதால் மாத்திரம் இப்படியான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இராணுவம் மற்றும் பொலிஸார் உட்பட உரிய அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்திலேயே இவ்வாறான பிரச்சினைகள் உச்ச நிலையடையும்.
சட்டத்தை நடைமுறைப்படுத்தலிலும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதிலும் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்ளடங்கிய உரிய தரப்பு அதிகாரிகள் பின்னிற்கக் கூடாது - என்றார். (5,61)



## சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 21
நாட்டின் பல பகுதிகளில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
சமையல் எரிவாயுக்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு 2.5, மற்றும் 12.5 கிலோகிராம் சிலிண்டர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கப்பெறுவதாகவும் இதனாலேயே தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
கடந்த 15 ஆம் திகதி முதல் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.
சமையல் எரிவாயு விற்பனை செய்யும் நிறுவனங்கள் இதனை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## சபையில் எதிர்க்கட்சி வரிசையில் 16 ஆசனங்களைக் கோரும் சு.க.

கொழும்பு, ஏப். 21
மே 8ஆம் திகதி ஆரம்பமாகும் புதிய நிகழ்ச்சி நிரலுடன் கூடிய நாடாளுமன்றத்தில் எதிரணியில் அமர்வதற்குத் தீர்மானித்துள்ளோம். ஆசன ஒதுக்கீடுகளைச் செய்யுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரவுள்ளோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தெரிவித்தனர்.
கூட்டு அரசுக்குள் இருந்துகொண்டு இவர்கள் தலைமை அமைச்சருக்கு எதிராக வாக்களித்ததால் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்துத் தாம் வகித்த அமைச்சு, இராஜாங்க, பிரதி அமைச்சுக்களை மேற்படி 16 பேரும் துறந்தனர்.
கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட இருந்த போதிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 8ஆம் திகதிவரை நாடாளுமன்றத்தை ஒத்திவைத்திருந்தார். எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற அமர்வில் எதிரணியின் வரிசையில் தமக்குக் கதிரைகளை ஒதுக்குமாறு கோரித் தலைமை அமைச்சருக்கு எதிராக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் கையொப்பமிட்டு எழுத்துமூலக் கடிதத்தைச் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்தனர். (5)

# 'மைத்திரியே திரும்பிப் போ'

## லண்டனில் முழக்கம்




கொழும்பு, ஏப். 21

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க பிரிட்டன் சென்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மைத்திரிபால சிறிசேனவைத் திரும்பிப் போகுமாறு முழக்கங்களை எழுப்பியவாறு, பக்கிங்ஹாம் அரண்மனைக்கு அருகில் இவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

"மைத்திரியே திரும்பிப் போ", "எமக்கு வேண்டாம் அரசமைப்பு, இறுதித் தீர்வு தமிழீழமே" என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர். (5)

## லண்டனில் போராட்டத்தை படம் எடுத்த அதிகாரிகள்



கொழும்பு, ஏப். 21

லண்டனில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகப் புலம்பெயர் தமிழர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தை இலங்கைத் தூதரக அதிகாரிகள் படம்பிடித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்ததாக, போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (5)

## இரு கட்சி ஆட்சி முறைமை இலங்கையில் சாத்தியப்படாது

### லங்கா சமசமாஜக் கட்சி

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் இரண்டு பிரதான அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து சிறந்த ஆட்சி முறைமையை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதற்குத் தற்போதைய கூட்டு அரசு சிறந்த எடுத்துக்காட்டு. நிறைவேற்று அதிகார முறையைக் கொண்ட அரச தலைவர் முறைமை இலங்கையின் அரசியல் வகிபாகங்களுக்குப் பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பிரிட்டன் காலனித்துவ ஆட்சியில் இருந்து முழுமையாக விடுதலை பெற்றதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை அரசமைப்பின் முக்கிய அம்சமாக உள்ளடக்கினார். 1978ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இந்த முறைமையே நடைமுறையில் உள்ளது. நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை எமது நாட்டுக்குப் பொருத்தமற்றது என்று லங்கா சமசமாஜக் கட்சியின் நிறுவுனர் என்.எம். பெரேரா குறிப்பிட்டார்.

நமது நாட்டின் அரசமைப்பின் பிரகாரம் தற்போது கூட்டாட்சி முறைமைக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்த ஆட்சி முறைமை தற்போதைய அரசுக்குப் பொருத்தமற்றது. அரச தலைவர் ஒரு கட்சியின் தலைவராகவும், தலைமை அமைச்சர் பிறிதொரு கட்சியின் தலைவராகவும் காணப்படும்போது அங்கு கருத்தொற்றுமை ஏற்படாது. இதன் காரணமாகப் பல தேசியத் திட்டங்கள் பின்னடைவை எதிர்கொள்ள வேண்டிய நிலமை தோன்றியுள்ளது.

நீண்டகாலமாகக் கருத்து வேறுபாடுகளுடன் செயற்பட்ட ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒன்றிணைந்து கூட்டு அரசாகச் செயற்பட ஆரம்பித்தன. பெயரளவில் மாத்திரமே இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்தன. கட்சியின் உறுப்பினர்களுக்கிடையில் பெரிய முரண்பாடுகள் கடந்த காலங்களில் தோற்றம் பெற்றமையின் காரணமாகக் கூட்டு அரசு உள்ளார்ந்த ரீதியில் பிளவுபட்டது. இந்த விடயங்களை மறைத்து மக்கள் மத்தியில் போலி நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர். 20ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை இல்லாமற் செய்ய வேண்டும் என்ற விடயத்தையும் உள்ளடக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம். இலங்கை விரைவில் அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் பிரிட்டன் மாதிரியிலான மந்திரிசபை அரசு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரங்கள் பறிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசியல் விடயங்களை மையப்படுத்தி அரசியல் கட்சிகள் செயற்படாமல் நாட்டின் எதிர்கால முன்னேற்றம் குறித்து ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (5,31)

## இன மோதல்களால் அவமானப்பட்டோம்

### நல்லிணக்கக் குழுக் கூட்டத்தில் சபாநாயகர் கரு கவலை



கொழும்பு, ஏப். 21

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இன மோதல்களினால் பிற நாடுகள் மத்தியில் நாட்டுக்கான கீர்த்தியில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிலையானது நாட்டில் பொருளாதார அபிவிருத்திப் பாதையில் தடைக்கற்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையை நாம் எதிர்கால சமூகத்துக்கு விட்டுச் செல்லாமல் தீர்வைத் தற்போதே ஏற்படுத்த நாட்டின் அனைத்துத் தரப்பிலிருந்தும் ஆதரவு வழங்கப்பட வேண்டும் என்று சபாநாயகர் கருஜய சூரிய கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாடாளுமன்றக் குழு அறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன ரீதியிலான மோதல்கள் நாட்டின் கீர்த்தியில் அவதூறு நிலையை தோற்றுவித்து விட்டன. இதனை நிவர்த்திக்க வேண்டியது நாட்டின் அனைத்து மட்டத்தினரினதும் கடப்பாடாகும். நாடாளுமன்றம் மாத்திரம் இதில் பங்காற்ற முடியாது.

கடந்த காலத்தில் கண்டியில் ஏற்பட்ட இன ரீதியான மோதலினால் இலங்கை பிற நாடுகள் மத்தியில் அவமானத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினையே இன்று இவ்வாறானவொரு கலந்துரையாடலுக்கும் வித்திட்டது.

தற்காலத்தில் தேசம் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் இவ்வாறான இன மோதல்கள் அடித்தளமிடுகின்றன. இனமோதல்களை நாம் தற்காலத்திலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். இப்படியான கீழ் மட்ட நிலைப்பாட்டை எமது பரம்பரையினருக்கு எடுத்துச் செல்லாதிருப்போம்.

மேலும் கண்டிப் பிரச்சினையின் போது அரசியல் தலைவர்கள் சிலர் என்னை வந்து சந்தித்துக் கலந்துரையாடினர். இவ்வாறான பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே தகர்த்தெறிவதற்கான வழிமுறைகளை மேம்படுத்தவும் எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகாமல் தடுக்கவும் வழி வகைகளை செய்ய வேண்டும் - என்றனர்.

இது ஒரு சிறந்த வெளிப்பாடு. உயர்மட்டத்தில் மாத்திரம் இதனை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமற்றதாகும். நாம் அனைவரும் இன, மத ரீதியாக வேறுபட்டாலும் தேசிய மட்டத்தில் ஒரே குழுவினர்.

நாட்டின் அபிவிருத்திநிலையைக் கவனத்திற் கொண்டு தேசிய ஒழுக்கநெறியையும் பின்பற்ற வேண்டும். எனவே இதற்கு அனைத்து மட்டத்தினரும் கரங்கோர்க்க வேண்டும்.

நாட்டின் அனைவருக்கும் வாக்களிப்பது மாத்திரமே உரிமையல்ல. அரசால் வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் பெற்றுக்கொள்ள இயலும். இதனை எவராலும் மறுக்க இயலாது.

பாடசாலை மட்டத்திலிருந்து ஒழுக்கநெறிகளை எதிர்கால சந்ததியினருக்கு பயிற்றுவிப்பதால், கடந்த காலங்களைப் போன்று இளைஞர்கள் இன ரீதியான பிரச்சினைகளுக்கு வித்திடாமல் நாட்டின் அபிவிருத்தியில் பங்கு கொள்வர் - என்றார். (5,61)

## சக வாழ்வை உறுதிப்படுத்த கருத்தறியும் குழு நிறுவ முடிவு

கொழும்பு, ஏப். 21

தேசிய சகவாழ்வை உறுதிப்படுத்த கருத்தறியும் குழுவொன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானமானது சர்வமத தலைவர்களின் வழிக்காட்டலின் கீழ் கட்சித் தலைவர்களின் உதவியுடன் எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்ற தேசிய மற்றும் மத சகவாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பிலும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்வுகள் தொடர்பிலும் முழுமையான கருத்தாய்வும் இதன்போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்திக் கருத்தறியும் குழுவின் மூலம் மக்களிடம் நாட்டின் ஒழுக்கநெறியை வலுப்படுத்தலுக்கான செயற்றிட்டங்கள் கொண்டு செல்ல முடியும் என்பதோடு, இந்தச் செயற்பாடானது மிக நீண்ட பயணமாகையால் நாட்டின் அனைத்துத் தரப்பினரினதும் ஒத்துழைப்பின் அவசியம் குறித்தும் தெளிவுப்படுத்தப்பட்டது. (5,61)

## கொழும்பு அரசியல் மோதல்

# ரணிலை மீண்டும் சந்தித்தார் சந்திரிகா

கொழும்பு, ஏப். 21

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை இரண்டாவது தடவையாகவும், முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையார் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



இந்தச் சந்திப்பு கடந்த புதன்கிழமை, அலரிமாளிகையில் நடைபெற்றது.

கூட்டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சியினர் 16பேர் விலகியுள்ளனர். அரசில் தொடர்ந்து இருப்பதற்கு விருப்பம் உள்ளவர்களைக் கொண்டு ஆட்சியை முன்னெடுப்பதற்கு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இணக்கம் கண்டனர். இருப்பினும், கூட்டு அரசுக்கு இடையிலான பனிப்போர் இன்னமும் தணியவில்லை. கூட்டு அரசின் பிரதான அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையில் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் முன்னாள் அரச தலைவரும், சுதந்திரக் கட்சியின் ஆலோசகருமான சந்திரிகா களமிறங்கியுள்ளார். கடந்த 11ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்த சந்திரிகா, இரண்டாவது தடவையாகக் கடந்த புதன்கிழமையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நாளை மறுதினம் பதவியேற்கவுள்ள புதிய அமைச்சரவை தொடர்பில் பேசப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகின்றது. (5,31)

## தைத்த ஆடை ஏற்றுமதிகளுக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லை

### வர்த்தக திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கருணாதிலக்க

கொழும்பு, ஏப். 21



அமெரிக்காவின் ஜி.எஸ்.பி வரிச்சலுகை ஆடைக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட மாட்டாது. இதனைத் தவிர ஏனைய அனைத்துத் துறைகளுக்கும் இந்த வரிச்சலுகை கிடைக்கும் என்று வர்த்தகத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் நிமல் கருணாதிலக்க தெரிவித்தார்.

அமெரிக்கா ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நாளை முதல் மீண்டும் இலங்கைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தியடைந்துவரும் 120 நாடுகளின் 5 ஆயிரம் உற்பத்திகளுக்கு ஏற்றுமதியின் போது அமெரிக்கா ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்கவுள்ளது. ஆடை ஏற்றுமதி தொடர்பில் அமெரிக்கா சில சிறப்பு நிபந்தனைகளை பின்பற்றுவதால் அதற்கான வரிச்சலுகை வழங்கப்படாது. மாறாக அமெரிக்காவுக்கு நாங்கள் மாணிக்கக்கல், வாசனைத் திரவியங்கள் கடல் உணவு, தரை ஓடுகள் மற்றும் பூக்கள் போன்ற பொருள்களையே அதிகளவில் ஏற்றுமதி செய்கின்றோம்.

இந்த உற்பத்திகளின் தரத்தை மேலும் அதிகரிப்பதன் மூலம் அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையுடன் அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ள இது சிறந்த சந்தர்ப்பமாகும். இலங்கையின் பிரதான ஏற்றுமதித் துறையான ஆடை உற்பத்தியின் 70 தொடக்கம் 75 வீதம் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இருந்தபோதும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை தைத்த ஆடை ஏற்றுமதிக்கு வழங்கப்படுவதில்லை - என்றார். (5,61)

## 20ஆவது சட்டவரைவு:

# கூட்டு எதிரணிக்குள் கருத்து முரண்பாடு

கொழும்பு, ஏப். 21



தற்போதைய சூழலில் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமலாக்க நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது இல்லை என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். 20ஆவது திருத்தச் சட்டவரைவை மகிந்த அணி ஆதரிக்கும் என்று அந்த அணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்திருந்த நிலையிலேயே, வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி சட்டவரைவை முன்வைக்கப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் இந்த யோசனையை வரவேற்கின்றோம். ஆனால் அவர்களின் நோக்கம் அரச தலைவரின் அதிகாரத்தை இல்லாமலாக்கி அதனைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதாகும்.

அரச தலைவரின் அதிகாரங்களை இல்லாமலாக்கித் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அந்த அதிகாரங்களைத் தனக்குக் கீழ் கொண்டுவரத் திட்டமிட்டு வருகின்றார். என்றாலும் ரணிலுக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும் அரசு அமைக்கப்படுவது எங்களுக்குப் பெரிய அச்சுறுத்தலாகும். இந்தக் காலப்பகுதியில் அரச தலைவரின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமில்லை. அதற்கு இடமளிக்கவும் கூடாது.

தற்போதைய அரசியல் நிலமைகளைப் பார்க்கும்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமரும் சாத்தியம் இருக்கின்றது. இவ்வாறான நிலையில் அரச தலைவரின் அதிகாரங்களை இல்லாமலாக்குவது என்பது பரஸ்பர முரண்பாட்டை ஏற்படுத்தும். ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் சிறிலங்கா சுதந்திர கட்சி அமைச்சர்களுக்கும் கூட்டு எதிரணி உறுப்பினர்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் அரச அதிகாரத்தை உடனடியாக இல்லாமலாக்கும் பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. அதற்காக அரசிலிருக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களைப் பிரித்தெடுத்து எங்களுடன் இணைத்துக்கொண்டு இந்த அரசை வீழ்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அடுத்த தேர்தலுக்குச் செல்லும் வரை சகல கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பொறுப்புக்கூறும் அரசை அமைப்பதே எமது எதிர்பார்ப்புமாகும்.

பொதுத்தேர்தல் வரும்வரை பார்த்துக்கொண்டிருக்காமல் அரசை வீழ்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக அரசில் முரண்பட்டுக்கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களை எங்களுடன் கைகோர்க்கச் செய்ய வேண்டும் - என்றார். (5,31)

## கொழும்புத் துறைமுகத்தில் ரஷ்யக் கடற்படைக் கப்பல்

ரஷ்யக் கடற்படையின் பயிற்சிக் கப்பல் நல்லெண்ணப் பயணமாகக் கொழும்புத் துறைமுகத்தைக் கடந்த புதன் கிழமை வந்தடைந்தது. இந்தக் கப்பலுக்குக் கடற்படையின் மரபுகளுக்கு அமைய, கடற்படையினர் வரவேற்பு அளித்தனர். இந்தக் கப்பல் ஐந்து நாள்கள் கொழும்பில் தரித்து நிற்கும். இதன்போது ரஷ்ய மாலுமிகள், கடற்படையினருடன் பல்வேறு விளையாட்டுக்கள், கலாசாரப் பயிற்சி நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

138 மீற்றர் நீளமும், 17 மீற்றர் அகலமும் கொண்ட கப்பல், 6 ஆயிரத்து 900 தொன் எடை கொண்டது. 399 கடற்படையினர் இதில் பணியாற்றுகின்றனர். (5)



## மீதொட்டமுல்ல குப்பைமேடு வெடிப்பு ஆபத்தானதல்ல

### அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, ஏப். 21

மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் கடந்த புதன் கிழமை ஏற்பட்டுள்ள வெடிப்பானது ஆபத்தானதல்ல. இதேவேளை கடந்த 2017ஆம் ஆண்டு மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து வீழ்ந்ததனால் ஏற்பட்ட இடரில் தமது காணிளை இழந்தவர்களுக்கு மிக விரைவில் இழப்பீடு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மின்சக்தி, புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்துறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (5,31)

# ரணிலுடன் இணைந்து பணியாற்றத் தடையில்லை

### சு.கவின் செயலர் துமிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எஞ்சியுள்ள காலமும் கூட்டு அரசைக் கொண்டு செல்வதில் எந்தச் சிக்கல்களும் இல்லை. முரண்பாடுகள் இருந்தாலும் அரச தலைவரின் தலையீட்டுடன் வெற்றிகரமாகக் கூட்டு அரசைக் கொண்டு செல்ல முடியும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நாம் உடன்படிக்கைகளைச் செய்தோ அல்லது தொடர்புகளைக் கொண்டோ அரசில் அங்கம் வகிக்கவில்லை. கட்சியில் இருந்து எவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதுமில்லை. சுதந்திரக் கட்சிக் கூட்டு அரசில் அங்கம் வகித்த போதிலும் அதன் கொள்கையில் இருந்து ஒருபோதும் மாற்றம் பெறவில்லை. இன்று ஒருசில சுயநல நோக்கங்களுக்காக எமது கட்சிக்குள் இருக்கும் சிலர் எம்மைப் பற்றிய தவறான கருத்துக்களை முன்வைத்து விமர்சிக்கின்றனர். கட்சியின் பொதுச் செயலர்கள் இருவரும் ரணிலுடன் தொடர்புகளைக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்று கூறுவது எம்மை மட்டும் அல்ல மைத்திரியையும் விமர்சிக்கும் செயற்பாடாகும்.

கட்சியின் தலைவர் மைத்திரியையும் சேர்த்தே இவர்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அரச தலைவரின் தலைமைத்துவத்தின் கீழேயே சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படும் தீர்மானம் எட்டப்பட்டது. இவர்கள் மறைமுகமாக மைத்திரியைச் சாடும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக எம்மாலும் குற்றஞ் சுமத்த முடியும். நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக மையக் குழுவின் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு, கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட்டுமே செயற்பட்டு வருகின்றோம்.

அரசில் குழப்பங்கள், முரண்பாடுகள் இருந்த போதிலும் நாம் அரசைச் சரியான திசையில் கொண்டு செல்கின்றோம். கொள்கை அடிப்படையில் சிக்கல்கள் இருந்தபோதிலும் தலைமை அமைச்சருடன் தொடர்ந்தும் செயற்பட முடியும். அதில் சிக்கல் எதுவும் இல்லை. நாம் புரிந்துணர்வுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளைச் சரியாக முன்னெடுக்க முடியும் எனறு நம்புகின்றோம். அரசில் இருந்து கொண்டு மக்கள் நலன் சார் நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து அவை தவறும் பட்சத்தில் அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் தயாராகவே உள்ளோம். கூட்டு அரசைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் திட்டத்திலும் மாற்றம் இல்லை. எஞ்சியுள்ள காலம் வரையில் நாம் கூட்டு அரசாகவே பயணிக்கவுள்ளோம்.

சுதந்திரக் கட்சியின் சிலர் எதிரணியில் அமர்வது குறித்துக் கருத்துக்களை முன்வைத்து வருகின்ற போதிலும் அது குறித்துக் சுதந்திரக் கட்சியாக எந்தவித முடிவுகளையும் எடுக்கவில்லை. அரச தலைவர் நாட்டில் இல்லாத நிலையில் கட்சியின் தீர்மானங்கள் எவையும் எடுக்கப்பட முடியாது. மைத்திரி நாடு திரும்பியவுடன் முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படவுள்ளது. அதற்கு முன்னர் எவரும் தன்னிச்சையாகத் தீர்மானங்களை எடுக்க முடியாது. கட்சியில் இருந்து தனித்துச் செல்ல விரும்பும் நபர்களை நாம் ஒருபோதும் தடுக்கவில்லை. மையக் குழுவின் தீர்மானங்களை மீறி எவரும் செயற்பட முடியாது. அரச தலைவர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் வரையில் எந்தக் கருத்துக்களும் உத்தியோகபூர்வமற்றவையாகும் - என்றார். (5,31)

## மரண அறிவித்தல்கள்

# கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

(ஓய்வுநிலை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், MLT- யாழ்.போதனாவைத்தியசாலை)



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் சரவணை மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்து வந்தவருமாகிய கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு 19.04.2018 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திலகவதி அம்மாளின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பத்மினி, குகன், தயாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகலா, சிவகணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், இந்துஷா மயூரி, நிருஜன் ஹரிஸ், திவ்ஷா ஹரிணி ஆகியோரின் அன்புப் பேரனும், கந்தையா, நமசிவாயம், கதிர்காமு, செல்லம்மா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/15855)(11,17)

**021 205 3964, 076 657 5613, 020 8426 8200 - (London)**

# ஆறுமுகம் சுந்தரலிங்கம்

## (வான் சாரதி)



பிறப்பு 30.04.1940 இறப்பு 18.04.2018

யாழ்.செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுந்தரலிங்கம் 18.04.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற வேதநாயகியின் (வேதக்கா) அன்புக் கணவரும், யசோதா, தயாநிதி (நந்தா - நோர்வே), கவிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணமூர்த்தி, செல்வநாதன் (நோர்வே), சாந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌசிகன் - ரம்யா (கனடா), ஏன்ஷன் (துபாய்), கோபீஷன், லக் ஷனா, கிறொய்ஷன், தீபன் - சந்தியா, ஆரபி, சகானா (நோர்வே), ஹரீன், வஹீரா, தஹீன், தமீரா (கனடா) ஆகியோரின் பேரனும், பிரஜித், ரியானா, ஹர்ஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

264, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

**தகவல் குடும்பத்தினர்.**

**077 404 4477** (CS/15834)(11,17)

## திருமதி

# திலகவதி சித்திரவடிவேல்



மலர்வு 20.04.1946 உதிர்வு 20.04.2018

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் மற்றும் மன்னார் மூர்வீதி ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா என அழைக்கப்படும் திருமதி திலகவதி சித்திரவடிவேல் நேற்று (20.04.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலணை கிழக்கைச் சேர்ந்த நாகமணி சித்திரவடிவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகமணி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசலெட்சுமி, ஐயாத்துரை, தனஞ்சயன், மாணிக்கம் மற்றும் தர்மலிங்கம் (மனோகரன்), பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தின சபாபதி, மார்க்கண்டு மற்றும் பவளம், மனோன்மணி, சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஶ்ரீகரன் (செல்லா), நிசாந்தினி (சுவிஸ்), ஶ்ரீராசன், தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கவிதா, ரவிச்சந்திரன், பிரேமாவதி, ஆனந்தராசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருத்திகா, சத்விகா, சர்னிகா, மதுசன், யுவிந்தன், துவிசனா, லோசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 12.30 மணியளவில் அவரது மன்னார் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 462 1361, 077 706 5287** (IN/6530)(11,17)

E,S Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**தேவை**
ஊர் சேவல், பேடு,
கல்பேட், வான் கோழி
என்பவை உடன் தேவை.
தாசன் பாம்
158/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498

**ROLEX HOTEL**
பின்வரும் வேலையாள்கள் தேவை
1. சமையல் உதவியாளர்
2. றோல் போடுபவர்
3. உணவு பரிமாறுபவர்
4. பார்சல் கட்டுபவர்
5. கொத்து றொட்டி, பிறைட் றைஸ் போடுபவர்
6. தேநீர் தயாரிப்பாளர்
ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
077 846 1024, 077 907 9888

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தவனம் சிவகுருநாதன்

தோற்றம் 05.10.1945 மறைவு 01.05.2017

திதி - ஷஷ்டி (21.04.2018)





பன்னிரண்டு திங்கள்
பறந்தோடிப் போனதுவோ ....
தந்தையே உம் முறுவல் கண்டு
சிரித்த முகமும்
கனிவான சொற்களும்
எந்நாளும் எம்மை வழி நடத்தும்...
ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

**குடும்பத்தினர்.**

குருஸ்தான்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

# சிவகுரு சிவபாதம்

*(இளைப்பாறிய நடத்துநர் - இ.போ.ச)*



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவபாதம் நேற்று (20.04.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருமகனும் புனிதவதியின் பாசமிகு கணவரும் சுதர்சினி (ஆசிரியர் - யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்) மற்றும் காலஞ்சென்ற பிரஷீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தனின் (ஆசிரியர் - யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்) பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவனையா, சிவனேஸ்வரி, சிவலிங்கம், சிவம் ஆகியோரின் சகோதரனும் இராஜநாயகி, லீலாவதி, கமலாவதி, சந்திரமோகன் ஆகியோரின் மைத்துனரும் அபிநயா, சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாசிகசாலை ஒழுங்கை,
(ஜி.பி.எஸ்.றோட்), கல்வியங்காடு.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 223 2363**

## உணவு வீண்விரயத்தை தடுக்க விழிப்புணர்வு வாகனப் பேரணி

*இன்று வவுனியாவில் ஆரம்பம்*

'உணவு வீண்விரயத்தைத் தடுக்க வேண்டும்' என்ற தொனிப்பொருளில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி விழிப்புணர்வு வாகனப்பேரணியொன்று இன்று ஆரம்பமாகவுள்ளது என்று அமைப்பின் தலைவர் நகுலேஸ்வரன் புவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணவு வீண்விரயம் ஆகுவதைத் தடுக்கும்நோக்குடன்விண்மீன்கள் அமைப்பை உருவாக்கி இல்ல , பொது நிகழ்வுகளில் மேலதிகமாகவுள்ள உணவுகளைப் பெற்று மக்களுக்கு வழங்கி வருகின்றோம். இதன்ஒருகட்டமாக இன்று, நாளை மற்றும்நாளைமறுதினம்வடக்கின் வாயிலான வவுனியாவிலிருந்து பேரணி ஒன்று ஆரம்பமாகி யாழ்ப்பாணம்ஊடாகபருத்தித்துறைநோக்கிப் பயணிக்கவுள்ளது. இந்த வாகனப் பேரணியில் மக்களும் கலந்து கொள்ளவேண்டும். இன்று காலை 8.00 மணிக்கு வவுனியா பழைய பேருந்துநிலையத்திலிருந்துபேரணி ஆரம்பமாகவுள்ளது. பேரணி ஏ-9 வீதியூடாகஅன்றையதினம்மாலை கிளிநொச்சி நகரத் தைச் சென்றடையவுள்ளது.

நாளை காலை 8 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகஅன்றையநாள்நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்து ஏ-9 வீதியூடாகப் பரந்தன் , இயக்கச்சி ஊடாக யாழ்ப்பாண மாவட்டச்செயலத்தை வந்தடையவுள்ளது. நாளை மறுதினம்காலை8 மணிக்குயாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அன்றைய நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் மைய பேருந்து நிலையத்திலிருந்து பருத்தித்துறை நகரைச் சென்றடையும்- என்றார். (21)

# தமிழர்களின் இதய பூமியை நோக்கி ஈட்டிகள் பாய்கின்றன

### தமிழர்களின் மண், கலை, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும் என்றார் வடக்கு கல்வி அமைச்சர்



**முல்லைத்தீவு, ஏப். 21**

**"தமிழர்களின்இதயபூமிஎன்றுவர்ணிக்கப்படும்முல்லைத்தீவைநோக்கி இன்று ஈட்டிகள்பாய்கின்றன. அந்தச்சவாலைவெல்வதற்குஅனைவரும் இணைந்துபயணிக்கவேண்டும். என்றுவடக்குமாகாணக்கல்விஅமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். முல்லைத்தீவு சிலாவத்தையில் நேற்று முன்தினம்நடைபெற்றவடக்கு மாகாணசித்திரைப்புதுவருடவிழாவில் முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டுஉரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும்தெரிவித்ததாவது:

தமிழர்கள் ஒரு தனி நாட்டுக்காகப் போராடியவர்கள் ஏன் போராடினோம் என்றால் எங்களின் மொழி, பண்பாடு, கலை, கலாசாரம், பாரம்பரிய பண்பாடுளைப் பாதுகாத்துத் தமிழர்களின் அடையாளங்களுடன் இந்த மண்ணில் வாழ வேண்டும் என்பதற்காக. தமிழர்கள்பாரம்பரிய விடயங்களைக் கைவிட்டுவிடுகின்றோம் அல்லது மறந்து விடுகிறோம். அல்லதுபுதியவிடயங்கள்எங்களைஆட்கொண்டு பழைய விடயங்களைத் தள்ளிவிடுகின்றன. தமிழர்களின் பாராம்பரிய விளையாட்டுக்களைப் படிப்படியாக மாகாண மட்ட விளையாட்டுக்களில் உள்ளடக்கவுள்ளோம். கலாசாரத் துறையால் நடத்தப்பட்ட விழாவாக இது அமைந்துள்ளது.

தமிழர்களின்பழைமையைத்தெரிந்துகொள்வதற்காக, பயின்று கொள்வதற்கான களமாக இது அமைந்துள்ளது. இங்கு இருக்கின்ற அரச அதிகாரிகள்எதிர்காலத்தில்தமிழர்களின்பழைமையான விளையாட்டுக்களிலெல்லாம் முன்னு ரிமை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதயபூமியை நோக்கி ஈட்டிகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. தமிழர்களின்இதயபூமி என்று சொல்லப்படும் முல்லைத்தீவு மண்ணில் இந்தக் கலாசார விழாவை முன்னெடுத்துள்ளோம். முல்லைத்தீவு எதிர்காலத்தில் இதயபூமியாக இருக்குமா அல்லது ஈட்டியால் துளைக்கப்பட்டபூமியாகமாறுமாஎன்றஅச்சத்தில்நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம். தமிழர் மண் பாதுகாக்கப்படவேண்டும். தமிழர்பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும். தமிழர்களின் பழைமைகள், அடையாளங்கள் பாதுகாக்கப்படவேண்டும். எதிர்காலச் சமுதாயம்இந்தமண்ணில்முழுமையானஅதிகாரங்களுடன் உரிமைகளோடும் மதிப்போடும் வாழவேண்டும். அதற்காகநாங்கள்அனைவரும் சேர்ந்து பயணிக்கவேண்டும். தமிழர்களின்பாரம்பரியங்கள்வாழ்வியல்விடயங்கள் இன்றுமறைந்துபோய் இருக்கின்றன. நவீன யுகத்துக்குள் தமிழர்களின் பாரம்பரியம் மூழ்கிவிட்டது. இவற்றைஎல்லாம்மாற்றிக்கொண்டுவருவதற்கானதிட்டமிடல்கள், அடுத்ததலைமுறைக்கு தமிழர்களின் பாரம்பரியங்கள் அறியவேண்டும்என்பதுதொடர்பில்தமிழர்களின் பழைய வாழ்வியல், மூதாதையர்கள் பயன்படுத்திய பொருள்கள் அனைத்தையும் மக்களின் காட்சிக்கு வைக்கும் இடமாக ஒன்றினை உருவாக்கவுள்ளோம். அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு அடிப்படை வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதே போன்றுஎங்கள்மூதாதையர்கள்வாழ்ந்தஒரு இயற்கைப்பாரம்பரியக்கிராமத்தைஉருவாக்குதல் என்ற திட்டத்தினையும் உருவாக்கிக் கொண்டுவருகின்றோம். தமிழர்களின்கலாசாரம் அழிந்து போனது என்று இல்லாமல் எவையெல்லாம் எங்களுக்குத் தேவையோ அவற்றைப் புதுமைப்ப டுத்தும் நடவடிக்கையில் வடக்கு மாகாண கலாசாரப் பிரிவு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. பிரதேச மட்டம், மாவட்டமட்டங்களில்நடைபெறும்பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மாகாண மட்டங்களில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

இந்தியாவில் கபடி போன்று தமிழர்களின் விளையாட்டுக்களும் மாறும். தமிழர்களின் அடையாளங்களில் வெளிப்பாடாக அமைய வேண்டும். அதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட வேண்டும். எதிர்வருகின்ற ஆண்டு தமிழர்கள் எதற்காக நீண்ட நெடிய போரினைச் சந்தித்தோமோ அதற்குக் காரணமாகஇருந்தஇனப்பிரச்சினைக்கானஅரசியல் தீர்வுகிடைக்கின்றஒருஆண்டாக, எதிர்காலத்தில் இன மோதலுக்கான காரணம் இல்லாத ஒரு ஆண்டாக, இனமோதலால் ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மீளுகின்ற ஒரு ஆண்டாக அமையவேண்டும் - என்றார்.

(21,ரி3)

போர்க்காலத்தில் கூட இல்லாத

# மாறுபட்ட கலப்புக் கலாசாரத்தையே தமிழர் இன்று கடைப்பிடிக்கின்றனர்

### வடக்கு விவசாய அமைச்சர் கவலை

முல்லைத்தீவு, ஏப்.21

தமிழர்களின் கலை, கலாசாரம், பாரம்பரியங்கள் போர்க் காலத்திலும் இயக்கங்களால் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டன. இன்று அவை மாறுபட்டுதமிழர்கள்கலப்புக்கலாசாரத்தைக் கடைப்பிடிக்கும் நிலையே காணப்படுகிறது என்று வடக்குமாகாணவிவசாயஅமைச்சர் க. சிவநேசன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில்நேற்றுமுன்தினம்நடைபெற்ற வடக்கு மாகாண சித்திரைப் புதுவருட விழாவில் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டுஉரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டம் விளையாட்டுக்களில் மாத்திரம் அல்ல கலை, கலாசாரங்களில் தனித்துவம் வாய்ந்த மிகச் சிறந்த பிரதேசமாகபோருக்குமுன்னர்காணப்பட்டது. போருக்கு முன்னர் இந்தப் பிரதேசத்துக்கானதனித்துவமான பல விளையாட்டுக்களாக போர்த்தேங்காய்உடைத்தல், தாச்சிமறித்தல் உள்ளிட்டவையுடன் கலைகளும் இருந்துவந்துள்ளன. அவற்றில் கோவலன் கூத்து உள்ளிட்ட பல கலைகளை எடுத்துக்கொள்ளலாம். இவைஎல்லாம்அன்றுமக்களால்போற்றப்பட்டுசிறப்பாகவிளங்கிவந்துள்ளன. போர்க்காலத்திலும் இங்கிருந்த இயக்கங்களால் சிறப்பாக இந்தக் கலைகள் வளர்க்கப்பட்டுவந்துள்ளன.

இன்று இருக்கின்ற சூழ்நிலையில் மக்கள் கலை, கலாசாரத்தில் எந்த அளவுக்கு இருக்கின்றார்கள் என்பது கேள்விக்குறியாகின்றபோதிலும் இன்று தமிழர்கள் மாறுபட்ட கலப்புக் கலாசாரத்தைக் கடைப்பிடித்து வருவதைக் காணக்கூடியதாகஇருக்கின்றது. இதில்கைபேசிகளில்கலாசாரம்சிறப்பானஅம்சத்தைப்பெற்றுள்ளது. முகநூல்என்ற ஒன்றில்இன்றுஅனைவரும்மூழ்கியிருக்கின்றார்கள். இதனால் தமிழர்களின் பாரம்பரியங்கள் அனைத்தையும்இழந்து கொண்டு வருகின்றோம்.



இன்றைய இளைஞர்கள் இந்த மின்சாதனப் பொழுது போக்கில் தங்களுக்கு என்று ஒருவட்டத்தை அமைத்துக்கொண்டு இதுதான் உலகம்என்றுவாழ்கின்றஒருசூழ்நிலைஇருக்கின்றது. இளைஞர்களை இதனைவிட்டு வெளியில் கொண்டுவருவது மிகவும் கடினமாக இருக்கின்றது.

இதனால் தான் விளையாட்டுத் துறை கலை, கலாசாரம் போன்றவற்றை வளர்த்தெடுப்பதில் ஒரு கடினமான காலகட்டமாக இன்று அமைகின்றது. எனவே இங்குள்ள அனைவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்றும் இந்தியா வில் இருக்கின்ற தஞ்சைப் பெரியகோவில்தமிழர்களால்கட்டப்பட்டதுஎன்பதால் உலக சாதனையில் உள்வாங்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. ஆகவே இந்த உலகத்தை ஒருகாலம் ஆண்டவன் தமிழன் ஆனால் இன்று நாடுகள் அற்ற அநாதைகளாக வெவ்வேறு நாடுகளில் அலைந்து திரிகின்றவனும் தமிழன் தான்.

இதைதமிழ்மக்கள்புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களின் பண்பாடுகள், கலாசாரங்கள், பாரம்பரியங்களை தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருப்பதுடன் அவற்றை வளர்த்தெடுக்கவேண்டியபொறுப்பும் அவர்களுக்கு உள்ளது. என்றார். (21,ரி3)

## அரச அலுவலர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.21

அரசஉத்தியோகத்தர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.ரி.ஈ.சிஎனும்திட்டமேஅந்தப் புலமைப்பரிசில் திட்டமாகும். அரச திணைக்களங்களில் கடமையாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களது திறனை விருத்தி செய்யும் முகமாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் இந்தப் புலமைப் பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளன. துறை சார்ந்த பயிற்சிகள், கணினிப் பயிற்சி, பொது முகாமைத்துவம், ஆங்கில மொழிப் பயிற்சி எனப் பாகுபடுத்தி விரைவாக அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாண ஆளனிக்குப் பொறுப்பான பிரதித் தலைமைச் செயலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. மேலும் இது தொடர்பான தகவல்களை அறிவதற்கு www.itecgoi.in/stream.list.php என்ற இணையத்தளத்தைப் பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

## தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் நீதியான முறையில் வழங்கப்படவேண்டும்

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், ஏப். 21

தொண்டராசிரியர்களுக்கு வழங்கப்பட்ட மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலை உதாசீனம் செய்து முறையற்றவிதத்தில்முறைகேடானவர்களுக்கு நியமனம் வழங்குவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. எனவே மாகாணக்கல்விஅமைச்சு சிபார்சு செய்து அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தொகையினருக்கு நீதியான முறையில் நியமனம் வழங்க வேண்மென்றுஇலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொண்டராசிரியர்களுடைய நிரந்த நியமனம் தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: வடக்கு, கிழக்குமாகாணங்களில் நெருக்கடியான காலங்களில் தொண்டராசிரியர்களாகக்கடமையாற்றியவர்களுக்குநிரந்தரநியமனம்வழங்குதல்ஆரம்பமாகியுள்ளது. கொழும்புகல்வி அமைச்சின்அதிகாரிகளால் வடக்குமாகாணத்தில்நடத்தப்பட்டநேர்முகப்பரீட்சைகளின் அடிப்படையில் 182பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. எனினும்வடக்குமாகாணத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் பதிவுகளுடன் கடமையில் இருந்தமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு அதிபர்கள் ஊடாக வலயக் கல்விப்பணிப்பாளர்களால் சிபார்சு வழங்கப்பட்டு நேர்முகப்பரீட்சைக்கும்அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோருக்குநியமனம்வழங்கப்படவில்லை. பட்டதாரி ஆசிரியர்கள் அல்லாத ஆசிரிய நியமனங்கள் கொழும்பு கல்வி அமைச்சின் கைகளில் உள்ளதால் இந்த தொண்டராசிரியர்கள் முழுக்கமுழுக்கதமக்குநியமனம்கிடைக்கும்எனஎண்ணியிருந்தனர். அவர்களுக்கு நியமனம் வழங்க வேண்டுமென்று வடக்கு மாகாண சபையும் ஏகமனதாகக் தீர்மானம் நிறைவேற்றி கொழும்பு அமைச்சிடம் வலியுறுத்திய நிலையில், தற்போது இரண்டாம் கட்ட நேர்முகத்தேர்வு கொழும்பில்நடைபெறுகின்றது. ஆனால் இந்த நேர்முகத் தேர்வுக்குப் பலருக்கு அழைப்புக்கிடைக்கவில்லை. மாறாக நேர்முகத்தேர்வு நடைபெறும்கல்விஅமைச்சுக்காரியாலத்தில்அரசியலாளர்களின்நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதோடு ஒவ்வொருவரும்ஒவ்வொரு அரசியல்வாதிகளின் சிபார்சுகளுடன் செல்கின்றனர் என்று கல்வி அமைச்சுக்கு நீதிகேட்டுச் சென்ற வடபுலத்துஆசிரியர்கள்கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு என நியமனம் வழங்குகின்ற கொழும்பு கல்வி அமைச்சு வடக்கு மாகாணத்தின் யதார்த்தமான அறிவுறுத்தலை அல்லது சிபார்சுகளைஏற்றுக்கொள்ள வேண்டும். மாறாக அதை விடுத்துவிட்டு அமைச்சரவைஅங்கீகாரம்கிடைத்த ஆசிரியத்தொகைக்கு ஆள்களைத் தேடிப்பிடிக்கக்கூடாது. உண்மையாகக் கடமை செய்து சம்பவத்திரட்டுப் புத்தகம் தொலைந்தவர்களுக்குஎன்னமாற்றுவழி என்பதனைக் கண்டறிந்துஅவர்களுக்கும்நியமனம் வழங்க வேண்டும். மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலையின்அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலை உதாசீனம் செய்து முறையற்ற விதத்தில் முறைகேடானவர்களுக்கு நியமனம் வழங்குவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒருபோதும் அனுமதிக்காது. ஆகையால் மாகாணக் கல்வி அமைச்சு சிபார்சு செய்து அமைச்சரவைஅங்கீகாரம் கிடைக்கப்பெற்றதொகையினருக்கு நீதியான முறையில் நியமனம் வழங்க வேண்மென்றுஇலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது என்றுள்ளது. (21)

## குறைந்த விலையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21

அரியாலை புங்கன்குளம் பகுதியில் உள்ள வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகசகலவிதமானஉற்பத்திப்பொருள்களையும் குறைந்தவிலையில்நுகர்வோர்பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கவும், சந்தைப்படுத்தும் முகமாகவுமே இந்த விற்பனைச் சந்தை அங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றும் சமாசத்தின் பொது முகாமையாளர் கே. விஷ்னுகரன் தெரிவித்தார். வடக்கில் ஏனையஉற்பத்திப்பொருள்களும்இந்தச்சந்தைஊடாக விற்கப்படட்டும்என்றும்அவர்தெரிவித்தார். (21,17)



ஓரணியில் திரண்டு

## காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்க வேண்டும் தமிழ்க் கூட்டமைப்பு

வீதியில் போராடும் உறவுகள் வலியுறுத்து

**கிளிநொச்சி, ஏப். 21**

**தமது உறவுகளைக் கண்டறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓரணியில் பலம் சேர்க்கவேண்டும்என்றுகிளிநொச்சியில்தொடர்போராட்த்தில்ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வலியுறுத்தினர்.**

தியாகத் தாய் அன்னை பூபதியின் நினைவெழுச்சி வணக்க நாள் நேற்று முன்தினம் கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்றலில் நடந்தது ஒரு வருடத்துக்கும்மேலாக தமது உறவுகளுக்காகப் போராடி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டக் கொட்டகையில் கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனிடமே உறவினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; நாம்இந்தவயதிலும்எமதுஉறவுகளுக்காக ஒருவருடத்துக்கும்மேலாக இந்த வீதிக்குஅருகில்கொட்டகைக்குள்இரவு பகலாகத் தவமாய்த் தவமிருக்கின்றோம். எமது கோரிக்கைகளை இந்த அரசும் ஏற்று, எமது பிள்ளைகளை அடைத்து வைத்துள்ள இராணுவச் சித்திரவதை முகாம்களிலிருந்து மீட்டு எம்மிடம் ஒப்படைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காமல் இருந்து காலத்தைக் கடத்துகின்றது. இலங்கைஇராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுசிறைமீண்டுவந்தவர்கள்பலர் கூறுகின்றார்கள்; காணாமல் போனதாகக் கூறப்படும் பலர் சுயநினைவற்றநிலையில் இராணுவத்தின் பாதுகாப்பில்உள்ளார்கள்என்றுஅவர்களைஇராணுவம்பலவதைமுகாம்களில் மறைத்து வைத்துள்ளது. அவர்களைத் தாம் நேரடியாகவே கண்டுள்ளோம் என்று என்று கூறுகின்றனர். இதைவிட நேரடி ஆதாரங்கள் என எவற்றை இந்த அரசு எதிர்பார்க்கின்றது. வெறும் கண்துடைப்புக்காகவும் எங்களை ஏமாற்றிக் காலத்தைக் கடத்துவதற்காகவுமேகாணாமல்போனோருக்கான அலுவலகம் என்னும் பெயரில் ஒரு அலுவலகத்தை அமைப்பதற்கு அரசு முயற்சித்துள் ளது. இதனால் எமக்கு எந்தவித நன்மையும் இல்லை. இந்த அலுவலகத்தால்எமது கண்முன்னே இலங்கை அரசபடைகளான இராணுவம் பிடித்துச் சென்று இப்போது காணவில்லை என்று நாம் தேடி அலையும் எமது உறவுகள் எங்குள்ளார்கள்? எந்தச் சிறைகளில் உள்ளார்கள்? எந்த இராணுவ வதை முகாம்களில் மறைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்? என்பதையாவது கண்டறிந்துகூறிஎமதுஉறவுகளைஎமக்குக் காண்பிக்கவாவது உதவி செய்ய் முடியுமா? இந்தக்காணாமல்போனோரது அரசஅலுவலகத்தால்?. தமிழ்தேசியக் கூட்டமைப்பினராகிய உங்களைத் தான்நாம்நம்பியுள்ளோம். எமது உறவுகளைமீட்பதற்குபன்னாடுகளிடமும் இலங்கைஅரசிடமும்உரியவகையில் அழுத்தங்களைப் பிரயோகித்து எமது உறவுகள் எங்கே என்பதைக் கண்டறிந்து எமக்கு நீதி கிடைக்க உதவுவீர்கள் என நம்புகின்றோம் - என்றனர்.

இதனைக்கேட்டநாடாளுமன்றஉறுப்பினர்: வலிந்து காணாமல் போன உறவுகளைக் கண்டறிவதற்காகவும் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் தாம் தம்மாலான நடவடிக்கைகளைச் செய்து வருவதாகக்கூறினார். (21,426)

## பொதுப்பணிகளில்படையினரைஅனுமதிப்பது போராடும்எமது இனத்துக்குப்பெரும்இழக்கு!

*மாகாணசபை உறுப்பினர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு*

நாம் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டாலும், எமது தேசியவிடுதலைப் போராட்டம் இன்னமும் முடிவுக்குவரவில்லை. இந்தநிலையில், எந்தப்படையினருக்கு எதிராக நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடினோமோ, அதே படையினரைப் பொதுப் பணிகளில் நாம் அனுமதிப்பது போராடும்எம்இனத்துக்குப்பெரும் இழுக்காகவே அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கோண்டாவில் ஸ்ரீ நாராயணாசனசமூகநிலையத்தின் 66 ஆவது ஆண்டுவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிலையமுன்றலில் நடைபெற்றது. இந்த நிகழ்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; வடக்குமாகாணத்தின் ஆளுநர் றெஜினோல்ட் குரேயை மாநகரசபையின் புதிய முதல்வர் ஆர்னோல்ட் மரியாதையின்நிமித்தமாகச் சந்தித்துள்ளார்.

அப்போது, நகரை அழகுபடுத்துவதற்கு இராணுவத்தின் உதவியைப் பெற்றுத்தருவதாகத் தன்னிடம் ஆளுநர்சொன்னதாகஆனோல்ட் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அவர் இராணுவத்தின் உதவியை ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பொதுமக்கள் செய்ய வேண்டிய பொதுப் பணிகளுக்கெல்லாம் இராணுவத்தைப் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சனசமூக நிலையங்கள் சமூகப்பணிகளில்போட்டிபோட்டு ஈடுபட்டகாலம் ஒன்று இருந்தது. போராட்டகாலத்தோடு இந்தப்பணிகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் கையில் எடுத்தன. இப்போது அந்தச் சேவைகளில் இராணுவம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இராணுவம் அவசரநிலைமைகளின் போது இடர்முகாமைத்துவங்களில் ஈடுபடுத்தப்படுவது உலக நடைமுறை. ஆனால் இங்கு இராணுவம் பொலுத்தீனும் அல்லவா பொறுக்குகின்றது. நாங்கள் செய்யவேண்டியபணிகளில் எல்லாம் இராணுவத்தை நுழைய விடுவோமானால் ஊர்கூடித் தேர் இழுக்கும் பெருமையைக் கொண்டுள்ளநாங்கள், கடைசியில் இராணுவம், கூடித் தேர் இழுத்த சிறுமைக்கு ஆளாகவேண்டிவரும். இராணுவம் வெளியேறவேண்டும், இராணுவம்ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்கவேண்டும்என்றுநாம் ஒருபுறம்போராடிக்கொண்டு, இன்னொருபுறம் இராணுவத்தைச்சமூகசேவைக்கும் அழைப்பதுஒன்றுக்கொன்று முரணானது. இதுஒருபோதும் ஏற்புடையதாகாது. இந்தநடைமுறையைஅனுமதித்தால் இராணுவம் தமிழ்மக்கள் மீதுகரிசனையாக உள்ளது, படையினரும் தமிழ் மக்களும் இரண்டறக் கலந்துவிட்டார்கள் என்று அரசோடு சேர்ந்து நாமும் பன்னாடுகளுக்குச் சொன்னவர்கள் ஆவோம் என்றார். (21)



## ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.21

இலங்கையில் நேற்று முதல் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்குக் கட்டணச் சீட்டு வழங்கக்கூடிய மீற்றர் பொருத்தும் நடைமுறை நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது என வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

கட்டணச் சீட்டு வழங்காத முச்சக்கர வண்டிகள் தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு மக்களிடம் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

முச்சக்கரவண்டிகளில் பல்வேறு கட்டணங்கள் அறவிடுவதன் மூலம் மக்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதால் இந்தச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பயணிகளுக்குக் கட்டணப்பட்டியல் வெளியிடக்கூடியவகையில் முச்சக்கரவண்டிகளுக்காக மீற்றர் பொருத்துவதற்கு வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை 6 மாத கால அவகாசம் வழங்கியிருந்தது. அதற்கமையவே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ற-ரி5)

# சு.கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்கு வருவர்

### ரோஹித்த அபேகுணவர்த்தன நம்பிக்கை



கொழும்பு, ஏப்.21

அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகாத சிறிலங்காசுதந்திரக்கட்சியின் குழுவினர் அடுத்த மாதம் எதிர்க்கட்சித் தரப்பில் அமருவார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்த தெரிவித்தார். பத்தரமுல்லையில் உள்ள சிறிலங்கா பொதுஜனமுன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எஞ்சிய ஒன்றரை வருடகாலப்பகுதிக்காகப் புதிய அமைச்சரவை ஒன்றை நிறுவுவது நகைப்புக்குரிய விடயம் ஆகும்.

மே மாதம் அளவில் சுதந்திரக் கட்சியின் எஞ்சியுள்ள உறுப்பினர்களும் தமது தரப்பில் இணைவார்கள்.

இந்த அரசை வீழ்த்த மகிந்த ராஜபக்சவின் தலைமையில் நாட்டு மக்களுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது - என்றார். (ற-ரி5)

## பல குற்றங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

கொழும்பு, ஏப்.21

பல குற்றச்செயல்களில் ஈடுபடும் கும்பல் ஒன்றின் உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். தொட்டலங்க பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு- 15 பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுடைய இரண்டு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் திட்டமிட்ட குற்றச்செயல் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## விசாரணைக்குச் சென்ற பொலிஸ் மீது தாக்குதல்

கொழும்பு, ஏப்.21

உடுகமப் பொலிஸ் நிலையத்தில், பெண்ணொருவரின் முறைப்பாட்டை விசாரணை செய்யச் சென்றிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர், தாக்குதலுக்கு இலக்காகி உடுகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவுசெய்திருந்த பெண்ணே, விசாரணைக்காக சென்றிருந்த பொலிஸ் அதிகாரியை மண்வெட்டியால் தாக்கியுள்ளாரெனப், பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில், கெப்பிட்டியாகொடப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணைப் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

### கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்குள்ளான

## ஆசிபாவுக்கு நீதி கோரி கண்டன ஆர்ப்பாட்டம்




கொழும்பு, ஏப்.21

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் கதுவா பகுதியில் 8 வயது சிறுமி கடத்தப்பட்டு கூட்டு பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக்கொலை செய்யப்பட்டமைக்கு நீதி வழங்கக் கோரி கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்துக்கு முன் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடுசெய்திருந்தது.

சிறுமியின் வன்முறையைக் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும், குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் எனவும் இந்தியாவில் இதுபோன்ற வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தியதலைமைஅமைச்சருக்குக் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் உருவம் மற்றும் இந்திய தேசியக் கொடியை நடுவீதியில் எறிந்து காலால் மிதித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதேவேளை, ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் கையளித்த மனுவை இந்திய தூதரக அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். (ற-ரி5)

## கக்கப் பட்டாஸுடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஏப்.21

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பன்றிக்கு வைக்கும் கக்கப் பட்டாஸ்(வாய் வெடிகள்) நான்கை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் அக்போபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கித்துல் ஊற்று, அக்போபுரப்பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் கித்துல் ஊற்று காட்டுப் பகுதியில் கக்கப் பட்டாஸுடன் நடமாடித்திரிந்த வேளையே கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் நேற்று கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## ஆனமடுவவில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.21

ஆனமடுவ தலாகொலவெவ, தல்கெஸ்வெவ வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ உதாகமப் பகுதியைச் சேர்ந்த பி.எம்.பி. மஹிந்ததாச (வயது 73) என்பவரே, விபத்தில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனமடுவ தல்கஸ்வெவப் பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிர் திசையில் வந்த டிப்பர் வாகனம் ஒன்றுடன் மோதியே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் ஆனமடுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்தார்.

விபத்துடன், தொடர்புடைய டிப்பர் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# நிதி மூலங்களை கண்டுபிடித்து திட்டத்தை செயற்படுத்துங்கள்

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரெட்ணம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.21

உள்ளூராட்சி சபைகள் சேகரித்த நிதியை செலவு செய்யாமல், வேறு வழிகளில் நிதியைத் தேடித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் சேகரித்துவைத்த நிதியை செலவுசெய்தல் என்பது ஒருசபைக்கான ஆரோக்கியமான திட்டமல்ல. மக்கள் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் பிரதேசத்துக்கான திட்டங்களைத் தயாரித்து, நிதி நிறுவனங்களிடம் நாடி நிதியைக் கண்டுபிடித்து வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய கொள்கைத்திட்டங்களை வகுப்பதே சிறப்பான செயல்திட்டமாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் உள்ளூராட்சிசபை ஊடாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த காலத்தில் இந்தப்பிரதிநிதிகளில் பலர் முழுநேர சமூகசேவைகளையும், சிலர் பகுதிநேர சமூகசேவைகளையும் ஆற்றியிருந்தனர். ஒருசில பிரதிநிதிகள் வேலைப்பழு காரணமாக சமூகசேவைகளில் ஈடுபடவில்லை எனத் தெரியவருகிறது.

இருந்தாலும் முதல்வர், பிரதிமுதல்வர், தவிசாளர், பிரதித்தவிசாளர், உறுப்பினர்கள், குழுத்தலைவர்கள், குழு உறுப்பினர்கள் சமூகத்திற்காக சேவை செய்வதற்காக போட்டி போட்டு வலுச்சேர்ப்பதைப் பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றன.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் ஒவ்வொரு உத்தியோகத்தரும், ஊழியர்களும் வியர்வை சிந்தி முன்னேற்றகரமாக உள்ளூராட்சி சபைகளை மாற்றியதே வரலாறாகும். சபைக்குத் தேவையான நிதிகளை நிறுவனங்கள், மாகாணஅரசு, மத்தியஅரசு, வரிஅறவீடுகள், வெளிநாடுகள் ஊடாக நிதியைப் பெற்று அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க வேண்டும்.

எது நடக்கின்றதோ? இல்லையோ நிதி இல்லாமல் மக்கள் சேவையை முன்னெடுக்க முடியாது எனவே நிதி வருமானத்தை அதிகரிக்க சிறப்பான வேலைத்திட்டங்களை புத்திசாதுரியமாக முன்னெடுக்க வேண்டும் என்றார். (ற-ரி5)

## அர்ஜுன் மகேந்திரனுக்கு சிவப்பு அறிவித்தல்

கொழும்பு, ஏப்.21

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனைக் கைது செய்ய பன்னாட்டுப் பொலிஸார் நேற்று சிவப்பு அறிவித்தல் பிடியாணை பிறப்பித்துள்ளனர். மத்திய வங்கியின் பிணை முறி மோசடி சம்பந்தமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடத்தி வரும் விசாரணைகளுக்கு அமைய பன்னாட்டுப் பொலிஸார் இந்தப் பிடியாணையைப் பிறப்பித்துள்ளனர். இலங்கையில் பிறந்த அர்ஜுன் மகேந்திரன் சில வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூர் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டார். வங்கித்துறை சிறப்பான அனுபவங்களைக் கொண்டுள்ள அவர், சிங்கப்பூரில் மாத்திரமல்லாது சில நாடுகளில் வங்கிகளில் தலைமை அதிகாரியாக பணியாற்றியுள்ளார். (ற-ரி5)

## ஹொரண இறப்பர் தொழிற்சாலை முகாமையாளர் விளக்கமறியலில்

கொழும்பு, ஏப்.21

பெல்லப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள இறப்பர் தொழிற்சாலை முகாமையாளரை எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று ஹொரணை, நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே பதில் நீதிவான் காந்தி கன்னங்கர இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இறப்பர் தொழிற்சாலையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஐவர் உயிரிழந்தனர் பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தொழிற்சாலையின் முகாமையாளர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தத் தொழிற்சாலையில் இரசாயனப் பகுப்பாய்வை மேற்கொள்ள கொழும்பிலிருந்து இரசாயனப் பகுப்பாய்வுக் குழுவொன்றும் நேற்றுச் சென்றது. இதனால் இந்தத் தொழிற்சாலையில் பொதுமக்கள் உள்நுழையாதவாறு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற-ரி5)

# சிரியப் பாலைநிலத்தில் உச்சக்கட்டத் தாக்குதல்

டமஸ்கஸ், ஏப். 21
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் சிரிய அரச படைக்கும் இடையில் சிரியப் பாலைநிலத்தில் உச்சக்கட்டப் போர் இடம்பெற்று வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுபட்டுள்ளது. சிரியாவின் சில பகுதிகளில்தான் ஐ.எஸ். ஐ.எஸ். தற்போது ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த நிலையில் சிரியப் பாலைநிலத்தில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கும் சிரிய அரச படைக்கும் இடையில் கடும்போர் இடம்பெற்று வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. (ம)



# ஐ.எஸ்ஸிடம் இருந்து மீண்டது மாராவி தீவு

மணிலா, ஏப். 21
பிலிப்பைன்ஸின் மாராவி தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடியில் இருந்து மீட்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் மத்திய பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் விழுந்தது மாராவி தீவு. தீவை மீட்பதற்கான போரை பிலிப்பைன்ஸ் முன்னெடுத்து வந்தது. மாராவி தீவில் வசித்துவந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது. நகரை மீட்கும் போர் தொடர்ந்து வந்தது. எனினும் மாராவியை முழுமையாகக் கைப்பற்றிவிட முடியவில்லை. மராவி மீட்கப்படுகிறது என்று பலமுறை தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளை முழுமையாக வீழ்த்த முடியவில்லை. இந்த நிலையில் தீவு முழுவதுமாக மீட்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டது. (ம)







## இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதா?

# பன்னாட்டு அமைப்பு கவுட்டாவில் ஆய்வு

டமஸ்கஸ், ஏப். 21
சிரியாவில் கவுட்டா, டௌமா நகர்களில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதா என்று பன்னாட்டு அமைப்பு நேற்றுமுன்தினம் ஆய்வு நடத்தியது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



சிரிய அதிபர் அசாத் சியா பிரிவு இஸ்லாமியர். அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி சன்னி பிரிவு இஸ்லாமிய ஆயுதக் குழு போராடி வருகிறது. அந்த ஆயுதக்குழுவின் பகுதிகளுக்குள் அவ்வப்போது போர்க் குற்றங்களை சிரிய அரசு நிகழ்த்துவதுண்டு.

இதன்படி கவுட்டா, டௌமா நகர்களில் அண்மையில் சிரிய அரசால் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இரசாயனத் தாக்குதலில் (வேதியல்) சுமார் 150 அப்பாவிகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல் சிரிய அரசாலேயே நடத்தப்பட்டது என்று குற்றம் சுமத்திய அமெரிக்கா, தனது தலைமையில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸையும் இணைத்துக் கொண்டு சிரியா மீது தாக்குதல் நடத்தியது. கவுட்டா, டௌமா நகர்களில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதா என்று உறுதிப்படுத்த பன்னாட்டு அமைப்புக்களை அங்கு அனுமதிக்க வேண்டும் என்று மேற்கத்திய நாடுகளும், அரபு நாடுகளின் கூட்டமைப்பும் கோரிக்கை விடுத்தன.

இதையடுத்து அந்த நகர்களில், தாக்குதல் நடந்ததாகச் சொல்லப்படும் இடங்களில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டனவா என்று ஆய்வு நடத்த பன்னாட்டு அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கியது ரஷ்யா. கடந்த புதன் கிழமை பன்னாட்டு தொண்டு நிறுவனமொன்று அங்கு ஆய்வு நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் கிளர்ச்சியாளர்களுக்கும் சிரிய இராணுவத்துக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதை அடுத்து அன்றைய ஆய்வுப் பணிகள் கைவிடப்பட்டன. இதையடுத்து மறுநாள் அதாவது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆய்வு இடம்பெற்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. ஆய்வின் முடிவுகள் இன்று அல்லது நாளை அறிவிக்கப்படலாம்.


எனினும், ஆதாரங்களை அழித்த பின்னரே சிரிய அரசும் ரஷ்யாவும் ஆய்வு நடத்த அனுமதித்தன என்று மேற்கத்திய நாடுகளும் அமெரிக்காவும் தெரிவித்தன. (ம)

# ‘காஸ்ரோ’ சகாப்தம் கியூப

கியூபாவின் அதிபராக இருந்த ரவூல் காஸ்ரோ வயோதிபம் காரணமாக தனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்து, புதிய அதிபராக மிக்வெல் டயாஸ் என்பவர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

அமெரிக்காவுக்கு அருகில் உள்ள மிகச்சிறிய தீவு நாடு கியூபா. கம்யூனிஸ்ட் ஆட்சியில் இருக்கும் இந்த நாட்டில் மறைந்த புரட்சியாளரான பிடல் காஸ்ரோ சுமார் 30 ஆண்டுகள் அதிபராக இருந்தார். அவருக்குப் பின் அவருடைய சகோதரர் ரவுல் காஸ்ரோ அதிபர் பதவியில் இருந்தார். 87 வயதான ரவுல் பதவியிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெற்றது: இதில், துணை அதிபரான மிக்வெல் டயாஸ் அதிபர் பதவிக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அவரை எதிர்த்து எந்த வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை. எனவே, மிக்வெல் டயாஸ் கனல் போட்டியின்றி அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த சில தசாப்தங்களாக காஸ்ரோ குடும்பத்தினர் அதிபராக இருந்த நிலையில், அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் அதிபர் பதவிக்காக தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (ம)



# ட்ரம்ப் - அபே திடீர்ச் சந்திப்பு


வொஷிங்டன், ஏப். 21
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஜப்பான் அதிபர் சின்சோ அபே இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கொண்டனர். கொரியத் தீபகற்பப் பரபரப்புக்களுக்கு இடையே இந்தச் சந்திப்பு மிக முக்கியத்துவமானது என்று பார்க்கப்படுகிறது.



அணுவாயுதச் சோதனைகள், ஆயுதச் சோதனைகள் ஆகியவற்றைக் கைவிட்டு சமரசமாவதற்குத் தயார் என்று வடகொரியா அறிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவருக்கும் இடையில் அடுத்த மாதம் பேச்சு நடைபெறவுள்ளது. வடகொரியாவுடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர் வடகொரியா விவகாரத்தில் அதிகம் தொடர்புபட்டிருக்கும் தென்கொரியா, ஜப்பான் ஆகியவற்றின் அதிபர்களுடன் பேச்சு நடத்த ட்ரம்ப் விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து ட்ரம்ப் தென்கொரிய அதிபர் மூன் ஜெகன் இருவரும் அண்மையில் அலைபேசியில் ஆலோசனை மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து ட்ரம்ப் அபே இடையிலான சந்திப்பு அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
வடகொரியாவுக்கு விதிக்கக்கூடிய நிபந்தனைகள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்ரின் - பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிரிய விவகாரம் தொடர்பிலும் இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியிருக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



அமெரிக்காவின் ஒகலஹோமா மாகாணத்தில் கடும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. சுமார் 250 வீடுகள், 200 வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. வனவிலங்குகள் ஏராளமாக இறந்து கிடக்கின்றன. தீயைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு உலங்கு வானூர்திகள் மூலமாகவும், தீயணைப்பு வாகனங்களின் மூலமாகவும் கடும் முனைப்புக் காட்டப்படுகிறது. எனினும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் குறிப்பிட்டது. (ம)




## 9 நிமிடங்களில் ஒரு நாற்காலி


சிங்கப்பூரில் நயாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் நாற்காலி தயாரிக்கும் ரோபோக்களை உருவாக்கியுள்ளது. அது 8 நிமிடம் 55 வினாடிகளில் மர நாற்காலியை தயாரித்து முடிக்கிறது.
'ரோபோ'க்களின் பயன்பாடு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வெளிநாடுகளில் மருத்துவ மனைகள், விடுதிகளில் பணிபுரியும் 'ரோபோ'க்கள் தற்போது பொருள்கள் தயாரிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளன.
சிங்கப்பூரில் நயாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் நாற்காலி தயாரிக்கும் ரோபோக்களை உருவாக்கியுள்ளது. அளவாக வெட்டி தயாராக வைக்கப்பட்டிருந்த மரச்சட்டங்களை எடுத்து ஸ்குரூ ஆணிகள் மூலம் அவற்றை நேர்த்தியாகப் பொருத்துகிறது. இந்த ரோபோக்கள் எதிர்காலத்தில் அதிகம் உருவாக்கப்படும் என்று குறித்த பல்கலைக் கழகம் அறிவித்தது. (ம)

# அணு உலை அருகே ஈரானில் நிலநடுக்கம்

தெக்ரொன், ஏப். 21
ஈரானின் தெற்குப் பகுதியில் புசேஹர் மாகாணம் அமைந்துள்ளது. இதன் தலைநகரான புசேஹரில் பெரிய அணு உலை செயல்பட்டு வருகிறது. இந்த அணு உலை அமைந்திருக்கும் காகி பகுதியில், நேற்றுக் காலை 6.30 மணியளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 5.9 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது.
எனினும், இந்த நிலநடுக்கத்தின் காரணமாக, அணு உலை உட்பட அந்தப் பகுதியில் அமைந்திருக்கும் எந்தக் கட்டடங்களுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என ஈரான் அரசு தெரிவித்துள்ளது. உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்று ஈரான் குறிப்பிட்டது. (ம)



# ூபாவில் முடிந்தது



மிக்வெல் டயாஸ் கனல் போட்டியின்றி அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த சில தசாப்தங்களாக காஸ்ரோ குடும்பத்தினர் அதிபராக இருந்த நிலையில், அந்த குடும்பத்தைச் சேராத ஒருவர் அதிபர் பதவிக்காக தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# தற்கொலைதாரி எறும்புகள்



எதிரிகளிடம் இருந்து தனது இனத்தைக் காப்பாற்ற தற்கொலை செய்து கொள்ளும் எறும்பு இனம் தென்கிழக்காசிய வெப்ப மண்டலக் காடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.
இந்தக் காடுகளில் 15 வகை எறும்பு இனங்கள் கண்டறியப்பட்டன. அதில் ஓர் இன எறும்புகளே தமது இனத்துக்காக தத்தமது உயிரைத் துறக்கின்றன. இந்த எறும்பு வகைக்கு கொலோபோசிஸ் என்ற பெயரிடப்பட்டுள்ளது.
எதிரிகள் தம்மைத் தாக்க வந்தால் இந்த எறும்புகள் ஒரு வகை நச்சு திரவத்தைச் சுரக்கின்றன. இந்தத் திரவம் எதிரி எறும்புகள் சிறு பூச்சிகள் ஆகியவற்றைக் கொல்வதுடன் இதைச் சுரக்கும் எறும்புகளும் சாவடைகின்றன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நடைபாதை வியாபாரமும் நடைமுறைச் சிக்கலும்

வவுனியா நகரசபைக்கு உட்பட பகுதியில் நடைபாதை வியாபாரங்களை அகற்றிய சபைப் பணியாளர்களுக்கும் வியாபாரத்தை நடத்தியவர்களுக்கும் இடையே முரண்பாடுகளும் இழுபறிகளும் ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. போருக்குப்பின்னரானசூழலில்மீளெழுந்துவரும்வடக்கு–கிழக்கு மாகாணங்களில் இது ஒரு பெரும் பிரச்சினையாக அண்மைக் காலங்களில் மேற்கிளம்பி வருகின்றது. வெறுமனே வியாபாரப் பிரச்சினையாக, சட்டத்துக்குப் புறம்பானநடவடிக்கைகள்மீதான கட்டுப்பாடாக வெளித்தோற்றத்துக்கு இது காணப்பட்டாலும் சமூக ரீதியானதும் இன ரீதியானதுமான சிக்கல்கள் இதன் அடியாழத்தில் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும். அது மிக நுணுக்கமாகவும் பிரச்சினைகளைத் தூண்டும் விதத்தில் இல்லாத வகையிலும் கையாளப்படவேண்டும்.

போரால்பெருமளவில்பொருளாதாரப்பாதிப்புக்களைஎதிர்கொண்டவர்கள்வடக்கு– கிழக்குவர்த்தகர்கள். உள்ளூராட்சிசபைகளுக்கு வரி மற்றும் வியாபார உரிமக்கட்டணம் என்று வருடாவருடம் கணிசமான பணம் செலுத்தி வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள் இவர்கள். போருக்குப் பின்னரான காலத்தில் கடை கட்டுவதும் கடை நடத்துவதும் சகட்டு மேனிக்கு நடந்துவரும் நிலையில் கடும் போட்டிக்கு மத்தியில் தங்கள் வியாபாரத்தை நிலைநிறுத்தவும் போட்ட பணத்துக்கு மேலாகச் சிறிதளவு லாபத்தையாவது உழைக்கவும் இவர்கள் திணறுகிறார்கள். பெரும் வர்த்தகர்கள் இதற்கு விதிவிலக்கு.

இவ்வாறு தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தத் திணறும் வியாபாரிகளும் கடனை உடனைப் பட்டு தமது வியாபாரத்தை கொஞ்சம் விரிவாக்கம் செய்வதற்கு முயலும் நடுத்தர வர்த்தகர்களும் நடைபாதை வியாபரம் தமது வயிற்றில் அடிக்கின்றது என்று கருதுகிறார்கள். கடை வாடகையோ, மின்சார மற்றும் ஏனைய செலவுகளோ, வரிகளோ, வியாபார உரிமக்கட்டணங்களோ இன்றி வியாபாரத்தில் ஈடுபடும் நடைபாதை வியாபாரிகள் குறைந்த விலையில் பொருள்களை விற்கும்போது நடுத்தர மற்றும் அதற்கடுத்த மட்ட மக்களிடம் இருந்து தங்களுக்குக் கிடைக்கும் வியாபாரம் தடைப்பட்டுப் போகிறது என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அது நியாயமானதும்கூட.

அதேநேரத்தில் மக்கள் மலிவாக எங்கு கிடைக்கின்றதோ அங்கு வாங்குவதையே விரும்புவார்கள். சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையும் அதுவே! இங்கு எந்தப் பொருளுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலையோ தரமோ கிடையாது. சந்தையின் கேள்விக்கேற்ப அவை இரண்டும் மாறிக்கொண்டே இருக்கும். எனவே மலிவு என்பது மக்களைக் எப்போதுமே கவரும்.

நடைபாதைக் கடைகளைத் தடைசெய்யும்போது முதலாவது மக்களுக்கு மலிவாகக்கிடைக்கும் பொருள்கள் தடைப்பட்டுப் போகும். சந்தையில் கணிசமான போட்டி குறையும். இதிலுள்ள இரண்டாவதும் முக்கியமானதுமான விடயம் என்னவென்றால், நடைபாதை வியாபாரத்தைத் தடுப்பது வறிய மக்களின் வாழ்வாதார வழிகளில் ஒன்றை அடைத்துவிடும். ஒருசிறு முதலைக்கொண்டு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும் நடத்துவதற்கும் வாய்ப்பானது நடைபாதை வியாபாரம்தான். தெரிந்தவர் அறிந்தவரிடம் சிறு தொகைக் கடனைப் பெற்றாவது இந்த வியாபாரத்தை ஆரம்பித்து ஒரு சிறு லாபத்தைப் பார்த்து தமது குடும்பத்தையும் காப்பாற்றுவதற்கு ஒருவருக்கு வாய்ப்பளிக்கிறது நடைபாதை வியாபாரம். அதனைத் தடைசெய்யும்போது வறிய மக்களின் வாழ்வாதார வழிகளில் ஒன்றை நாம் முற்றாக அடைக்கிறோம் என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

நடைபாதை வியாபாரத்தை முற்றாகத் தடை செய்வதென்பது முதலாளித்துவ சமூகமாக நாம் விரைவாக மாறிவருவதன் வெளிப்பாடுதான் என்பதையும் ஏற்றுத்தானாகவேண்டும். பணம்படைத்தவர்கள் அல்லது பணத்தைக் கடனாகவேனும் பெறமுடிந்தவர்கள் மட்டுமே மேலும் மேலும் பணத்தைச் சம்பாதிக்க முடியும் என்கிற நிலமையை அது ஏற்படுத்திவிடும்.

நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் வெளிமாவட்டக்காரர்களாக, குறிப்பாக வடக்கு –கிழக்கு மாவட்டங்களுக்கு வெளியே வாழ்பவர்களாக இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டும் உண்டு. அதில் உண்மையும் உள்ளது. ஆக, இவர்களால் எங்கள் பகுதியிலிருந்து பணம் பெயர்த்து எடுக்கப்படுகிறது என்கிற கோபமும்கூட வெளிப்படுத்தப்படுகின்றது.

இதுவும் ஆபத்தான போக்கு. இலங்கையின் பல பகுதிகளிலும் 1980களுக்கு முன்னர் தமிழர்கள் வியாபாரங்களை நடத்தியிருக்கிறார்கள். இப்போதும் கொழும்பு உட்படப் பல இடங்களிலும் நடத்துகிறார்கள். அப்படியிருக்கும்போது பிரதேச மற்றும் இன வாதங்களை அடிப்படையாகக் கொண்டு இது விடயத்தில் அணுகுவதும் ஏற்புடையதல்ல.

எனவேதான் இந்த விடயத்தை நிதானத்துடனும் தெளிந்த பார்வையுடனும் உணர்வுமேலீட்டான அணுகுமுறையில்லாமலும் கையாள்வது மிக முக்கியமானது. வரி செலுத்தி வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களும் வாழ்வாதாரத்துக்காக வியாபாரத்தை நடத்த முற்படுபவர்களும் நுகர்வோரும் பாதிக்கப்படாத வகையிலான முடிவுகள் எடுக்கப்படுவது முக்கியமானது. அப்படிப்பட்ட முடிவை எடுப்பது அவ்வளவு ஒன்றும் சுலபமானதல்ல என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே! எனினும் நிதானத்துடன் அதற்கு முயற்சிப்பது இன்றியமையாதது. சமூக அமைதிக்கும் அது மிக முக்கியமானது.



# திருப்பங்களுக்குக் குறைவில்லாத அரச தலைவருக்கான தேர்தல்

சேரலாதன்



அடுத்த அரசதலைவருக்கான தேர்தலில் மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக களமிறங்குவாரென அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான துமிந்த திஸநாயக்க அடித்துக் கூறியிருக்கிறார். தாம் அடுத்த தடவை அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடுவதில்லையென்ற மைத்திரிபால சிறிசேனாவின் அறிவிப்புக்கு எதிரானதாகவே துமிந்த வின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

### தெற்கில் முக்கிய கட்சிகள் இரண்டும் உறுதியற்ற நிலையில்

தென்பகுதி அரசியலில் ஏகப்பட்ட குழப்பங்கள் காணப்படுகின்றன. பிரதான கட்சிகள் இரண்டுக்குள்ளும் என்ன நடக்கின்றது என்பதே புரியவில்லை. தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது இது வெட்ட வெளிச்சமானது. சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவின் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர். இவர்கள் சமயம் வரும்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. அதேபோன்று, ஐ.தே. கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான போக்கை ஐக்கிய தேசியக் கட்சியினுள் சிலர் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அடுத்த அரச தலைவருக்கான தேர்தல் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டதாக அமையப்போகின்றது. கடந்த தடவை போன்று மைத்திரிபால சிறிசேனவை ரணில் ஆதரிப்பார் என எதிர்பார்க்க முடியாது. இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அவர் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களில் பலரும் அவரைத் தேர்தலில் போட்டியிட வற்புறுத்தி வருவதாகவும் தெரிகின்றது.

தமக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி பெற்றதால் ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கு திடீரென அதிகரித்து விட்டதைக் காணமுடிகின்றது. ரணிலைத் தலைமை அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகி விடுமாறு அரச தலைவர் மைத்திரிபால கேட்டுக் கொண்ட பின்னரும், அவ்வாறு செய்யாமல் துணிவுடன் தமக்கெதிரான தீர்மானத்தை எதிர்கொண்டு வெற்றி பெற்றமை, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மட்டுமன்றி முழு நாட்டிலுமே அவரது மதிப்பை உயர்த்திவிட்டது. இதேவேளை தீர்மானத் தைக் கொண்டுவந்த மகிந்த, மக்கள் தம்மை ஏளனமாகப் பார்க்கின்ற நிலை மைக்குத் தள்ளப்பட்டு விட்டார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எதிர்பாராமல் கிடைத்த வெற்றியையும், அதனால் கிடைத்த நன்மதிப்பையும் அவர் வீணடித்து விட்டதாகவே கருத முடிகின்றது. இதைவிட மூன்றாவது தடவையாகவும் அரச தலைவர் தேர்தலில் அவரால் போட்டியிட முடியாது என்பதால், அவரது சார்பில் அவருக்கு நம்பிக்கையான ஒருவர் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. கோத்தபாய ராஜபக்ச களத்தில் இறங்குவாரென எதிர்பார்ப்புக்கள் நிலவுகின்ற போதிலும், கடைசி நேரத்தில் இதில் மாற்றம் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் இலங்கை அரசியல், குழம்பிய குட்டையின் நிலையில் காணப்படுவதால் எதனையும் உறுதியாகக் கூற முடியவில்லை.

> அடுத்த அரச தலைவருக்கான தேர்தல் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டதாக அமையப்போகின்றது. கடந்த தடவை போன்று மைத்திரிபால சிறிசேனவை ரணில் ஆதரிப்பார் என எதிர்பார்க்க முடியாது. இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அவர் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களில் பலரும் அவரைத் தேர்தலில் போட்டியிட வற்புறுத்தி வருவதாகவும் தெரிகின்றது.

### அடுத்த அரச தலைவருக்கான தேர்தலில் பலமுனைப் போட்டிகளை எதிர்பார்க்க முடியும்

இங்கு சுதந்திரக் கட்சியும், ஐக்கியதேசியக்கட்சியும் இணைந்து ஆட்சியை நடத்துவதாகக் கூறப்படுகின்றபோதிலும், உண்மையான ஐக்கியத்தை இங்கு காண முடியவில்லை. இழுபறி நிலையைத் தான் இங்கு காண முடிகின்றது. இந்த நிலையில் அடுத்த அரச தலைவருக்கான தேர்தலில் பலமுனைப்போட்டி இடம்பெறும் என்ற ஊகத்தை மறுத்துரைக்க முடியாதுள் ளது. சிறுபான்மை இனத்தவர்களும் களத்தில் இறங்கக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றது. முன்னர் ஒருமுறை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த குமார். பொன்னம்பலம் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டமை நினைவுக்கு வருகின்றது. தமிழர்களே அவருக்கு வாக்களிக்க முன்வராமையால் சுமார் ஒரு இலட்சத்துக்கும் சற்று அதிகமான வாக்குகளையே அவரால் பெறமுடிந்தது. இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் நிராகரிக்கப்பட்டவை போக எஞ்சுபவற்றில் 50 வீதத்துக்குச் சமனான வாக்குகளைப் பெறுகின்ற ஒருவரே அரச தலைவராக முடியும். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் அரச தலைவராகி விடக்கூடாது என்பதற்காகவே அரசமைப்பில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் தேர்தலில் வெற்றியை ஈட்டிக் கொள்ள முடியும். கடந்த தடவை இதுதான் நடந்தது. சிறு பான்மையின மக்களின் வாக்குகளே மைத்திரிபால சிரிசேனவை அரச தலைவராக்கியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

### அரச தலைவர் தேர்தலின் வெற்றிதோல்வி இம்முறையும் சிறுபான்மைத் தமிழ் மக்களது கைகளிலேயே

இந்த தடவையும் தென்பகுதியைச்சேர்ந்தவர்கள் பலமுனைப் போட்டியில் இறங்கினால், சிறுபான்மை மக்களின் உதவியை அவர்கள் நாடவேண்டிய நிலை உருவாகும். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கின்ற உதவி தமிழ் மக்களிடமிருந்து கிடைக்குமா? என்பது சந்தேகமானதே. ஏனென்றால் கடந்த தடவை மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து ஏமாந்து போனவர்கள் மீண்டும் அதே தவறைப் புரிவதற்கு முன்வர மாட்டார்கள். ரணில் விக்கிரமசிங்ககூட தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தாததால், அவருக்கும் தமிழர்களது ஆதரவு கிடைக்கப்போவதில்லை.

மகிந்த தரப்பிலிருந்து வேட்பாளராக எவர் நிறுத்தப்பட்டாலும், அவரையும் நிராகரிப்பதற்குத் தமிழர்கள் தயங்க மாட்டார்கள். இதனால் கடந்த 2005 ஆம் ஆண்டு நிகழ்ந்தது போன்று மீண்டும் நிகழக்கூடுமென எதிர்பார்க்க முடியும். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது எதிர்வரும் அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் திருப்பங்கள் பல நிறைந்த தொன்றாகவே அமையப் போகின்றது.

■ இந்துமதி

# தோற்றுப்போயுள்ள நிலையில் தமிழர் அரசியல்

தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களது இன்றைய நிலைப்பாட்டை நோக்கும்போது அழுவதா? அல்லது சிரிப்பதா? என்று தெரியவில்லை. தத்தமது பதவிகளைக் காப்பாற்றுவதற்காகவும், சலுகைகளைப் பெறுவதற்காகவும் எதையும் செய்வதற்கும் தாம் தயாரென்பதை அவர்கள் நிரூபித்து வருகின்றார்கள்.

**உள்ளூராட்சி மன்றங்களது அதிகாரத்தைக் கைப்பற்றக் கூட்டுச்சேர்வதை சீரணிக்க இயலாத நிலையில் தமிழ் மக்கள்**

உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மைப் பலம் கிடைக்காததால், தம்மால் ஒரு காலத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட தரப்பினர்களுடன் கூட்டுச் சேர்ந்து கூட்டமைப்பினர் ஆட்சியமைத்தமை தமிழர் பகுதியில் இடம் பெற்றுள்ளது. ஆரம்பத்தில்மக்களால் இதை நம்பவே முடிய வில்லை. ஏதோ அருவருக்கத்தக்க ஒன்றைப் பார்ப்பது போன்றே இதைப் பார்த்தனர். எந்த வகையிலும் இதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அரசியல் கட்சியின் தலைவரொருவர் இதையொரு வெட்கம் கெட்ட செயலென எள்ளி நகையாடியிருந்தார். இன்று அதே வெட்கம் கெட்ட செயலை அவர் வவுனியாவில் நிறைவேற்றி வைத்தமையைக் கேள்வியுற்றபோது எமக்கு வெட்கமாக உள்ளது. அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே ஜனநாயக ரீதியான அரசியலை மேற்கொள்வதற்கும், மக்களின் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றி வைப்பதற்குமே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆனால் அரசியல்வாதிகள் தமது நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்பட்டுக்கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. மக்களை இவர்கள் ஒரு பொருட்டாக மதிப்பதாகவே தெரியவில்லை. தாங்கள் செய்வதையெல்லாம். பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற பாணியில் அவர்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் தமிழ் அரசியல் வாதிகளின் உண்மையான நிலைப்பாட்டைத் துகிலுரித்துக் காட்டிவிட்டது என்றே கூற வேண்டும். இந்த விடயத்தில் ஒட்டு மொத்தத் தமிழ் அரசியல்வாதிகளிடம் வேறுபாடு எதனையும் காண முடியவில்லை. எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்ற நிலைதான் இங்கு காணப்படுகின்றது.

**தமிழ்த் தேசியம், தமிழ்த் தாயகம் என்ற இதுவரை கால முழக்கங்கள் போலிக் கூச்சல்கள் தானா?**

தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம் என்றெல்லாம் கூறி மக்களை ஏமாற்றி வருகின்ற இவர்கள், தென்னிலங்கைக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைத்ததும், அந்தக் கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு உதவியதும் ஏற்றுக் கொள்ளத்தக்க செயல்களெனத் தெரியவில்லை. தமிழர் பிரதேசங்களில் தேசியக் கட்சிகள் என அழைக்கப்படும் தென்னிலங்கையைச் சேர்ந்த பேரினவாதக் கட்சிகளுக்கு இவர்கள் அரசியல் கதவுகளைத் திறந்து விட்டுள்ளமை எதிர்காலத்தில் மிகப் பெரிய அனர்த்தங்களுக்கு வழி கோலப் போகின்றது.

தென்னிலங்கைக் கட்சிகளை நம்புகின்ற இவர்கள், தமக்குள் ஒருவரையொருவர் நம்ப முன்வரவில்லை. வெவ்வேறு திசைகளில் , குறுகிய சுய இலாப நோக்குடன் பயணிக்கும் இவர்கள், இனியாவது தமக்குள் ஐக்கியத்தைப் பேணுவார்களென எதிர்பார்க்க முடியாது. இலட்சியத்துக்காக வேற்றுமை உணர்வை வளர்ப்பவர்கள் என்றோ ஒருநாள் ஒன்று சேர்ந்து விடுவார்கள். ஆனால் பதவிக்காகச் சண்டையிபவர்கள் ஒருபோதுமே ஐக்கியப்பட மாட்டார்கள். இனவாதிகள் தமிழ் அரசியலைக் குழப்புவதையே குறியாகக்கொண்டு இயங்கி வருகின்றனர். தமிழர்களைத் தனித்தன்மையுடன் இயங்கவிடக் கூடாதென்பதே இவர்களது கபடநோக்கமாகும். உலகின் மிகச் சிறந்த போராளி அமைப்பான விடுதலைப் புலிகளைப் பிளவு படவைத்து, தமிழர் போராட்டத்தை அழித்தொழித்த அவர்களுக்கு, தமிழ் அரசியல் வாதிகளிடையே பிளவை ஏற்படுத்துவது பெரிய விடயமாக இருக்காது .அதைத் தான் நாம் தற்போது பார்த்துக்கொண்டிருக்கின்றோம். வவுனியா வடக்கு, வட மாகாணத்தின்எல்லை மாவட்டங்களில் ஒன்றாகும். இங்கு தமிழர்களின் இனப்பரம்பலை வீழ்ச்சியுறச் செய்வதற்கான முயற்சிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. இதற்கேற்றாற்போன்று சிங்களக்குடியேற்றங்கள் அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதைத் தடுப்பதற்கு எமது தமிழ் அரசியல் வாதிகளால் முடியவில்லை. வெறும் கூச்சல் போடுவதற்கு மட்டுமே இவர்களால் முடிகின்றது. உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க்கட்சிகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கா ததை தேசியக் கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளன.

**வவுனியா நகரசபை நிர்வாகம் கூட்டமைப்புக்குக் கிட்டாதமை இனவாதிகளுக்கு மகிழ்ச்சியே**

வவுனியா நகர சபையின் தவிசாளராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா நகர சபையில் வெறும் மூன்றே மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப் ஆட்சியைக்கைப்பற்றியமை விநோதமானதொரு செயலாகும். 8 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டமைப்பினால் இதை வேடிக்கை பார்க்க மட்டுமே முடிந்துள்ளது. ஈ.பி.டி.பி, றிசாத் அணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த அணி, ஐக்கிய தேசியக் கட்சி யின் ஒரு பகுதி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதால், ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்தவிசாளர்கதிரையில்அமர்ந்து கொண்டார். இனவாதிகளுக்கு இதுவொரு உவப்பான செய்தியாக அமைந்து விட்டது. கூட்டமைப்பை வீழ்த்திவிட்டால், தமது பயணத்துக்கான பாதை திறக்கப்பட்டு விடுமென இவர்கள் நம்புவதால் கூட்டமைப்பின் தோல்வியை அவர்கள் கொண்டாடவே செய்வார்கள். அது மட்டுமல்லாது, வெண்கலச் செட்டி குளம் பிரதேச சபையை சுதந்திரக்கட்சி கைப்பற்றியமையும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டது. தமிழர் அரசியல் என்பது மக்களை ஏமாற்றுகின்ற ஒன்றாகவே மாறியுள்ளது. தமிழர்கள் எதிர் கொண்டு வருகின்ற அவலங்களையும், எதிர்காலத்தில் நிகழப்போகும் அபாயத்தையும், தமிழ் அரசியல்வாதிகள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. இந்த நிலை நீடிக்குமானால் தமிழர்களின் எதிர்காலமே இருள் சூழ்ந்ததாக மாறிவிடும். ■



## ஆசிரியருக்கான கடிதம்

### முக்கிய சந்திகளில் வாகனங்களது வேகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

தற்போது அதிகமான வாகனச் சாரதிகள் சாரதி இருக்கையில் ஏறி உட்கார்ந்ததும் தாங்களே ஊருக்கு ராஜா என்று நினைத்துக்கொண்டு, வீதி யால் பயணிக்கும் பிற வாகனங்களையும், பாதசாரிகளையும் கவனிக்காமல், வேகமாகத் தமது வாகனங்களைச் செலுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது. பல முக்கிய சந்திகளில் இதைத் தடுக்க வீதிச் சமிக்ஞை விளக்குகளை யும், வீதித் தடுப்பு அணைகளையும் அமைத்து வாகனங்களது வேகத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், சரசாலை கனகன்புளியடிச் சந்தியும் ஒரு முக்கியமான, ஐந்து வீதிகள் ஒன்றிணையும் ஒரு சந்தியாகும். இந்த நிலையில் பல தடவைகள் வாகனச் சாரதிகள் தமது வாகனங்களை வேகமாகச் செலுத்தியதால் அந்தச் சந்திப் பகுதியில் பல்வேறு விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

இப்படிப் பலதடவைகள், ஏன் இன்றும்கூட வாகனங்களை வேகமாகச் செலுத்துவதால் வீதியைக் கடப்போர் பயப்பீதியுடன் கடக்க வேண்டியுள்ளது. எனவே இந்த கனகன்புளியடிச் சந்திப் பகுதியில் வீதியில் பயணிக்கும் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் வீதி தடுப்பு அணைகளைப் போட்டோ அல்லது வீதிச் சமிக்ஞை விளக்கைப் பொருத்தியோ போக்குவரத்தை ஒழுங்காக்குவீர்களா?

இந்தச் சந்தியில் அடிக்கடி நின்று வாகனங்களைப் பரிசோதிக்கும் போக்குவரத்துப் பொலிஸார் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த அக்கறையில்லாமல் இருக்கிறார்கள்.

எனவே வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு விபத்துக்கள் ஏற்படாது தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*த. யோகராசா, சரசாலை*

### நாங்கள் பட்டுத் தெளிந்தவர்கள்

'புது விளக்குமாறு நன்றாகக் கூட்டும்' என்பது முதுமொழி. அண்மைய உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சபைகளின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட தரப்பினர்களில் பலர் அரசியலுக்குப் புது முகங்கள்.

அதனால்தானோ என்னமோ, பிரதேச அபிவிருத்தி தொடர்பாக ஏதோ ஏதோவெல்லாவற்றையும் நிறைவேற்றி வைக்கப்போவதாக வாயடித்து வருகிறார்கள். முன்னைய சபைகளது உறுப்பினர்களும் இப்படித்தான் சவடால் பேச்சுப் பேசி காலத்தை கடத்தியதை நாம் மறந்துவிடவில்லை. எனவே உங்கள் சாதனைகளை வாய்வீச்சில் காட்டாமல், செய்கையில் காட்டுமாறு அன்புடன் கோரி நிற்கிறேன்.

*இ. பரஞ்சோதி, கோப்பாய்*

அன்ரனி பீற்றர்



# வெற்றி, தோல்விகள் நிரந்தர முடிவுகளல்ல

உலகம் தோன்றிய காலம் முதல் தொடர் இயங்கு சக்தியுடன் செயற்பட்டுக் கொண்டிருப்பது சூரிய சக்தியே. மற்றவைகள் எல்லாம் காலத்துக்கு உட்பட்டவையே. இவ்வாறுதான் மானிடவாழ்வும் பல எழுச்சிகள், வீழ்ச்சிகள், வெற்றிகள், தோல்விகள், நன்மைகள், தீமைகள், சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், மகிழ்ச்சிகள் நிறைந்தவைகளாகவே இருக்கின்ற நிலைகளை நாம் நோக்கலாம். எனவே வெற்றிகள், தோல்விகள் என்பன நிலையான முடிவுகள் அல்ல. முயன்று கொண்டு இருப்பவர் தோற்காமல் வென்று கொண்டும் இருப்பர். அவதானமுடன் செயற்பட்டால் ஏறிச் செல்லலாம். அவதானமின்றேல் இடறி விழவே நேரிடும். அனைத்துக்கும், அனைவருக்கும் இது பொருந்தும். நேற்றைய வெற்றிகள் இன்றைய தோல்விகளாகவும், இன்றைய தோல்விகள் நாளைய வெற்றிகளாகவும் அமைவதும் முயற்சியின் தன்மையிலே தங்கியுள்ளது. ஒருவரின் வெற்றிக்கு பலர் தேவைப்படுகின்றார்கள். வெற்றி என்பதும் தோல்வி என்பதும் ஒரு தற்காலிக நிலையே. வெற்றி நீடிக்க வேண்டுமானால் திட்டமிடலுடன் கூடிய தொடர் முயற்சியும் செயற்பாடும் மேற்பார்வையும் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

### ஊக்கமும் ஒற்றுமையுமே உயர்வைத் தரவல்லவை

வெற்றியால் விளைந்தவைகளை விட தோல்விகள் தந்த படிப்பினைகளால் வெற்றி கொள்ளப்பட்டவைகள்தான் அதிகம். வென்றுவிட்டோம் என்று இருந்துவிட்டால் விழுந்து விட சந்தர்ப்பங்கள் பலவுள்ளன. தோற்றுவிட்டோம் என்று துவண்டு விடாமல், முயற்சி செய்தால் வெற்றி வாய்ப்புக்கள் கதவைத் தட்டிக் கொண்டே இருக்கும். எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலையில் இருந்து தாழ்ந்து விட எவரும் நினைப்பதில்லை. உயர்த்திட வழிகளை ஊக்கமுடன் முன்னெடுத்தால் உயர்வை யாராலும் தடுத்திடவும் முடியாது.

### உயர்வான எதிர்பார்ப்புக்களை முன்வைத்தல் மிக அவசியம்

பயணிக்கும் பாதையில் பயணத்தை வலுப்படுத்தவே எல்லோரும் பயணிக்கின்றோம். வலுப்படுத்தியவன் வளமாக வாழுகின்றான். வலுவற்றவன் பின்னடைந்து விடுகின்றான். வெற்றிதோல்விக்கு காரணமாக இருப்பவை இவ்வாறான செயற்பாடுகளே. தோல்விகள் அனுபவங்களை ஏற்படுத்தவில்லையென்றால், நாம் எப்பொழுதும் கீழ்நிலையிலேதான் இருப்போம். எம்முடைய சிந்தனை எப்பொழுதும் ஒருபடி உயர்ந்ததாகவே இருக்க வேண்டும்.

> “ நேற்றைய வெற்றிகள் இன்றைய தோல்விகளாகவும், இன்றைய தோல்விகள் நாளைய வெற்றிகளாகவும் அமைவதும் முயற்சியின் தன்மையிலே தங்கியுள்ளது. ஒருவரின் வெற்றிக்கு பலர் தேவைப்படுகின்றார்கள். வெற்றி என்பதும் தோல்வி என்பதும் ஒரு தற்காலிக நிலையே.

## வரலாற்றில் இன்றைய தினம் 21.04.2018

1506 - யூதர்களென சந்தேகிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரம் பேர் போர்த்துக்கலில் படுகொலை செய்யப்பட்டனர்.

1792 - மத்திய ஈராக்கில் சுமார் 3 ஆயிரம் வரையிலான குடிமக்கள் ஆயுதக் குழுவொன்றால் கொலை செய்யப்பட்டனர்.

1989 - சீனாவின் சீர்திருத்தத் தலைவர் ஹீ யூபாங்கை நினைவு கூருவதற்காக சீனத் தலைநகர் பீஜிங்கில் சுமார் ஒரு லட்சம் வரையிலான மாணவர்கள் தினன்மன சதுக்கத்தில் ஒன்று கூடினர்.

2004 - ஈராக்கிய நகர் பஸ்ராவில் ஐந்து தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் 74 பேர் சாவடைய 160 பேர் காயமுற்றனர்.

2017 - காணிகளை விடுவித்தால் நல்லிணக்கம் உருவாகுமென கூட்டமைப்பிடம் யாழ். கட்டளைத் தளபதி கூறினார்.

2017 - யாழ். குடா நாட்டு காணி விடுவிப்பில் இராணுவம் நழுவல் போக்கு. கூட்டம் முடிவேதுமின்றி நிறைவடைந்தது.

2012 - நெதர்லாந்தின் ஆம்ஸ்ரெர்டாம் நகரில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதியதில் ஆயிரத்து 660 பேர் காயமுற்றனர்.



**நாளை**

**22.04.2018**

ஞாயிற்றுக்கிழமை

**சித்திரை 09**

திதி: ஸப்தமி மு.இ. 06.40 வரை
நட்சத்திரம்: பூநர்பூசம் மு.இ. 8.25 வரை
சுபநேரம்: 09.01–10.31 வரை
ராகுகாலம்: 04.31–06.01 வரை




## தலைமைத்துவத்துக்கு தகுதி மிக அவசியம்

தமிழர்களின் தலைமைத்துவம் தொடர்பாகப் பலரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஒரு சிலர் உள்மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு அதை நியாயப்படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

பிரபாகரன் இருக்கும் வரையில் தமிழர்களின் தலைவராக அவரே மதிக்கப்பட்டார். போற்றப்பட்டார். தமது இனத்தின் மீதான அவரது பற்றும், உறுதியான கொள்கைகளும், எவருக்கும் அஞ்சாத மனத்துணிவும் அவரை தமிழினத்தின் தலைவராக உயர்த்தி வைத்தன. நீண்ட காலமாக இடம்பெற்ற போராட்டத்தில் அவர் இழந்தமை ஏராளம். தமது குடும்பத்தினரையே அவர் இழந்தார். உறவுகளை இழந்தார். பாசத்துடன் வளர்த்தெடுக்கப்பட்ட போராளிகளை இழந்தார். காடுகளிலும், பதுங்கு குழிகளிலும் அவரது வாழ்க்கை கழிந்தது. நிம்மதியான தூக்கம் கூட அவரை அனுகவில்லை. எந்த நேரமும் எதிரிகளுடான போர் தொடர்பாகவே அவர் சிந்தித்தார். திட்டங்களை வகுத்தார். கள முனையில் வியூகங்களை வகுத்தார். பல வெற்றிகளையும் ஈட்டிக் கொண்டார். அவர் அனுபவித்த வேதனைகள் ஏராளம். ஆனாலும் எவராலும் அவரை விலைகொடுத்து வாங்க முடியவில்லை. அனைவராலும் போற்றுதற்குரிய தலைவராக அவர் உயர்ந்து நின்றார்.

இங்குள்ள சிலர் தமது இனத்தின் துன்பங்களில் துளியும் பங்கு கொள்ளாமல் சுகபோக வாழ்க்கை வாழ்ந்துவிட்டு பதவிச் சுகத்தை அனுபவிப்பதற்காக மட்டுமே தமிழர் தலைமைத்துவம் தொடர்பான சர்ச்சைகளை ஊக்குவிக்கும் வகையில் நடந்து கொள்வது நல்லதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பது தலைமைத்துவத்துக்குப் பொருத்தமான ஒன்றல்ல. பிளவுபட்டிருப்பவர்களை ஒன்று சேர்த்து வைப்பதற்கு தமது பதவிகளைக் கூடத் துறந்து தியாகம் செய்வதற்குக் கூடத் தயங்காத எண்ணப்பாங்கு உண்மையான தலைமைத்துவத்திடம் அமைந்திருத்தல் வேண்டும்.

கடந்த காலச் செயற்பாடுகளை எடைபோட்டு நேர்மையான தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். வெறும் உணர்ச்சி வேகத்தில் அவர்கள் எடுக்கின்ற முடிவுகள் தவறானவையாக மாறிவிடும்.

# வடக்கில் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில்

# இணைந்து பணியாற்றும் இளையோரின் வெற்றிக்கதைகள்

**ரசியப்பிரியா உதயகுமார்.**

கதை 4

உலகச் சுழற்சிக்கோட்பாடு எப்படி மாறாத ஒன்றோ அதுபோல மனித இனத்துக்கென சில எழுதப்படாத விதிமுறைகளை உலகம் பின்பற்றி வருகிறது. அவற்றை இன்றளவிலும் உலக ஏகாதிபத்யங்களாக இருந்தாலும் சரி அபிவிருத்தியில் பின்தங்கிய ஏழ்மை நாடுகளாக இருந்தாலும் சரி தவறாமல் பின்பற்றி வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் பெண் அடிமைத்தனம்.

என்னதான் பெண்கள் சரிநிகர் சமமானவர்கள், அவர்கள் இல்லாமல் பூமி இல்லை, என்னைப்பெற்றதும் பெண்தான் என்று மார்தட்டி மேடையில் பெண்ணியத்திற்கு ஆதரவாக ஆண்கள் முழக்கங்களை எழுப்பினாலும் மனதளவில் அவர்களும் பெண்களை சற்று கீழ்மைப்படுத்திப் பார்ப்பதை உணர முடிகிறது. இதற்கு உதாரணங்களாக அண்மையில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலைக் குறிப்பிடலாம். எவ்வளவு பின்புல அரசியல் இருந்தாலும் கூட ஹிலாரி கிளிண்டன் என்னும் பெண்மணி அமெரிக்காவின் ஜனாதிபதியாக வருவதை அங்குள்ள பெரும் அரசியல் தலைகளே ஏற்கவில்லை!

உலக அரசியலே இப்படி இருக்க சாதாரண வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் உள்ள பாலின ஏகாதிபத்தியக் கொள்கை எப்படி இருக்கும் என்பதை சிந்தித்துப்பாருங்கள். ஆனால் இலங்கை தேசத்தில் இத்தகைய எழுதப்படாத விதிமுறைகள் சற்று மரித்துப்போவதாகவே எண்ணம் தோன்றுகிறது. காரணம் இலங்கையின் முதல் பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க திகழ்ந்திருக்கிறார். சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் ஜொலித்திருக்கிறார். விளையாட்டில் சுசந்திக்கா ஜெயசிங்க சாதித்துக்காட்டி இருக்கிறார். இப்படி பெண்கள் சாதனை செய்து வரும் நாட்டில் மறைந்து நிற்கும் சில கோபுரங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் மறைந்து நின்ற பொற்கலசக் கோபுரம் ஒன்றைத்தான் இன்று அலச இருக்கிறது இந்தக் கட்டுரை.

வல்வெட்டித்துறை என்றாலே இலங்கையில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. யாழ் மாவட்டத்தின் வடகோடிக்கரையில் அமைந்துள்ள ஓர் மீனவக்கிராமத்தில் இருந்து தோன்றுகிறது இந்தப்பெண்மணியின் வரலாறு. கோவிந்தசாமி உதயகுமார், உதயகுமார் கிருஷ்ணவேணி தம்பதியினரின் மகளாகப்பிறந்த ரசியப்பிரியா உதயகுமார் எப்படி சாதித்தார்? அவரின் வெற்றிக்கான அடித்தளம் யார்? யாரெல்லாம் இவரின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்துள்ளனர். சமூகத்தில் இவர் எதிர்கொண்ட சவால்களும் அதன் வெற்றிகளும் என்ன? என்பது குறித்தும் அவருடன் கலந்துரையாடியதில் மனம் நெகிழ்ந்து எழுதத்தூண்டிய வரிகள் தான் இவ்வாழ்க்கைக் குறிப்பு.

வறுமைதான் இவர்களின் வசந்த வாசல் . அன்றாடம் வேலைக்கு போனால் மட்டுமே சாப்பிட முடியும் என்ற நிலையில் வாழ்க்கை விரைகிறது. படிப்பு மட்டும்தான் எதிர்காலத்தைத் தரமுடியும் என்பதை உணர்ந்த பெற்றோர் ரசியப்பிரியாவை உடுவில் பெண்கள் பாடசாலையில் சேர்த்து விடுகிறார்கள். வீட்டின் வறுமை காரணமாக 7 வயதில் இருந்தே விடுதியில் படிக்கும் நிலை ஏற்படுகிறது. சக நண்பர்களைப் போல வீட்டில் இருந்து அம்மாவின் அருகில் உறங்கி எழுந்து பாடசாலை விரையும் வாழ்க்கை மட்டும் கிடைக்கவில்லை. இருந்தாலும் நம்பிக்கைத் துடுப்பேந்தி தனக்கேற்றால் போல எப்போதாவது வாழ்க்கை மாறும் என்ற நம்பிக்கையில் விரைகிறார் இவர்.

தனது ஆரம்பக்கல்வியை உடுவில் பெண்கள் பாடசாலையில் தொடர்கிறார். விடுதி வாழ்க்கைதான் என்றாலும் அவ்வப்போது வந்து அன்போடு பார்த்து விட்டுச் செல்லும் அம்மா, வரும்போதெல்லாம் பலகாரம் வாங்கி வந்து முத்தமிட்டு கண்ணீர் மல்க விடைபெறும் அவரது அன்பு என்பன தன்னை கல்வி பொதுத்தர சதாரண பரீட்சை எழுதும் வரை திடகாத்திரமாக வைத்திருந்ததாக குறிப்பிடுகிறார். நல்ல பெறுபேறுகள் கிடைக்கவே அதே பாடசாலையில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்ததாகவும் இந்தக் காலம்தான் எனது எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகிறது என்பதைத் தீர்மானித்தாகவும் கூறுகிறார்.

உயர்கல்வி படிக்கும் போது குடும்பத்தின் தடுமாற்ற நிலையும் தனது அப்பாவின் குடியும் தன்னை சரியாக படிக்க விடாமலும் இரவில் தூங்க விடாமலும் செய்தது. இதனால் உயர் தரப்பரீட்சையில் பல்கலைக் கழகம் செல்லும் அளவுக்கு புள்ளிகளை எடுக்க முடியவில்லை என்று தனது வேதனையையும் கூறி நின்றார்.

ரசியப்பிரியாவின் தந்தை சிறந்த ஒரு தவில் வித்துவான். சிறுவயதில் இருந்தே தந்தையின் தவில் இசை கேட்க ஆலயங்களுக்கு விரைந்த ரசியப்பிரியாவுக்கு கர்னாடக சங்கீதத்தில் ஆர்வம் ஏற்படவே முறைப்படி அதனைக் கற்கிறார். இசை மீதான ஆர்வத்தால் கோவில்களில் பஜனை பாடுவது மற்றும் பாடசாலையில் நடைபெறும் பாட்டுப்போட்டிகளில் கலந்து கொள்வது என இருந்த ரசியப்பிரியாவுக்கு திடீரென நாடகத்தின் மீது அதிக ஆர்வம் பிறக்கிறது. கலைக்குடும்பத்தின் மரபணுவில் அது சார்ந்த கலைகள் ஒட்டி இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

பாடசாலையில் எங்கு நாடகம் நடித்தாலும் அதில் ரசியப்பிரியா முன்னிலை பெற்றிருப்பார். மேலும் கோட்ட மட்டம், வலயமட்டம் என்று எந்த மேடைகளிலும் தனது பங்களிப்பு கட்டாயம் இருக்கும் எனவும் மெய்சிலிர்க்கிறார்.

ஆசிரியர் ஆகவேண்டும் என்னும் நம்பிக்கையில் பாடசாலையில் பயின்ற ரசியப்பிரியாவுக்கு, உயர் கல்வி கற்று முடித்தவுடன் மருத்துவத் துறையில் இணைந்து செவிலியராக பணியாற்றும் வாய்ப்பு கிடைக்கிறது. வீடு சொல்லும்படியான பொருளாதார முன்னேற்றம் இல்லாமல் இருக்க அப்பாவின் மதுபானப் பழக்கமும் குடும்பத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கவே! தடுமாற்ற கோலத்தில் கிடைத்த செவிலியர் பணியை செய்து கொண்டு மாதம் ஏழாயிரம் சம்பளத்திற்கு வேலையில் இணைந்ததாகவும் ரசியப்பிரியா கூறும் போது தான் விரும்பிய துறையில் படிக்க முடியாமல் நிர்பந்தங்களினால் ஏதோ ஒரு வேலை செய்யும் இளைஞர்களின் நிலையில் உணர முடிந்தது.

இந்நிலையில் ரசியப்பிரியாவின் அப்பா திடீரென உடல்நிலை சரியில்லாமல் இறந்துபோக என்ன ஆகப்போகிறது என்று தெரியாமல் இருட்டில் சிக்கிய குழந்தையாக ஏங்க வேண்டிய சூழல் உருவாகிற்று. அப்போது, கூட நான் செய்த அந்த வேலை ஓரளவு அப்பாவின் இறுதிச் சடங்குகளை முடிப்பதற்கு உறுதுணையாக நின்றது. என்று வேதனையுடன் கூறினார்.

எங்கு பார்த்தாலும் அப்பாவின் ஞாபகங்களும் அவர் விட்டுச் சென்ற நினைவுகளும் துரத்த, இனி யாழ்ப்பாணத்தில் இருக்க வேண்டாம் கொஞ்ச நாளைக்கு கிளிநொச்சியில் உள்ள தங்களது சொந்த காணியில் வீடு கட்டி இருக்கலாம் என அம்மா முடிவெடுக்கிறார். இதற்கு ரசியப்பிரியாவும் உடன்படவே கிளிநொச்சி செல்வதற்காக பொருள்களை மூட்டை கட்டும் வேலையை இருவரும் தொடர்கிறார்கள்.

இந்த நேரத்தில் எதார்த்தமாக ரசியப்பிரியாவின் கையில் சிக்குகிறது ஒரு பத்திரிக்கை, அதில் யாழ்பாணத்தில் புதிதாக ஒரு பிரம்மாண்ட விடுதி திறக்கப்பட இருப்பதாகவும் அதில் பணிபுரிந்து உலகத்தரத்திலான பணியை மேற்கொள்வதற்கு விருந்தோம்பல் முகாமைத்துவம் பயில விருப்பம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் என அச்சிடப்பட்டு இருந்தது.

சரியான நேரத்தில் இந்த விளம்பரம் கண்ணுக்கு புலப்பட்டதாகவும் இதனை கற்பதால் கண்டிப்பாக குடும்ப நிலையை மாற்றிவிட முடியும் என்ற முடிவுக்கு வருகிறார் ரசியப்பிரியா. மேலும் இவ்விருப்பத்தை தனது அம்மாவிடமும் வெளிப்படுத்துகிறார்.

பெண்கள் இந்தத்துறையில் சாதிக்க முடியாது. ஒற்றைப்பிள்ளை உன்னை இங்கு வேலைக்கு அனுப்பி விட்டு எப்போது நீ வருவாய் என்று என்னால் காவல் காக்க முடியாது. உனக்கு இந்த வேலை தேவை இல்லை தயவுசெய்து இதனை விட்டுவிடு! என்று ரசியப்பிரியாவின் தாய் எச்சரித்து கிளிநொச்சி செல்வதற்கு ஆயத்தமாகிறார்.

எல்லாப் பக்கங்களும் மூடப்பட்டாலும் ஏதாவது ஒரு வகையில் கடவுள் வழிதிறப்பார். இதுதான் எனக்கு சரியான பாதை இதில் பயணித்தால் கண்டிப்பாக வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு தாயை வலிந்து உடன்பட வைத்து தனது எண்ணைத்தை நிறைவேற்ற முயல்கிறார்.

தனது மகளின் முடிவு சரியாகத்தான் இருக்கும் எப்படியாவது அவள் முன்னுக்கு வருவாள் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு தாயார் கிளிநொச்சி செல்லும் எண்ணத்தை மாற்றிக்கொள்கிறார்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் ரசியப்பிரியாவின் தாய் இடியப்பம் அவித்தல். தோசை, மற்றும் இட்லி போன்ற காலை உணவுகளை தயார் செய்வதில் தேர்ச்சி பெற்றவர் என்பதால் இதனை சிறு தொழிலாகவும் தனது ஜீவனோபாயத் தொழிலாகவும் மாற்றிக் கொண்டு உடனடியாக தொழிலில் இறங்குகிறார்.

இதற்குள் பத்திரிக்கையில் பிரசுரமான அறிவித்தலை பார்த்து அதற்கு விண்ணப்பித்து விட்டு தான் வேலை செய்த செவிலியர் பணியையும் கைவிடுகிறார் ரசியப்பிரியா. ஓய்வான நேரங்களில் அம்மாவுக்கு சமையலில் உதவி செய்வதால் இவருக்கும் சமையல் என்பது கைவந்த கலையாக மாறிப்போகிறது.

யாழில் புதிதாக காலூன்ற உள்ள ஜெட்விங்ஸ் குழுமம், தன்னார்வத் தொண்டு நிறுவனமான GIZ, மற்றும் காரைநகர் VTA நிறுவனத்துடன் இணைந்து விருந்தோம்பல் முகாமைத்துவம் சார்ந்த பயிற்சிகளை வழங்கவுள்ளது, இதற்கான நேர்முகத்தேர்வில் தாங்களும் கலந்து கொள்ளவும் என்ற அறிவித்தல் ரசியப்பிரியாவுக்கு கிட்டியவுடனே அதற்க்காக தன்னைத் தயாரித்து நேர்முகத்தேர்வில் தெரிவு பெற்று, பயிற்சி வகுப்புக்கு செல்கிறார்.

பயிற்சி நடைபெற்ற ஆறு மாதங்களில் விருந்தோம்பல் முகாமைத்துவம் என்றால் என்ன? அதனால் நீங்கள் பெறப் போகும் நன்மை என்ன? விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் உள்ள கிளைகள் என்ன? என்பன குறித்தும் அவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவது குறித்த பயிற்சிகளும் ரசியப்பிரியாவுக்கும் வழங்கப்பட்டது.

யாழ்பாணத்தில் ஒரு விநோத பழக்கம் உள்ளது. அவை உணவு விடுதிக்கு வேலைக்குச் செல்பவர்களை கேவலமாக பார்ப்பது மற்றும் அவர்களுடன் உரையாடும் போது ஏளனமாகவே பேசுவது என்பனவாகும். இந்நிலையில் இந்த சோதனைக்கு ரசியப்பிரியாவும் உள்ளாகிறார். அக்கம்பக்கத்தினர் ரசியப்பிரியாவை ஏளனமாக பேசியதோடு அவரது தாயிடமும் முறையிட்டு வேலைக்கு அனுப்பாமல் நிறுத்தி விடும்படியும் அறிவுறுத்தினர்.

பயிற்சி வகுப்புகள் நிறைவடையும் கட்டத்தில் எந்த துறையில் இவர்களை பணியமர்த்துவது என்பதற்கான பரீட்சை ஒன்று இடம் பெறுகிறது. அதில் நல்ல மதிப்பெண்ணைப் பெறுகிறார் ரசியப் பிரியா. மேலும் ஏற்கனவே தனக்கு சமையலில் ஆர்வம் உள்ளதால் தான் சமையல் செய்ய விரும்புவதாகவே பயிற்சியாளர் களிடம் தெரிவிக்கிறார் ரசியப்பிரியா.

ஆறுமாத பயிற்சியும் முடிவடைகிறது. இந்நிலையில் மேலதிக பயிற்சிக்காக ஜெட்விங்க்ஸ் நிறுவனத்தின் மற்றுமொரு கிளையான ஜால பகுதியில் அமைந்துள்ள தங்கும் விடுதிக்கு பயிற்சிக்கு செல்ல தயாராகும்படி கட்டளை வருகிறது. இதுவரை தமிழ் பகுதியைக் கடந்து வெளியே செல்லாத. தமிழ் மொழியத்தவிர வேறு மொழி தெரியாத ஒரு பெண்பிள்ளையை அவ்வளவு தூரத்துக்கு எப்படி அனுப்புவது என்று ரசியப்பிரியாவின் தாய் சிந்திக்கிறார்.

பெண்களுக்கான பாதுகாப்பு அங்கு எப்படி இருக்கும், யாரும் உடன் துணைக்கு வராமல் எப்படி அங்கு சென்று பயிற்சி பெறுவது என்று மனதுக்குள் ஆயிரம் குழப்பம் இருக்க, தான் செல்லும் பாதை சரிதான். எவ்வளவு பிரச்சினை வந்தாலும் எதிர்கொள்ள முடியும் என்ற தைரியத்தில் மேலதிக பயிற்சிக்கு விரைகிறார் ரசியப்பிரியா.

ஜால பகுதியில் சிங்களம் பேசும் மக்களுடன் இருந்து தனது வேலையை முறையாகப் பயில்கிறார் ஈற்றில் cold kitchen எனப்படும் குளிர்மையான பதார்த்தங்களை தயாரிக்கும் துறையில் தேர்ச்சி பெற்று அதனை சரியாக பயின்ற பூரண அனுபவத்துடன் யாழ்ப்பாணம் விரைகிறார் ரசியப்பிரியா.

2016 தை மாதம் 7ஆம் திகதி கோலாகலமாக திறக்கப்பட்ட ஜெட்விங்க்ஸ் யாழ்பாணம் கிளையில் தானும் ஓர் அங்கத்தவராக இணைந்து கொண்டு ஜெட்விங்க்ஸ் குடும்பத்தில் இணைந்து பயணிக்கிறார்.

**யாழ்பாணத்தில் மிகப்பெரிய விடுதியாக கருதப்படும் ஜெட்விங்க்சில் இணைந்ததன் பின் உங்களுடைய மனநிலை எவ்வாறு உள்ளது என வினவியபோது .**

ஆரம்பத்தில் மிகவும் பயந்தேன். உள்நாட்டவருக்கு உணவு சமைத்துக் கொடுப்பது, அவர்களுக்கு பணிவிடை செய்வது என்றால் பரவாயில்லை ஆனால் இது வெளிநாட்டவர் அதிகம் வந்து போகும் இடம், இதில் எப்படி என்னால் அவர்கள் மொழிக்கு ஏற்ப பதில் சொல்லி அவர்களின் நாவுக்கு ஏற்ப உணவு சமைப்பது என்ற எண்ணம் இருந்ததாகவும் குறிப்பிடுகிறார். ஏற்கனவே பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவும் இந்நாட்டில் எப்படி நான் மட்டும் பயமில்லாமல் பயணிப்பது என்ற ஆயிரம் கேள்விகள் இருந்ததாகவும், இருந்தாலும் போராடாமல் வாழ்க்கை கஸ்டம் என சொல்வது முட்டாள் தனம் எனவே போராடிப் பார்ப்போம், எனக்குள் இருக்கும் நம்பிக்கை நிச்சயம் என்னை வெற்றியாளராக மாற்றும் என்று முதல் அடியை எடுத்து வைத்தேன் இப்போது தைரியமாக காலூன்றி உள்ளேன் என முடிக்கிறார்.

**உங்களின் எதிர்கால இலட்சியம் தான் என்ன ?**

எனது தாய்வழிச் சொந்தங்கள் அனைவரும் வெளிநாட்டில் வசிக்கிறார்கள், அவர்களுக்கு எனது ஒருமாத சம்பளம் ஒருநாள் கூலிதான். அப்பா இறந்த பின்பு அனாதையாக கைவிடப்பட்ட நிலையில் எங்களை ஒரு நேரத்தில் கூட எட்டிப் பார்க்கவில்லை, ஏன் என்ன நடக்கிறது என்று கூட கேட்கவில்லை. எனவே இவர்களுக்கு முன்னால் நான் சந்தோசமாக எனது தாயுடன் வாழ்ந்து காட்ட வேண்டும். மேலும் இத்துறையின் மூலமாக நான் வெளிநாடு செல்லவேண்டும் அங்கு நல்ல அதியுயர்ந்த விடுதியில் பணியாற்றி எனது திறைமையையும் தகைமையையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். எனவே இதுதான் எனது இலட்சியம் எனக் குறிப்பிடுகிறார். மேலும் தனக்கு வெளிநாட்டில் உள்ள ஒருவரை பார்த்து திருமணம் செய்து அங்கு குடியேறுவதில் விருப்பமும் இல்லை என கூறுகிறார்.

**நீங்கள் பணிபுரியும் தளத்தில் விரும்பி செய்யும் வேலை அல்லது உணவு என்ன ?**

நான் செய்யும் அத்தனை வேலைகளையும் நேசிக்கிறேன், அதிலும் குறிப்பாக Plating செய்தல் என்பதுதான் எனக்கு மிகவும்பிடித்தது. Plating என்பது வாடிக்கையாளர் கேட்கின்ற குளிர் உணவு வகையை தயாரித்த பின் அதனை அழகாக அலங்கரிப்பது. இது ஒரு கலை என்றே சொல்லவேண்டும், உணவைப் பரிமாறும் போது, அதன் மணம் மட்டும் அவர்களை கவரக்கூடாது மாறாக உணவை தயாரித்து அலங்கரித்து அவர்களின் கையில் பரிமாறும் விதமும் தான் வாடிக்கையாளர்கள் மென்மேலும் இங்கு வரவும் உணவுகளை விரும்பி உண்ணவும் தூண்டவேண்டும் எனவும், எனவே தனக்கு இது பிடித்துள்ளதாகவும் சொல்கிறார்.

**பணியின் போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

முதலில் பதட்டம் என்பது தான் மிகப்பெரிய சவால், மேலும் சரியான நேரத்தில் இதனைச் சமைத்து கொடுக்க வேண்டும் என்கிற ஓர் எண்ணம் பதட்டத்தை தூண்டிவிடுகிறது. ஆரம்ப கட்டங்களில் குறிப்பிட்ட உணவுகள் தயாரிப்பதற்கு மட்டுமே அனுமதி இருந்தது. ஒரு வேலையைச் செய்ய ஆர்வம் இருந்தும் அதனைச் செய்யமுடியாமல் போகும் போது ஏற்படும் கஸ்டம் என்பது கொஞ்சம் மனதைச் சோர்வடைய வைத்தது. ஆனால் இப்போது அத்தகைய எந்த பிரச்சினையும் எனக்கு இல்லை என்னால் நினைத்த உணவை நினைத்த வடிவத்தில் அவர்களின் மனநிலைக்கு ஏற்றால் போல் அலங்கரித்துக் கொடுக்க முடிகிறது என்று கூறி மெல்லச்சிரித்தார்.

**இந்த துறையைத்தேர்வு செய்து அதில் தற்போது வெற்றி கண்டுள்ளீர்கள்! இவற்றின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்டது என்ன?**

நிறையவே கற்றுக் கொண்டுள்ளேன், எனக்கு முதல் யாரைப் பார்த்தாலும் அவர்களிடம் எப்படி அணுகுவது? எவ்வாறு பேசவேண்டும் என்பதில் பதற்றம் இருக்கும்! ஆனால் இப்போது அப்படி இல்லை என்னால் எந்த நாட்டவருடனும் சகஜமாக உரையாட முடியும். இப்போது எனது மொழி அறிவு அதிகமாகவே வளர்ந்து இருக்கிறது, என்னால் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளை பேசமுடியும். எனது ஆளுமையில் (Personality) மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சமூகம் என்னைப் பார்த்த விதத்தை அப்படியே தலைகீழாக மாற்றி இருக்கிறது இந்த வேலை. என்னுடைய பொருளாதார நிலையை உயர்த்தியிருக்கிறேன். இவற்றை என் வாழ்க்கையில் நான் பெற்ற பாடமாக பார்க்கிறேன், எனக்கூறினார்.

**பணி நேரங்கள் போக ஓய்வு நேரங்களில் என்ன செய்கிறீர்கள்?**

எனது நேரங்கள் இப்போது ஆரோக்கியமாக கழிகின்றன. எனக்கு இந்த துறை தவிர தையலில் கொஞ்சம் ஆர்வம் இருக்கிறது, எனவே துணிகளை வாங்கி விதம் விதமாக தைப்பதும் அம்மாவுக்கு சமையலில் உதவுவதும் எனது பொழுதுபோக்கு! இவை எல்லாவற்றுக் கும் மேலாக You Tube போன்ற வலைத்தளங்கள் ஊடாக எப்படி நவீன மேலைநாட்டு உணவுகளை சமைப்பது என்பது குறித்தும் தெரிந்து வைத்துள்ளேன்.

**இந்த துறையைத் தேர்ந்தெடுத்து படிக்க விரும்பும் மாணவர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

அதிகமாக சம்பாதிக்கக் கூடிய துறை என்றால் அது சமையல் துறை தான். ஆரம்பத்தில் சமூகத்தின் கருத்துக்களை உள்வாங்கி கௌரவம் பார்க்காதீர்கள் இந்த தொழிலை முழுமையாகக் கற்று விட்டால் உங்கள் சமூக மதிப்பு என்பது உங்களை விமர்சித்தவர்களை விட அதிக அளவில் உயரும். வாழ்நாள் முழுவதும் வேலை இருக்கும் . யாரையும் சார்ந்து இருக்க வேண்டிய சூழல் எப்போதும் ஏற்படாது. சுய தொழில் வாய்ப்புக்களைக் கூட இது ஏற்படுத்தித்தரும். வெளிநாடுகளில் சென்று பணிபுரிவதற்கு வாய்ப்புக்கள் கிட்டும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு இலகுவில் கிட்டும். பணிச்சுமை என்பது குறைவு, நல்ல நண்பர்களும் உயர்ந்த மனிதர்களின் நட்பும் கிட்டும் எனவே தயவு செய்து இளைஞர்கள் இத்துறையைத்தேர்வு செய்து படிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இவ்வாறு கேட்ட அத்தனை கேள்விகளுக்கும் தெளிவாகவும் நிதானமாகவும் பதிலளிக்கிறார் ரசியப்பிரியா. இந்த உலகில் நாம் எதையும் கொண்டு வரவில்லை. அதுபோல எதையும் கொண்டு செல்லப்போவதும் இல்லை, ஆனால் விட்டுச் செல்லலாம் , அதுவும் அவை அழியாத ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில் நமக்குள் தெளிவு வேண்டும். செல்வம் அழிந்து போகலாம் ஆனால் புகழ் அழியாது! அதற்கு சான்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரண மனிதர்களை நாம் அன்றாடம் வாழ்வில் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். அவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும் முயற்சியில் இன்று நாம் ரசியப்பிரியா என்னும் பறவையின் வரலாற்றை அலசி இருக்கிறோம். இப்பறவை தனது இலக்கை நோக்கி சரியான பாதையில் நேர்த்தியாக பயணிப்பது போல சரியான முடிவுகளை, சரியான நேரத்தில் எடுத்து வானம் வசப்பட முயற்சிப்போம்.

(யாவும் உண்மை)

வடக்கில் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில்
இணைந்து பணியாற்ற விரும்பும் இளையோர்கள் தொடர்பு
கொள்ள வேண்டிய இலக்கம்
தொ.பே: 021 4927 025

## மல்லாகத்தில் வீடு விற்பனைக்குண்டு

மல்லாகம் K.K.S. வீதியில் அமைந்துள்ள விசாலாட்சி வித்தியாசாலைக்குப் பின்புறமாக 20 ¾ பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உள்ளது. இந்தக் காணி தோட்டம் செய்யவோ அல்லது வேறு பாவனைக்கோ பயன்படுத்தலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்-** (CS/15824)(11.17)

**076 910 3773**

## விற்பனைக்கு

**Toyota Vios Silver Color car** விற்பனைக்குண்டு.

077 678 7905

## CAREER OPPORTUNITY

Are you a civil Engineer seeking new challenges with a reputed construction company? We welcome expression of interest from you to work on our Constuction sites in Northern Province

*Site Engineer*

- B.Sc in Civil Engineering with experience of 1 + years in building projects.
- Focus on cost, quality, planning with resence management in order to complete the project on time.
- Managing subordinates/ Labours and project execution

**Apply to : Sarukaya Construction(Pvt)Ltd.**
**No.09, Nanthavil Lane, Thavady, Jaffna.**
**Email: vacancynsc@gmail.com**

(CS 15853) (14.17)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள யப்பான் தயாரிப்பு "பிறதர்" ஆங்கிலத் தட்டச்சு இயந்திரமும் வெற்று சீமெந்துப்பைகளும் விற்பனைக்குண்டு.

**077 935 1923**

## உடன் விற்பனைக்கு

NPGO XXXX இலக்க Charly Motor Bike விற்பனைக்கு

**077 415 9507**

## தேவை

அளவெட்டியில் இயங்கும் பிரபல பலசரக்கு விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1. விற்பனை உதவியாளர் (பொருள்கள் வழங்குனர்)
2. பொருள்கள் பொதி செய்பவர் (இருபாலாரும்)

**076 401 3467**

## விற்பனைக்குண்டு

பந்தல் சேவைக்குரிய பந்தல்கள், கதிரைகள், மணவறை Set மற்றும் ஏனைய பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு.

**077 233 7998**

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் றோட், ஆறுகால் மடம் சகல வசதிகளுடன் புதிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 928 0767**

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள **புடைவைக் கடைக்கு** ஆண், பெண் வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம். (cs 15781) (13.17)

076 499 5010/ 077 074 8999

## கணக்கு உதவியாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள புடைவைக்கடைக்கு அனுபவம் வாய்ந்த கணக்கு உதவியாளர் தேவை. (CS 15841) (14.17)

**076 499 5010/ 077 074 8999**

## ஆங்கில ஆசிரியர் தேவை

நல்லூர், கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள வீட்டுக்கு வந்து அரச தொழில்புரிபவருக்குத் தனிப்பட்ட முறையில் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆங்கில இலக்கணத்தில் திறமையும், நல்ல அனுபவமுள்ள ஆங்கில ஆசிரியர் தேவை.

**077 433 7559** (CS/15835) (11.17)

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
### விலைமனு கேள்விக்கான அழைப்பு
### சுத்திகரிப்பு பொருள்களிற்கான பெறுகைகள்

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான. தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை விவரம் | கேள்வி பத்திர பணம் | வங்கி உத்தரவாத முறி |
|---|---|---|---|
| RDHS/CLE-ME/2018-2019 | சுத்திகரிப்பு பொருள்களுக்கான வழங்கல் சேவை | 500.00 | 10,000.00 |

* மேற்குறித்த பெறுகைக்கு மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணம் ரூபா 500/= உம், பாதுகாப்பு வைப்பு முறி ரூபா10.000/= ம் ஆகும்.

1. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 222 6253 அல்லது 021 222 2278/4557. ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேற்காட்டிய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 23.04.2018 தொடக்கம் 11.05.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் 14.05.2018 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.சமர்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில்விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
4. கிடைக்கபெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




"COOPLIFE இன் 2017 ஆம் ஆண்டிற்குரிய தேசிய ரீதியிலான விருது வழங்கும் விழா அண்மையில் கொழும்பு Shangrila ஹொட்டலில் நடைபெற்றது. இதில் யாழ். பிராந்தியம் 10 முதன்மையான விருதுகளைப் பெற்று சாதனைபடைத்தது. இதனைப் பெறுவதற்கு எம்மை சிறந்த முறையில் வழிநடத்திய எமது சிரேஸ்ர முகாமையாளர்

**திரு. பேனாட் அலன் கியூமர்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம் மேலும் எம்மை தொடர்ந்து வழிநடத்த வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**CoopLife அலுவலர்கள் யாழ்கிளை.**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்
### விலைமனுக் கேள்விக்கான அழைப்பு
### அழுக்குத்துணிச் சலவைகள் சேவைகளுக்கான பெறுகைகள் - 2018/ 2019

திணைக்கள பெறுகைக்கு தகுதியான. தகைமைவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோரப்படுகின்றது.

### வைத்தியசாலைகளுக்கான அழுக்குத்துணிச்சலவைகள் சேவை

| பெறுகை இல(01) | பிரிவு ரீதியாக வைத்தியசாலைகள் |
|---|---|
| H/LS/2018/01 | பருத்தித்துறை (அ) ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை (பகுதி 1), பிரதேச வைத்தியசாலைகள்:- வல்வெட்டித்துறை, மருதங்கேணி, அம்பன், கரவெட்டி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் பருத்தித்துறை. |
| H/LS/2018/02 | பருத்தித்துறை (ஆ) ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை (ப்குதி 11) |
| H/LS/2018/03 | சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேச வைத்தியசாலைகள்:- வரணி, கொடிகாமம், .ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் கைதடி |
| H/LS/2018/04 | ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை. |
| H/LS/2018/05 | தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை, பிரதேச வைத்தியசாலை:- அளவெட்டி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- இளவாலை,குரும்பசிட்டி |
| H/LS/2018/06 | கோப்பாய் பிரதேச வைத்தியசாலைகள்:- கோப்பாய், அச்சுவேலி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- புத்தூர், உரும்பிராய் |
| H/LS/2018/07 | சங்கானை பிரதேச வைத்தியசாலைகள்:- சங்கானை, வட்டுக்கோட்டை, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- வட்டுக்கோட்டை, தொல்புரம் |
| H/LS/2018/08 | சண்டிலிப்பாய் பிரதேச வைத்தியசாலைகள்:- பண்டத்தரிப்பு, மானிப்பாய் |
| H/LS/2018/09 | வேலணை பிரதேச வைத்தியசாலை வேலணை |
| H/LS/2018/10 | நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில் பிரதேச வைத்தியசாலைகள்:- கோண்டாவில், குருநகர், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள்:- கொக்குவில் சுன்னாகம்,இணுவில்,புன்னாலைக்கட்டுவன், உடுவில், ஏழாலை மற்றும் மார்பு நோய் சிகிச்சை நிலையம் பண்ணை. |

❋ ஒவ்வொரு பிரிவுக்கும் மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணம் ரூபா 300.00 ம் உத்தரவாத முறி ரூபா 3,000/= ம் செலுத்தப்பட வேண்டும்.

01. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
02. விலைக்கேள்விதாரர் தமது சேவையினை தடங்கலின்றி மேற்கொள்வதற்கு யாழ்மாவட்டத்தில் ஆகக்குறைந்தது கிளை நிறுவனமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
03. பெறுகைகளின் பிணைப்பொறுப்பு மேலே காட்டப்பட்டுள்ள தொகை செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021 222 2278/4557 Ext 20 ) யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடருந்து பெற்றுக்கொள்ளலாம்.
05. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் பெறுகைப்பத்திரங்களிற்கான விண்ணப்ப படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 23.04.2018 தொடக்கம் 11.05.2018 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி .தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
06. விலைக்கேள்விகள் 14.05.2018 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். "அழுக்குத்துணிச் சலவைகள் சேவை 2018/19, விண்ணப்பிக்கும் வைத்தியசாலை" போன்ற விபரங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
07. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
08. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன்**
**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.** (IN 6232) (14.17)



# மீண்டும் சிவகார்த்திகேயனுடன் இணைகிறார் யோகி பாபு

'இன்று நேற்று நாளை' இயக்குநர் ரவிக்குமாரின் அடுத்தப் படத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கிறார். இந்தப் படத்தில் ரகுல் பிரீத் சிங் நாயகியாக நடிக்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். பொதுவாக சிவகார்த்திகேயனின் படம் என்றாலே நகைச்சுவைக்குப் பஞ்சம் இருக்காது. அந்த வகையில் இந்தப் படத்தில் நகைச்சுவை கதாபாத்திரத்தில் யோகி பாபு நடிப்பதாக அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளனர் படக்குழுவினர். இவர் ஏற்கனவே மான் கராத்தே, காக்கி சட்டை, ரெமோ ஆகிய படங்களில் சிவகார்த்திகேயனுடன் இணைந்து நடித்துள்ளார். தற்போது நான்காவது முறையாக இணைகிறார். தவிர, விஜயின் தளபதி 67, அஜித்தின் விஸ்வாசம் ஆகிய படங்களிலும் யோகி பாபு நடித்துக் கொண்டிருக்கிறார்.

- பிரச்சினை என்னவென்றால், நேரம் இன்னும் இருப்பது என நினைப்பது...
- முடியும் என நம்புவதிலேயே பாதி தூரத்தைக் கடந்துவிடுகிறோம்.
- சூரியனின் ஒளிக்கீற்று மட்டுமே மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறார்கள் மழையில் நடனம் ஆடாதவர்கள்.
- அன்பின் முதல் கடமை செவிமடுத்தல்
- அமைதியில் கிடைக்கின்ற பதில்களில் பிறக்கின்றன தீர்வுகள்.
- சிரமமான கட்டங்களிலிருந்து போராடி வெளி வருவது சிறப்பான நாள்களை வரவேற்கவே.




வலையில் சிக்கிய மீன்கள்




## ஒரு சின்ன கதை

வட அமெரிக்காவில் ஒரு பறவை இனம் அழிந்துவந்தது. அதைப்பாதுகாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்தது.
அதற்காக உயிரியல் பூங்காவில் தனியாக ஒரு அறை அமைக்கப்பட்டுபாதுகாக்கப்பட்டது. அந்த பறவைக்கு தனி பாதுகாவலர், தனிஉணவுஅதற்குதேவையானஅனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. கோடை காலத்தைச் சமாளிக்க தனியாக குளிர் அறையும் அமைக்கப்பட்டது. பறவை இனம் பெருகியது. பின்னர் வெளி உலகில் சுதந்திரமாகபறக்கவிடப்பட்டன. அவற்றுக்கு தமது எதிரிகள் யார் என்று தெரியவில்லை. அதனால்
எதிரிகளுக்கு உணவானது. மின் கம்பங்களில்எப்படிஅமர்வதுஎன்றுதெரியவில்லை. பறவைகள் அழியத் தொடங்கின (எதிரிகளுக்குஉணவாகி, மின்கம்பங்களில்கருகி, வண்டிகளில்மோதியும்) எந்த இனம் அழிய கூடாது என்று முயற்சி எடுக்கப்பட்டதோ, அந்த இனம் அழிய காரணமானது.

**பிள்ளைகளை வெளி உலகத்தை தானாக உணர வழி விடுங்கள் நல்லது கெட்டதை தானாகக் கற்றுக் கொள்ளட்டும்.**





## இன்றைய நாள்

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் பொறுமை அவசியம். மிதமான பணவரவு இருக்கும். பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** நண்பர்களிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். உணவு விஷயத்தில் கவனம் அவசியம்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் கிடைக்கும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**கடகம்:** பிறர் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரம் மந்தமாக இயங்கும். சுமாரான அளவில் பணவரவு இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**சிங்கம்:** நல்ல எண்ணங்களால் உற்சாகமுடன் இருப்பீர். அன்றாடப் பணியில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி கிடைக்கும்.

**கன்னி:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். தொழிலில் விற்பனை மந்தமாக இருக்கும். இலாபம் சுமார். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி வந்து சேரும். உடலுக்கு சீரான ஓய்வு தேவை.

**துலாம்:** உங்களின் நலம் விரும்பியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமூகமாக இருக்கும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**விருச்சிகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் திட்டமிட்ட இலக்கை அடையும். சேமிப்பு கூடும். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**தனுசு:** அளவுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் சிறு குறுக்கீடு வந்து சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** செயலில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் நேரம் தவறாமை வேண்டும். சராசரி பணவரவு இருக்கும்.

**கும்பம்:** சமூக நலனில் ஈடுபாடு கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மீனம்:** முக்கியமான செயல் எளிதில் நிறைவேறும். தொழில் வியாபாரம் செழிக்க புதிய திட்டம் வகுப்பீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்

ஹோட்டலுக்கு போனா ஏன் 'ஆர்டர்' பண்ணி சாப்பிடுறோம் தெரியுமா?

ஏன்னா, வீட்ல எதையும் எம்மால ஆர்டர் பண்ண முடியாதில்ல!??



பணக்காரர்கள் நகை வாங்கி பெட்டியில் வைத்திருப்பர்!!

ஏழையோ கடையில் "வைத்து" இருப்பர்!!!

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | 3 | 2 | | 6 | 7 | 8 |
| | | 6 | | 9 | | | 2 | 3 |
| | | 2 | 8 | | | | | |
| | | | | | | 8 | | 5 |
| | 9 | | | | 5 | | | |
| 5 | | | 4 | | | | | |
| | | 5 | | | | | 3 | |
| | 7 | | | 3 | | | | 9 |
| | 4 | | | | | 7 | 8 | 2 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 6 | 7 | 1 | 4 | 3 | 2 | 8 |
| 2 | 7 | 3 | 8 | 5 | 9 | 1 | 4 | 6 |
| 8 | 1 | 4 | 2 | 3 | 6 | 7 | 5 | 9 |
| 9 | 6 | 7 | 4 | 2 | 8 | 5 | 1 | 3 |
| 1 | 2 | 5 | 3 | 9 | 7 | 6 | 8 | 4 |
| 4 | 3 | 8 | 1 | 6 | 5 | 9 | 7 | 2 |
| 3 | 5 | 1 | 6 | 8 | 2 | 4 | 9 | 7 |
| 7 | 8 | 9 | 5 | 4 | 3 | 2 | 6 | 1 |
| 6 | 4 | 2 | 9 | 7 | 1 | 8 | 3 | 5 |

நேற்றைய விடை



# நாளைக்கு நீ தலைகாட்டாதே!

விஜயநகர அரசை கிருஷ்ண தேவராயன் என்ற அரசன் ஆட்சி செய்கையில், அந்தக்காலத்தில் உலகப் புகழ் பெற்ற தென்னாலி ராமன் அவர் அவையில் அங்கம் வகித்தான். இவன் அரசனையும் அரசவையையும் அவ்வப்போது சிரிக்க வைத்து நேரத்தைச் சந்தோசமாகக் கழிக்க வைப்பான். சில வேளைகளில் சமய சந்தர்ப்பம் தெரியாமல் நகைச் சுவை புரிவதால் அரச நிர்வாகம் தடைப்படுவதும் உண்டு.

ஒரு நாள் முக்கியமான நிர்வாக வேலையில் அரசன் ஈடுபட வேண்டி இருந்தது. சமயம் அறியாது தென்னாலி நகைச் சுவைகளை உதிர்ப்பான் என்பதை அறிந்திருந்த அரசன் அவனிடம் நாளைக்கு நீ இந்தப் பக்கமே தலைகாட்டக் கூடாது. இது என் உத்தரவு" என்று கூறி அனுப்பினான். மறுநாளும் வந்தது. அரசன் அரசவைக்கு வந்தான். சபை மிகுந்த அமைதியாக இருந்தது. அரசனுக்கும் சந்தோஷம். பல முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான். எங்காவது தென்னாலிராமன் வந்து அமர்ந்து கொண்டு இருக்கிறானா என்று இடையிடையே சபையையும் கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்தான். "நல்ல வேளை தென்னாலிராமன் இங்கு இல்லை. அவன் இருந்திருந்தால் சபை இவ்வளவு அமைதியாக இருக்குமா? அவன் இல்லாதபடியினாலேதான் இவ்வளவு பணிகளைச் செய்ய முடிகிறது" என வாய் விட்டே கூறினான். சிறிது நேரம் கழிந்தது. திடீரெனச் சபையில் ஏதோ சலசலப்பு "என்ன? என்ன நடந்தது இப்போது?" என்று கேட்ட வண்ணம் சபையைச் சுற்றிப் பார்த்தான். அப்போது ஒரு பானையைத் தலையிலே கவிழ்த்து வைத்த வண்ணம் ஒரு உருவம் சபைக்குள் நுழைந்து கொண்டிருந்தது. எவரும் எது வித பதிலும் கூறவில்லை. அரசனுக்கு அது யாரெனப் புரிந்து விட்டது" மன்னனுக்கோ அளவிட முடியாத கோபம் ஏற்பட்டு விட்டது.

அரசன் "தென்னாலிராமா, நீ இன்று சபைக்கு வரக் கூடாது என்று நான் எவ்வளவு எடுத்துக் கூறினேன். கண்டித்தேன். நீ அதைக் கேட்கவில்லையே. இன்றும் உனது கோமாளித் தனத்தைத் தொடங்கி விட்டாயே!

என்ன இது, பதில் கூறு! என்று ஆவேசமாக சத்தமிட்டான். ஆனால் தென்னாலிராமனோ பயப்படவில்லை. இயல்பாகப் பதில் கூறத் தொடங்கினான்.

"அரசே நீங்கள் கூறியபடிதானே நடந்தேன். இம்மியளவு கூட உங்கள் ஆணையை நான் மீறவில்லை" என்றான். அரசனோ" என்ன! நான் கூறியபடி நீ நடந்தாயா? எப்படி? என்று கேட்டு முடிப்பதற்குள் தென்னாலிராமன் தொடர்ந்தான். "என் தலையை இன்று உங்களுக்குக் காட்டக் கூடாது என்று நீங்கள் தானே நேற்று எனக்குக் கூறினீர்கள். அதுதான் நான் பானையைக் கவிழ்த்துத் தலையை மறைத்துக்கொண்டு வந்தேன்" என்றான். இதைக் கேட்டதும் மன்னனுக்குக் கோபம் மறைந்து விட்டது. மன்னன் தென்னாலி ராமனின் தோற்றத்தைக் கண்டும், அவன் கூறிய பதிலைக் கேட்டும் வாய் விட்டே சிரித்து விட்டான். "சரி... சரி... இனிமேலும் உன்னுடன் வாதம் புரிய நான் தயாரில்லை. நான் என்ன சொன்னாலும் அதற்கு ஓர் அர்த்தம் கற்பித்து ஏதும் நகைச் சுவை புரிவாய். இப்போது ஒரு பக்கமாக அமைதியாக உட்கார்ந்து கொள் எனப் பணித்தான். அதன்பிறகு தனது பிரச்சினைகளை ஏனையோர்களுடன் ஆராய்ந்து முடிவுகளும் எடுத்தான்.

## சாதனை படைத்த இளைஞன்

அது ஒரு மார்கழி மாதம். நள்ளிரவு நேரம். ஐரோப்பா எங்கும் கடுங்குளிர். மனிதர்கள் எல்லோரும் குளிரால் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். அந்த இளைஞனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. வீட்டு மேல்மாடி அறையில் ஏதோ செய்து கொண்டிருந்தான்.

வீட்டில் எல்லோரும் நல்ல உறக்கத்தில் இருந்தனர். அந்த இளைஞன் மெதுவாகக் கீழே இறங்கி வந்தான். உறங்கிக் கொண்டிருக்கும் தாயருகே சென்றான். மெதுவாக அவரைத் தட்டி எழுப்பினான்.

" என்ன மகனே, நீ இன்னும் நித்திரை கொள்ளவில்லையா? தொந்தரவு செய்யாமல் போய் நித்திரைகொள். உன் அப்பா விழித்தால் உன்னை ஏசுவார்" என்று அந்த தாய் மெதுவாக மகனிடம் கூறினார்.


" அம்மா... அம்மா தயவு செய்து என்னோடு மாடி அறைக்குள் வாருங்கள். ஓர் அதிசயம் காட்டுகின்றேன். " என்று அவன் தாயைக் கெஞ்சி அழைத்தான். பின்னர் தாயாரை அழைத்துச் சென்று அறையின் ஒரு மூளையில் அமரச் செய்தான். தாயின் அருகே ஒரு மேசையை வைத்தான். அதில் ஏதோ கருவிகளை வைத்து மூடினான். பின்தான் ஒரு மூலையில் போய் நின்றான். கையில் ஒரு பொருளை வைத்திருந்தான்.

" அம்மா! கவனமாகக் கேளுங்கள் " என்று கூறித் தனது கையில் வைத்திருந்த பொருளை அழுத்தினான். என்ன ஆச்சரியம். அறையின் இன்னொரு மூலையில் மணி ஒலித்தது. இடையிலே எந்தக் கம்பித் தொடர்பும் இல்லை. தாயாருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மகனின் விடாமுயற்சி வெற்றி பெற்றது கண்டு மகனைக் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

மறுநாள் அவனது கண்டு பிடிப்பைப் பற்றி தனது கணவரிடம் அந்த இளைஞனது தாய் கூறினார். " எமது மகன் கம்பியில்லாமல் தந்தியனுப்பும் முறையைக் கண்டு பிடித்து விட்டான். நேற்றிரவு எனக்குச் செய்து காட்டினான் " என்றார்.

" உனக்குப் பைத்தியமா? " என்றார் இளைஞனது அப்பா. அவர் அதை நம்பவில்லை. மகன் இரண்டு தடவைகள் செய்து காட்டியும் அவர் அதை நம்பவில்லை. ஒரு வருடம் கழிந்ததும், ஒரு நாள் ஒரு மலையில் இருந்து இன்னொரு மலைக்கு கம்பியில்லாது அந்த ஒலியை அனுப்பினான் அந்த இளைஞன். அப்போது தான் அவனது தந்தை தனது மகனது கண்டு பிடிப்பை நம்பினார். பின்னர் அந்த இளைஞனை உலகமே வியந்தது. அந்த இளைஞன் தான் மார்க்கோனி. இவர்தான் கம்பியில்லாத் தந்தி, வானொலி ஆகியவற்றைக் கண்டுபிடித்தார். மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்ததால் உலகப் புகழ் பெற்றார். இன்று வானொலியைத் தெரியாதவர்கள் உலகிலே எவரும் கிடையாது. வானொலி மூலம் செய்திகளை உடனுக்குடன் அறியலாம். செய்திகள், பாடல்கள், நாடகங்கள் ஆகியவற்றைக் கேட்கலாம். போக்குவரத்து வசதி குறைந்த கிராமங்களுக்குக் கூட வானொலி, செய்திகளை எடுத்துச் செல்கிறது. அதனால் வானொலியைப் பொது மக்களின் நண்பன் என்பர்.





## காந்தித் தாத்தா

காந்தித் தாத்தா நம் தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா
சாந்த மூர்த்தி என்றென்றும்
சத்திய மூர்த்தி நம் தாத்தா

காலை மாலை எப்போதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலை இன்றி சிறு பொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்


கண்ணில் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் எம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்வுக்கும்
வழிகாட்டிடுவார் எம் தாத்தா

சத்தியம் பேசுதல் அவர்கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை





## வர்ணம் தீட்டுவோம்



## குரல் வளை

மூக்கிலிருந்து தொண்டை சற்றே சிக்கலான பிரதேசம். உணவுப் பாதை - காற்றுப் பாதை இரண்டும் சேர்ந்து பிரியும் இடம். தொண்டையிலிருந்து மூச்சுப் பாதை பிரியும் இடமே குரல்வளை. குரல் வளையின் மேலே ஒரு மூடி போன்ற பகுதியிருக்கும். அது உணவுக் கவளம் காற்றுப் பாதையை அடையாதபடி பாதுகாக்கும். தொண்டையிலிருந்து குரல்வளை வழியாக மூச்சுக் குழல் ஓடுகின்றது. குரல் வளையில் நிறைய குருத்தெலும்புகள் உள்ளன.

உங்களின் கழுத்துப் பகுதியில் உள்ளது குரல் வளை. சிலரில், குறிப்பாக ஆண்களில் பேசும் போதும், ஏதாவது விழுங்கும் போதும் கழுத்துப் பகுதியில் ஒரு புடைப்பு மேலும் கீழும் போய்ப் போய் வருமே. அது தான் குரல் வளை. குரல் வளையின் குருத்தெலும்பு தான் அவ்வாறு புடைப்பாகத் தெரியும். இதுவே ஆங்கிலத்தில் ' ஆதாம்ஸ் அப்பிள் ' (Adam's apple ) என்றழைக்கப்படும். நீங்கள் பேசுகிறீர்கள், பாடுகிறீர்கள் குரலெடுத்து என்னென்னமோ செய்கிறீர்கள். அந்தக் குரல் பிறக்கும் இடம் குரல்வளையே. குரல் வளையில் இரண்டு குரல் நாண்கள் உள்ளன. குரல் நாண்களில் ஏற்படும் அசைவுகளுக்கும் இறுக்கத்திற்கும் ஏற்ப குரல் ஒலியில் ஏற்றத்தாழ்வு மாற்றங்கள் ஏற்படும். கீச்சுக்குரல், கட்டைக்குரல், முனகல், முணுமுணுப்பு, கூப்பாடு ஆகிய யாவும் குரல் நாண் அசைவு களால் ஏற்படுகின்றன. அதனால் தான் குரல் வளைக்கு குரல் பெட்டி என்றும் பெயருண்டு.

# உலர் திராட்சையின் மருத்துவக் குணங்கள்

உலர் திராட்சையில் விட்டமின் பி, சி போலிக் அசிட், இரும்புச் சத்து, பொட்டாசியம், கல்சியம் உள்ளிட்ட சத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஒரு குவளை நீரில் பத்து உலர் திராட்சைகளை ஊற வைத்து. மறுநாள் காலையில் நீருடன் சேர்த்து உண்டால் சிறுநீரக தொற்று நோய்கள் குணமடையும். உலர் திராட்சைகளை நீரில் கொதிக்க வைத்து, அருந்தினால் குடற் புண்கள் குணமாகும். மற்றும் உடல் வெப்பம் தணிவதற்கு உலர்திராட்சைபெரிதும்பயன்படுகிறது. பாலில் உலர் திராட்சைகளைப் போட்டு காய்ச்சிக் குடித்தால் இதயத் துடிப்பு சீராகும்.

## கேப்பாபிலவு...

வினர் தண்ணீர் விசிறி தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கேப்பாபிலவு பகுதியில் நில மீட்புப் போராட்டம் நடத்தும் மக்கள் இன்றுடன் 420 ஆவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்கள் அமைத்துள்ளபோராட்டக் கொட்டகையில் இருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள வனவள பாதுகாப்பு பிரிவுக்குச் சொந்தமான தேக்கங் காடுகளே தீப் பற்றின என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-4,ரி3)

## மீனவர்கள்...

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து தொழில் செய்யும் மீனவர்களே மோதிக்கொண்டனர் என்று உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த செ.மரியநாயகம் (வயது-26), கி.டார்வின் (வயது-35), ஆ.றுயான் (வயது-29) ஆகியோரே காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் இருவரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி3)



சிவமயம்

## சிற்பனை முருகன் கோயில் விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம் - வேலணை சிற்பனை முருகன் கோயில்

காலம் - 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை

நேரம் - காலை 9.01 தொடக்கம் 10.31 வரையான சுப முகூர்த்த வேளை

தலைமை - திரு. க. இளங்கோவன் அவர்கள்

விடயம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நவதள இராஜகோபுரம் அமைவிடம் சம்பந்தமாக சிற்பனை முருகன் அடியார்களுடன் பரிபாலன சபையினரும் கலந்தாலோசனை செய்தல்!


அன்பர்களே இவ்வுன்னதமான எல்லோருக்கும் நன்மைகள் தந்து சிறப்புற வாழ்வதற்கு எம் பெருமானுடைய நவதள இராஜகோபுரம் அமைப்பதற்கு தங்களின் பரிபூரண ஒத்துழைப்பை நல்குமாறும் தவறாமல் நேர காலத் துடன் சமுகம் தந்து இப்பெரும் பணி சிறப்புற நடைபெறு வதற்கு ஒவ்வொரு அடியார்களின் உந்து சக்தியை வழங்குமாறும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

சிற்பனை,
வேலணை.

சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபையினர்.
வேலும் மயிலும் போற்றி

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் நல்லையா



யாழ்.செட்டித்தெரு நல்லூரைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நல்லையா நேற்று (20.04.2018) வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மாணிக்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னலஷ்மியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற அச்சேந்திரத்தின் அன்புச்சகோதரரும் மலேசியாவில் வாழும் மகேந்திரன், ரட்ணராஜா, மனோகரன், கோகிலா ,ஆனந்தன், திலகா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/33, செட்டித்தெரு.
நல்லூர்.
077 844 5951

தகவல்:
அச்சேந்திரம் ரவீந்திரன்
(மகன்)

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பு



தோற்றம்
1950.12.09

மறைவு
22.03.2018

கடந்த 22.03.2018 இறைபதம் அடைந்த

### மேரிஜசிந்தா லோகநாதன்

அவர்களின் நினைவுதினம் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சந்தை வீதி
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சந்திரா விஜயரட்ணம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.10.1947 | 18.04.2018 |

நல்லூர் மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா விஜயரட்ணம் (18.04.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு கனகாம்கபிகை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற திரு திருமதி புவனேஸ்வரன் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விஜயரட்ணத்தின் அன்புமனைவியும் தாரணி, பிரதீப், முகுந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் மயூரன் காலஞ்சென்ற சுமங்கலா மற்றும் மாதங்கி, சஞ்சயன் ஆகியோரின் பெரியம்மாவும் இந்திரா காலஞ்சென்ற சுபத்திரா மற்றும் சண்முகதாஸ், சித்திரா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரகு, சுமித்திரா, மதுரா, எல்கடி ஆகியோரின் அன்பு மாமியும் ஆகீஷன், துவாஷன் ,மானஸ்தி, ஜானுஸ்ரி, அனுஷ்கி, ஜர்விஷ், ஆலியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கொழும்பு கல்கிசை மகிந்த பாலரில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 32, சென்லோரன்ஸ் வீதி,
வெள்ளவத்தை.

தகவல்: குடும்பத்தினர்.
0777654 585 , 0777600 897

பிறப்பு
16 . 09 . 1940



இறப்பு
20 . 04 . 2018

### இராசையா இராசரெத்தினம்

(உரிமையாளர், இராசையா மருந்துக்கடை)

யாழ்ப்பாணம், நல்லூர் சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் இராசையா இராசரெத்தினம் நேற்று (20.04.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தங்கம்மா தம்பதியரின் அன்புமருமகனும் சோதிமலரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் இரத்தினபூபதி, இந்திராணி, இராமநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ரஜிதா, விஜிதா, இராஜசெழியன், ரஜனி, இராஜசேரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சித்தார்த்தர், பாஸ்கரன், மாலதி, தயானந்தன், ரீடா காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் ஸ்ரீவதனி, மகிந்தன், முகுந்தன் ஆகியோரின் அன்புமாமனாரும் இளங்கோ, இளஞ்சே, அனுஷியா ஆகியோரின் சிறியதந்தையும் குமரன், ரதிலக்ஷ்மி ஆகியோரின் பெரியதந்தையும் தியாகராசா, இராசரத்தினம் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் வசந்தி, தனபாலசிங்கம், இராஜரெட்னம் காலஞ்சென்ற வைத்தியநாதன் மற்றும் நாகேஸ்வரி, இராஜசிங்கம், குலசிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனரும் இந்துருஜன், பிரவீனன், பிரணவன், அஸ்வியா, தர்மிகன், தனுராம், அனிக்கா, ஆரணி, ஆரபிகா, Master சேரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.04.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் முத்திரைச்சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 633 , பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 111 831

## வேலையாள்கள் தேவை

U.S.Enterprises நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் தேவை.

- ★ கனரக வாகன சாரதி (கிளிநொச்சியில் வசிப்பவராக் இருத்தல் வேண்டும்)
- ★ காசு சேகரிப்பாளரும் உதவியாளரும் -Cash Collector and Labour
- ★ முச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம் கொண்டு சென்று விநியோகிப்பவர்.

Hotel இற்கான பதவி வெற்றிடங்கள்

- ★ Room boys (சிங்களம் பேசுவோர் விரும்பத்தக்கது)
- ★ Waiters
- ★ வயதெல்லை 18-35

மேற்படி பணி நிலைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 21.04.2018 அன்று முற்பகல் 10.00 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:- **U.S. Enterprises** A.V.Road, Jaffna. T.P: 021 722 3000

(CS 15866)(10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 . 12 . 1928



உதிர்வு 22 . 03 . 2018

### திருமதி நாகம்மா கனகசபாபதி - கட்டுவன்

திதி வெண்பா

ஏவிளம்பி ஆண்டிற் (கு) இசைபங் குனிமாதம்
பூர்வபக்க ஷஷ்டியிலே போயினாள் - சோர்வறியா
நாகம்மை யாக நமையாள வந்ததாய்
தேகம் பொய் என்று தெளிந்து.

நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி
கட்டுவன், தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி
மஞ்சத்தடி, இணுவில்.

க.தர்மநாயகம்,
க.கனகநாயகம்,
சிறி ஜெயகௌரி.

(CS15794)(11,17)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 27.03.2018 செவ்வாய்க்கிழமை இறைபதமெய்திய எங்கள் அன்புத் தாயார்

### திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் தாங்களும் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது தாயாரின் இறுதி நிகழ்வுகளில் நேரடியாக கலந்து கொண்டும் தொலைபேசி வாயிலாகவும் ஏனைய வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தவர்கள் மற்றும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகள் ஊடாக தங்கள் துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இவ் அழைப்பினை தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன் - தர்மலிங்கம் சித்தார்த்தன்)

"காமதேனு"
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(CS 15774)(14,17)

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 793

சீட்டிழுப்பு திகதி ▶ 2018.04.19 வியாழக்கிழமை

V 03 15 28 48

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,221,036/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

நீல நிற டிக்கட்டுகள் 2018.04.21ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## தவறிவிட்டது

இராசையா ஜனக்குமார் அகிய எனது தேசிய அடையாள அட்டை (இல-580202853 V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் மோட்டார் வாகன ஆவணங்கள் என்பன தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0773573 147 அல்லது 021 222 6290 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது அசோகா நகையகம், இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இதனை கண்டெடுத்து வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(CS 15865)(10)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 . 10 . 1932



இறப்பு 20 . 04 . 2010

### அமரர் கனகசபாபதி சிவசுப்பிரமணியம்

எட்டாண்டுகள் கடந்தாலும் அப்பா! உங்கள் எண்ணங்கள் ஓயவில்லை
ஆழ்கடலில் பொங்கி எழும் அலைபோல எம்மனதை ஈர்த்திழுத்துச் செல்கிறதே
இன்றல்ல என்றென்றும் எமது இறுதி மூச்சு உள்ளவரை
உங்கள் அறிவுரைகள் ஒவ்வொன்றும்
எம்மனதில் ஓயாமல் ஒலித்திருக்கும் அம்மை அப்பன் அடிநிழலில் அமைதியாக
வீற்றிருந்து உங்கள் ஆசிகளை வழங்குவீர்!

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தகுமாரி சோதிலிங்கம்



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சாந்தகுமாரி சோதிலிங்கம் கடந்த (17.04.2018) அகால மரணமடைந்தார்.

அன்னார் கஜந்தன், சாரங்கன், சுவஸ்திகா, அருணன், முகுந்தன், குமுதன், வினோதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கௌசிகா, யசோதரை, விஜயகாந்தன் ஆகியோரின் மாமியும் சிந்துஜா, அபிசா, வினுசாந், சுஜானி, பவிந்தன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

கடந்த 18.04.2018 புதன்கிழமை 25 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய மரண அறிவித்தலில் விடுபட்டுப்போன இந்தப் பெயர்களையும் சேர்த்து வாசிக்கவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது மாமியாராகிய

### சோதிலிங்கம் சாந்தகுமாரி

அவர்கள் 17.04.2018 அன்று அகால மரணமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மருமக்கள்,
(திநேஸ், அன்பழகன், வேனுஜன்)

(CS 15867)(10)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் சாரதாம்பிகை இரத்தினசிங்கம்



கடந்த 24.03.2018 சிவபதமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.04.2018 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை. குடும்பத்தினர்.

(CS 00450)(4,17)

## சாரதி தேவை

கொழும்பு, நுவரெலியா சென்று வர கனரக வாகன சாரதி தேவை.

தொடர்பு - 075 991 0060

## சமையல் வேலையாள் தேவை

கொழும்பில் இயங்கும் ஹொட்டலில் இடியப்பம், தோசை, இட்டலி, வடை தயாரிக்கக்கூடிய வேலையாள்கள் தேவை:

தொடர்பு - 075 991 0060

## தொலைந்துவிட்டது

வாகன அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப்பத்திரமும் கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.

பெயர் - வன்னியன் காளிராஜா
சம்புலிங்கம் சுதர்சன்

T.P : 076 886 8941, 077 239 2626

## மணமகள் தேவை

1988 இல் பிறந்த பூரம் நட்சத்திரம் 8 இல் செவ்வாய் கி.பா 103 உடைய சொந்தமாக நகைத்தொழில் செய்யும் மணமகனிக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு - 077 986 3089, 071 085 7114

## வேலையாள் தேவை

பிரபல கூல் பார் ஒன்றிற்கு ஐஸ்கிறீம் வேலை தெரிந்த ஒருவரும், உதவியாளரும் தேவை.

தொடர்பு - 077 728 3609

## தேவை

தமிழ், ஆங்கிலம், கணினி ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு - 077 557 1569

## தேவை

உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு மனைப்பொருளியல் கற்றவர்கள் தேவை.
(பெண்கள்)


தொடர்பு - 075 9789 226
075 9789 223

## வீடு வாடகைக்கு விடப்படும்

இல.383/148, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள 9 அறைகள், 4 குளியலறைகள், வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மாபிள் பதிக்கப்பட்டு குளிரூட்டி பொருத்தப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய அழகிய வடிவமைப்பு கொண்ட மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களின் அலுவலகங்களாகவும் விடுதியாகவும் பயன்படுத்தக்கூடியது.

077 350 1812

# கழுத்து வலிக்குத் தீர்வு



கழுத்துவலி என்பது வயதானவர்களுக்குத் தான் வரும் என்பதெல்லாம் கிடையாது. எந்த வயதினருக்கும் வரலாம். சிறுவர்களுக்கு கூட அதிக புத்தகங்கள் தூக்குவதனால், சரியான முறையில் உட்காராமல், குனிந்தபடியே படிப்பதனால் கழுத்து வலி ஏற்படும். பெரியவர்களுக்கு கழுத்துவலி வருவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. அப்படி வந்தால் அதனைப் பெரிது படுத்தாமல் ஏதாவது தைலம் வாங்கி தேய்த்துவிட்டு விட்டுவிடுகிறோம். ஆனால் அது முற்றிலும் தவறான ஒன்று. கழுத்து வலி எதனால் உண்டாகிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

எமது உடலில் மிக முக்கிய நரம்பு மையங்கள் கழுத்தில்தான் அமைந்துள்ளன. முதுகுத் தண்டு வட எலும்புகளும் இந்த பகுதியில்தான் தொடங்குகின்றன. அத்தகைய கழுத்து எலும்பின் மத்தியில் உள்ள சவ்வின் பெயர்தான் சர்வைகல் டிஸ்க். அதிலிருந்துதான் உடலுக்கு எல்லா நரம்புகளும் செல்கின்றன. கழுத்துக்கு அதிகமான வேலை கொடுக்கும் போது. அங்கிருக்கும் தசைகள் சோர்வுற்று சவ்வினை அழுத்தும்.

அதன் காரணமாக அந்த சவ்வு விலகுவதால் உண்டாகும் பிரச்சினைக்குப் பெயர்தான் சர்வைகல் ஸ்பான்டைலிட்டிஸ். பொதுவாக நாள் முழுவதும் கணினி முன்பாகவே அமர்ந்திருப்பவர்களுக்கு, சரியாக தலையணை வைத்து படுக்காமல் இருப்பவர்களுக்கு கழுத்து வலி வரும். தூங்கும்போது கைகளை தலைக்கு முட்டுக் கொடுத்து தூங்கினால் கைகளில் குருதி ஓட்டம் பாதித்து, அதனால் கழுத்திலுள்ள சவ்வுக்கும் குருதி ஓட்டத்தில் தடங்கல் உண்டாகும்.

இதனால் ஏற்படும் வலி மெல்ல கழுத்தில் ஆரம்பித்து பின் கை கால் என பரவி, அசாத்திய வலி தரும். அன்றாட வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் நிறைய பேர் இந்த கழுத்து வலியால் அவதிப்படுகிறார்கள். சூடான அல்லது குளிர்ச்சியான ஒத்தடம் கொடுக்கலாம்.

இந்த இரண்டு ஒத்தடங்களுமே தசைகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். இறுக்கத்தைப் போக்கும்.

தினமும் காலையில் எழுந்ததும், இரவு தூங்கும் முன்பும் ஒத்தடம் வைப்பது நல்ல நிவாரணம் தரும். பூண்டினை தினமும் வதக்கி சாப்பிட்டு வந்தால், கழுத்தில் ஏற்படும் வீக்கம் குறைந்து, எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இந்த ஸ்பாண்டிலைட்டிஸ் வலிக்கு சிறந்த தீர்வு கழுத்துக்கான உடற்பயிற்சிதான். அதிக நேரம் கணினி முன் அமர்பவர்கள் கட்டாயம் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

தோள்பட்டையை மேலே உயர்த்தி, மூச்சை நன்றாக இழுங்கள். ஒரு 10 நொடிகளுக்கு தம் பிடித்து தோள்பட்டையை உடனடியாக தொங்கவிடுவது போல் தளர்த்துங்கள். இவ்வாறு ஒரு 5 முறை செய்யுங்கள். இவ்வாறு தினமும் செய்வதனால் தசைகளுக்கு அதிக குருதி ஓட்டம் பாய்ந்து வலி நாளடைவில் குறையும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### யாழ்...

ணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கடந்த பேரவையில் ஒருவராக இருந்த சிங்கள உறுப்பினர் எண்ணிக்கை இந்தத் தடவை இருவராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய பேரவையில் 6 பேர் புதியவர்கள். ஏனைய 9 பேரும் கடந்த பேரவையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள். பேராசிரியர் சிவயோகநாதன், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர்ஜெயதேவ உயங்கொட, வண.ஜெரோ செல்வநாயகம், எஸ்.விஷ்ணுகாந்தன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் பி.ஈஸ்வரதாசன் ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனோசேகரம், எந்திரி டி.கே.பி.யூ.குணதிலக, மருத்துவர் பூ.லக்ஸ்மன், பேராசிரியர் எஸ்.சிவசேகரம், பேராசிரியர் எஸ்.எச்.ஹிஸ்புல்லா, அரச தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், கலாநிதிஆறு. திருமுருகன், வி.கனகசபாபதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் மீளவும் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர்.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்களாக இருந்த பின்னர் பேரவை உறுப்பினர்களாகவும் இருந்தவர்களை மீண்டும் நியமிக்கக்கூடாது என்ற கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டது. அதன்படி சிலர் முன்னைய வருடங்களைப் போன்று இந்த முறை அத்தகையவர்கள் நியமிக்கப்படவில்லை'' என்று துணைவேந்தர்தெரிவித்தார்.

பேரவையின் அமர்வு எதிர்வரும் மே 12ஆம் திகதி நடத்தப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-4,105)

### நுங்கு...

யாழ்ப்பாணம், ஏப். 21

'ஹெரோயின்' போதைப் பொருள் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் நல்லூரடியில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று உத்தரவிட்டது.

நுங்கு விற்றவரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர். யாழ்ப்பாணம் பதில் நீதிவானிடம் முற்படுத்தினர். எனினும் அவர் குற்றச்சாட்டை மறுத்தார். தான் நுங்கு விற்கும் இடத்துக்கு அருகில் முச்சக்கரவண்டிக்குக் கீழே இருந்து சுருட்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டனர் என்றும் அதனைக் ஹெரோயின் என்றும் அதனை நானே வைத்திருந்தேன் என்றும் குற்றஞ்சாட்டினர் என்றும் நீதிமன்றில் தெரிவித்தார். எனினும் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (உ-4)

## 2 ஆம் ஆண்டுநினைவஞ்சலி

பிறப்பு 17.08.1948

இறப்பு 12.05.2016



**கதிராமு பத்மநாதன்**

ஆண்டுகள் இரண்டோடிச் சென்றாலும் எம் நினைவோடு என்றும் வாழும் கண்கண்ட தெய்வமே உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்தனை செய்கின்றோம்.

Chavakachcheri (Canada) — மனைவி, பிள்ளைகள்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 20.04.2018 | வெற்றி வாரம் 2282 | வர்ணம் சிவப்பு
கடகம் — வெற்றி இலக்கங்கள் 10 11 16 52
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 57, 33, 204/=
2018.04.22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

வெள்ளிக்கிழமை நியத ஜய — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் : 660 | வர்ணம் : நீலம் | திகதி : 2018.04.20
வெற்றி இலக்கங்கள் 31 50 62 42 — ஆங்கில எழுத்து G
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 13,792,956/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 279 | வர்ணம் : செம்மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2018.04.20
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 77,529,548/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் E 34 36 51 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 228 | வர்ணம் : செம்மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2018.04.20
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,357,435/-
வெற்றி இலக்கங்கள் 06 42 55 75 — ஆங்கில எழுத்து C
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி சண்முகம்



தோற்றம் 07.02.1930 — மறைவு 18.04.2018

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி சண்முகம் (18.04.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்புமகனும் பொன்னம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் தெய்வேந்திரராசா, சற்குணதேவி, கந்தசாமி, கிருபைமலர், செல்வராணி, கிருஸ்ணராஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகைள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மூளாய் மத்தி . சுழிபுரம்.
077 722 5330

### திருமதி அன்னப்பிள்ளை தியாகராசா



பிறப்பு 10.12.1960 — இறப்பு 19.04.2018

நித்தியவெட்டை முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், பேராலை பளைய்ய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை தியாகராசா (19.04.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காீலஞ்சென்ற கந்தையா் தெய்வானை தம்பதியரின் அன்புமகளும் காசிப்பிள்ளை தியாகராஜாவின் அன்புமனைவியும் மயூரன் (கல்வி சாரா ஊழியர் கிளி/ புலோப்பளை R.C.T.MS துவாரகா(லண்டன்), ஜனனி ஆகியோரின் அன்புத்தாயும் சுசீலனின் அன்பு மாமியும் வியாவின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பேராலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 4152 323

## இன்றைய மோதல்கள்

**திருவள்ளுவர் கழகத்தின் தாச்சித் தொடரின் ஆட்டம்**

தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி பாரதி அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழக கூடைப்பந்தாட்டத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



**கே.ஸி.ஸி.ஸி. வி.க. துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மதியம் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்துத் தொடர்**

கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக் குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மோதவுள்ளது.

(ம-23)



# வவு. தமிழ் மத்தி. அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம். ஏப். 21

கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று மாலை இடம்பெற்ற ஆட்டமொன்றில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை இந்த ஆட்டம் இடம்பெற்றது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது. 50:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது. (ம-23)

## விமலேந்திரன் ஞாபகார்த்த மேசைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம். ஏப். 21

அமரர் பொ.வி. விமலேந்திரநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான மேசைப்பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. இன்று பெண்களுக்கான போட்டியும்; நாளை ஆண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது. 8, 10, 12, 15, 18, 21 வயதின் கீழ் என இருபாலாருக்குமாக போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

(ம-422)



# சுப்பர்றாங்– சேவியர் இறுதியில் இன்று பலப்பரீட்சை





யாழ்ப்பாணம். ஏப். 21

கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் சுப்பர் றாங் அணியை எதிர்த்து சேவியர் அணி இன்று மோதவுள்ளது.

சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே ஆட்டம் நடைபெறவுள்ளது. இன்றைய இறுதிநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலாளர் கனகசபாபதி கனகேஸ்வரன், சிறப்பு விருந்தின ராக கட்டைக்காடு சென். மேரிஸ் ஆலய பங்குததந்தை அ.மைக்டொனால்ட், அருட்தந்தை யா.றமேஸ், மதிப்புறு விருந்தினர்களாக கட்டைக்காடு முள்ளியான் கிராம சேவகர் ச.காந்தரூபனன், பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் இ.பரமதாஸ், வடமாரட்சி கிழக்கு கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ப.நியூட்டன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23-422)

# உஸ்பெகிஸ்தான் பறந்தார் ஆசிகா

யாழ்ப்பாணம், ஏப். 21

உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் இளையோருக்கான ஆசிய பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை ஆசிகாவும் இடம்பிடித்தார்.

இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதிவரை இந்தத் தொடர் இடம்பெறுகிறது. முதல் ஆறு இடங்களுக்குள் வரும் வீரர்கள், வீராங்கனைகள் இளையோர் ஒலிம்பிக் தொடருக்கும் தகுதிபெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-23)



# என்னை ஏலத்தில் எடுத்து ஐ.பி.எல்லை காப்பாற்றினார் சேவாக்

*சொல்கிறார் கெய்ல்*

“என்னை ஏலத்தில் எடுத்ததன் மூலம் ஐ.பி.எல். தொடரை சேவாக் காப்பாற்றினார்” என்று தெரிவித்தார் பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் கெய்ல்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பஞ்சாப், ஹைதராபாத் அணிகள் மோதின. கெய்ல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி சதம் கடந்தார். பஞ்சாப் அணியின் வெற்றிக்கு அவர் முக்கிய காரணமாக இருந்தார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கெய்ல் இவ்வாறு தெரிவித்தார்.

“என்னை ஏலத்தில் எடுத்து ஐ.பி.எல். ஆட்டங்களையும் அவற்றின் விறுவிறுப்புத் தன்மையையும் சேவாக் காப்பாற்றியுள்ளார். என்னால் இது போன்று தொடர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாட முடியும். அதிரடியாட்டத்தை வெளிப்படுத்துவதில் நான் உறுதியாக உள்ளேன்” என்றும் கெய்ல் தெரிவித்தார்.

கெய்ல் மீது போட்ட முதலீட்டுக்காக அவர் இரு ஆட்டங்களில் வெற்றிதேடிக் கொடுத்தாலே போதும் என்று சேவாக் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# கெய்லில் தனித்துவம் காண்கிறார் அஸ்வின்

“கெய்லின் ஆட்டத்தை எவராலும் பிரதி செய்ய இயலாது” என்று தெரிவித்தார் பஞ்சாப் அணியின் தலைவர் அஸ்வின்.

ஹைதராபாத்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அஸ்வின் இவ்வாறு தெரிவித்தார்.

“கெய்லின் ஆட்டம் தனித்துவம் வாய்ந்தது. அவரது ஆட்டத்தை எந்த வீரராலும் பிரதி செய்ய இயலாது. தனித்துமான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் கெய்ல் வல்லவர். அவர் இருப்பது எமது அணிக்குக் கூடுதல் பலம்” என்று அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)

# கூடிய விரைவில் நலம் பெறுவேன்

*நெய்மர் நம்பிக்கை*



“உலகக்கிண்ணத் தொடருக்குள் நிச்சயம் நலம்பெறுவேன்” என்று தெரிவித்தார் பிரேசில் அணியின் தலைவர் நெய்மர்.

ரஷ்யாவில் இன்னும் சில வாரங்களில் உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. பிரேசில் அணியின் தலைவர் நெய்மர் காயம் காரணமாக கட்டாய ஓய்வில் உள்ளார். இதனால் அவர் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், “உலகக்கிண்ணத் தொடரில் நிச்சயம் விளையாடுவேன்” என்று நம்பிக்கை தெரிவித்தார் நெய்மர்.

“காயம் மோசமானது தான். ஆனால் தற்போது ஓய்வு எடுத்து வருவதால் தேறி வருகிறேன். ரஷ்யாவில் ஜூன் மாதம் தொடங்கும் உலகக் கிண்ணத் தொடருக்குள் நான் முழுமையாகத் தயாராகி விடுவேன்” என்று நெய்மர் மேலும் தெரிவித்தார்.

உலகக்கிண்ணத் தொடருக்கான பிரேசில் அணியின் பயிற்சி முகாம் அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெறுகிறது. இந்த முகாமில் நெய்மர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# சென்னையின் ஆட்டங்கள் திட்டமிட்டபடி இடம்பெறும்

*மராட்டிய கிரிக்கெட் சங்கம் அறிவித்தது*

“சென்னை அணியின் ஆட்டங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெறும்” என்று அறிவித்தது மராட்டிய கிரிக்கெட் சங்கம்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு முறையாக மேற்கொள்வதற்காக காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படாதமையைக் கண்டித்து தமிழகத்தில் பரவலாகப் போராட்டம் நடத்தப்பட்டது. ஐ.பி.எல். ஆட்டங்கள் சென்னையில் நடத்தப்படக் கூடாது என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து ஐ.பி.எல். ஆட்டங்கள் சென்னையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு புனேக்குக் கொண்டு செல்லப்பட்டன. புனேயில் வறட்சி நிலவுவதால் மைதானப் பராமரிப்புக்கு அணைகளில் இருந்து தண்ணீர் எடுக்க மும்பை உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இதனால் புனேயிலும் சென்னை அணியின் ஆட்டங்கள் நடைபெறுவதில் சிக்கல் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்வாறிருக்க புனேயில் நடைபெறத் திட்டமிட்ட ஆட்டங்கள் அனைத்தும் மாற்றம் இல்லாமல் இடம்பெறும் என்று அறிவித்தது மராட்டிய கிரிக்கெட் சபை. (ம)







# வில்லியர்ஸிடம் அதிகளவு கற்றுக் கொண்டேன் என்கிறார் பெங்களூர் அணியின் விராட் கோக்லி

“தென்னாபிரிக்காவில் எவ்வாறு துடுப்பெடுத்தாடுவது என்பதை வில்லியர்ஸிடம் இருந்து கற்றுக்கொண்டேன்” என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.


இந்திய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. இந்தத் தொடரில் இந்திய அணியின் தலைவர் கோக்லி அரைச்சதம், சதம் என்று ஓட்டங்களைக் குவித்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தனது 'ரண்' வேட்டைக்குக் காரணம் வில்லியர்ஸே என்று தெரிவித்தார் கோக்லி.

“தென்னாபிரிக்கத் தொடரில் அவரிடமிருந்து நான் சில விடயங்களை துடுப்பாட்டத்தில் கற்றுக்கொண்டேன். அவரைப் பார்த்து சிறு மாற்றம் செய்து கொண்டேன். ஆனால் அதை அவரிடம் நான் இதுவரை வெளிப்படுத்தவில்லை. ஆம், தொடர் ஆரம்பிக்கும் முன்னர் தென்னாபிரிக்க மண்ணில் வில்லியர்ஸ் விளையாடும் காணொலிகளை ஆராய்ந்தேன். அப்போதுதான் தெரிந்தது அவர் தலை சாயவோ, அசையவோ இல்லை பந்தை எதிர்கொள்ளும் முன் அவரின் தலை நிலையாக இருந்தது. மட்டையை அவர் கீழே தட்டிக் கொண்டேயிருக்கவில்லை. அதைப்பார்த்து நானும் மட்டையை கீழே கொண்டு போய் தட்டித்தட்டிவிட்டு நிமிரும் பழகத்தை நிறுத்திக் கொண்டு நேராக நிமிர்ந்து பந்தைப் பார்க்கத் தொடங்கினேன். அதன் பிறகு எனக்கு ஓட்டங்கள் வந்தன” என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



# ராஜஸ்தானை வீழ்த்தி சென்னை மிரட்டல்



ஐ.பி.எல். தொடரில்நேற்று இரவுநடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸை 64 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றியைப் பதிவுசெய்தது சென்னை சுப்பர் கிங்ஸ். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. சென்னை அணியின் ஆரம்ப வீரர்களாக வற்சன் மற்றும் ராயிடு. 4.2 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது சென்னை அணி. அடுத்த பந்திலேயே முதலாவது இலக்குச் சரிவும் ஏற்பட்டது. 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராயிடு. வற்சனுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ரெய்னா. இருவரும் ரி-20 ஆட்டங்களுக்கு உரித்தான சராசரியில் சிறப்பாகவே துடுப்பெடுத்தாடினர். ஓட்டங்கள் கிடுகிடுவென்று உயர்ந்து வந்தன. 9.5 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது சென்னை. 28 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் வற்சன். அணி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ரெய்னா. டோனி, பில்லிங்ஸ் ஏமாற்றினர். எனினும் மறுமுனையில் வற்சன் அதிரடி காட்டிக் கொண்டிருந்தார். 51பந்துகளில்அவர்சதம்கடந்தார். பிராவோ கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்த முடிவில் 5 இலக்குகளை இழந்து 204 ஓட்டங்களைக் குவித்தது சென்னை. பந்துவீச்சில் கோபால் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களாக ரகானே மற்றும் கலீசன் இருவரும் களமிறங்கினர். அதிரடி வீரரான கலீசன் 7 ஓட்டங்களுடனும், மூன்றாம் நிலை வீரரான சாம்சன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ராஜஸ்தான் பின்னடைவைச் சந்தித்தது. ரகானே 16 ஓட்டங்களுடன் சாகரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் மத்திய வரிசையில் நிலைத்து நின்று 45 ஓட்டங்களைப் பெற்றார். இந்த 45 ஓட்டங்களுக்காக அவர் 37 பந்துகளை எதிர்கொண்டார். இலக்கு 200 ஓட்டங்களுக்கும் அதிகமாக உள்ள நிலையில் ஸ்ரோக்ஸின் இன்னிங்ஸ் நிச்சயம் பயனற்றதே. 12.5 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டவரான அவர் இன்னும் ஓர் ஆட்டத்திலேனும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. ராஜஸ்தான் 140 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 64 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ்.

(ம)

## குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை

நாள்கள்:- 16 ஆரம்பம்:-25.05.2018 யாத்திரீகர் :- 15

**மிகவும் புனிதமான யாத்திரை**

**செல்லும் இடங்கள் :- குஜராத்தில்:** பாவ்நகர். கடலுக்குள் பஞ்சலிங்கம். சோமநாதர். ஜோதிலிங்கம். தையூர். கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்).காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம். 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம். **காசி:** விஸ்வநாதர். விசாலாட்சி. அன்னபூரணி. காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம்.டெல்லி. தாஜ்மகால். குருசேத்திரம். **அலகாபாத்:** கங்கா. ஜமுனா. சரஸ்வதி. திருவேணி சங்கமம். வேறு இடங்களும் காணலாம். சீத்தா மடியும் காணலாம். **நேப்பாள்:** கோரப்பூர். லும்பினி. புத்தபிரான் பிறந்த இடம். **காத்மண்டு:**கமக்கயா. போக்ரா. சுயம்புநாதர். பெரியகுகை. ஜெல்நாராயணர். தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு. குச்சேஸ்வரர். பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை : இராமேஸ்வரம்:** நவபாஷாணம். திருப்புலானி. உத்திரகோசமங்கை. **மதுரை :-** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.


**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை**

விமானப் பயணச்சீட்டு 4. மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு. காப்பி. ரீ. குடிநீர். A/C வாகன வசதி. 2 பேருக்கு கட்டில் மெத்தை. வெஸ்ரன் கொமட். குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம். விருப்பமுடையவர்கள் உடன் பதிவு செய்யவும்.

**விஸ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
**No.59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு -11**
**T.P: 077 768 0102, 077 736 2154** (IN/)(11.17)

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவபாலசிங்கம் (லண்டன்பாலு)



பிறப்பு 1955.08.24 | இறப்பு 2018.04.18

வத்திராஜன் தெற்கு தாளையடியைப் பிறப்பிடமாகவும். அச்சுவேலி இடைக்காடு புதுவளவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாலசிங்கம் (லண்டன் பாலு) கடந்த (18.04.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா பரமேஸ்வரி(சிங்கப்பூர்)தம்பதியரின்அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் வள்ளி நாயகி யின் அன்புக்கணவரும் செந்தூர னின் (லண்டன்) அன்புத்தந்தையும் கார்த்திகா வின் (லண்டன்) அன்புமாமனாரும் கவியங்கா, சங்கீத் ஆகியோரின் அன்புப்பேரனும் சண்முகராசா (சண்முகம்), சிவலிங்கம் (சிவம்), ஞானேஸ்வரி (ஞானம்), சிவராசா (ராசா), மகேஸ்வரி (மகேஸ்), சிவசுப்பிரமணியம் (துரை), யோகேஸ்வரி (யோகம்), சிவசோதி (சோதி) , சறோஜா (பவா), ஜெகதீஸ்வரி (ஜெயா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வநாயகி, கமலாதேவி காலஞ்சென்ற தனலட்சுமி, வசந்தா ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமி காலஞ்சென்ற ராசதுரை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப10மணியளவில்அவரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக சாமித்திடல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**மனைவி (வள்ளிநாயகி), மகன் (செந்தூரன்)**
**சகோதரர்கள்**
**ரஞ்சி (077 086 7231), சிவம் (077 356 8783), சண்முகன் (077 8747143)**

**புதுவளவு இடைக்காடு, அச்சுவேலி.**

**டோமன் நாய் விற்பனைக்கு**

டோமன் இனவளர்ப்பு நாய் மற்றும் அதனை வளர்ப்பதற்கான கூடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 9599 364

**வாடகைக்குண்டு**

கிளிநொச்சி, கனகபுரம் 2ஆம் குறுக்கு வீதியில் அடிப்படை வசதிகள் அனைத்துமுள்ள விசாலமான உறுதியான கடைகள் வாடகைக்கு உண்டு. களஞ்சியமாகவோ. மொத்தவியாபார தலமாகவோ பயன்படுத்தலாம். (AKN 443)(04.17)

**077 760 4667/ 077 368 7143**

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**வேலை வாய்ப்பு**

இட்லி, தோசை செய்பவர், சமையல் உதவியாளர் மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும்.

**இடியப்பக்கடை மருதனார்மடம்**

**விற்பனைக்குண்டு**

- Celerio automatic கார் விற்பனைக்கு உண்டு.
- வேலணையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(CS 15826) (04.17)

**075 557 4444**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.